ஊர்ஜிதமற்ற தகவல்களை வைத்து புலனாய்வுப் பிரிவு செயற்படக் கூடாது 04

மேல்பார்வை

மீல்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට හඬක්
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 351 • 09 செப்டம்பர் 2016 வெள்ளிக்கிழமை • துல் ஹஜ் 1437 • விலை 40.00

மூனின் காலம் கடந்த பச்சாதாபம்

கேள்விக்குள்ளாகும் ஐ.நா.வின் மத்தியஸ்தம்

ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூனின் இலங்கை விஜயத்தின் போது முஸ்லிம் தரப்பினர் புற மொதுக்கப்பட்ட நிலையில், இலங்கை மீதான கரிசனையிலும் தாம் குறைவிட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்திருப்பது ஐ.நா.வின் மத்தியஸ்தப் போக்கில் சந்தேகத்தை வலுக்கச் செய்து வருகிறது.

இலங்கைக்கான அவரது விஜயத்தில் அவர் உரையாற்றிய போது, 1994 இல் ருவாண்டாவில் நடந்த படுகொலைகளின் போதும், சேர்பியாவில் நடந்த இனச் சுத்திகரிப்பின் போதும் அவை மீண்டும் நடக்கக் கூடாது என்றே நாங்கள் கருதினோம்.

இவை உள்நாட்டு விவகாரங்களாக இருந்தாலும் இவற்றில் எமது பொறுப்பும் இருக்கிறது என்பதை நாங்கள் காலங் கடந்து தான் உணர்ந்தோம். இலங்கை விடயத்திலும் இதனையே உணர்கிறோம் என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

சேர்பியாவில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப் பட்டனர். (பக்.13)

அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2016 - 2018 ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். அல்ஹாஜ் N.M. அமீன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்

தாஜுதீனின் உடல்பாகங்களும் மாயம் வீடியோவும் தெளிவில்லை

ரக்பி விளையாட்டு வீரர் வஸீம் தாஜுதீனின் கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான முக்கிய ஆதாரமாக இருந்த சீசீடீவி கமெரா பதிவுகள், அவரது உடல் பாகங்களின் தடயங்கள் எதுவும் விசாரணைக்குத் துணையாக அமையாத நிலை தோன்றியிருக்கிறது.

வசீம் தாஜுதீனைக் கொலை செய்ததை பதிவு செய்த சீசீடீவி கமரா பதிவுகளை பார்வையிடும் நுட்பம் இலங்கையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டு, அமெரிக்கா விலோ கனடாவிலோ இவற்றை தெளிவாகப் பார்க்கக் கூடிய (பக்.13)

எல்லை நிர்ணயம் 15 ஆம் திகதியுடன் முடிவு

(அனஸ் அப்பாஸ்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக புதிய எல்லைகளை நிர்ண யிக்கும் பணிகள் இம்மாதம் 15 ஆம் திகதியுடன் முழுமை யடைகின்றன என்றும், எல்லை நிர்ணயப் பணிகள் முடிவடைந்துள்ள பகுதிகளின் வரைபடங்களைத் தயாரிக்கும் பணிகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் தற்போது துரித கதியில் இடம் பெற்று வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர், 2016 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படவேண்டிய பெயர்கள் மற்றும் அகற்றப்படவேண்டிய பெயர்களை தெரிவு செய்யும் பணிகள் தற்போது முழுமையடைந்துள்ள நிலையில் அதில் பதியப்படாத பெயர்களை எதிர்வரும் செப். 28 வரை மாவட்ட (பக்.13)

விமான நிலையத்தில் மஹிந்த பரிசோதிக்கப்படுவதில்லை

சர்ச்சைக்குரிய மலேசிய விஜயம் உட்பட அண்மைக் காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணங்கள் அதிகரித்து வருகின்ற சூழலில், வெளிநாட்டுப் பயணங் களின் போது அவரது பயணப் பொதி கள் பரிசோதிக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (பக்.13)

மஹிந்தரின் வெளிநாட்டுப் பயணங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்

மலேசிய உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்ஸாரை திருப்பி அழைப்பதற்கு அரசாங்கம் எடுத்த முடிவினால் இரு நாட்டு உறவுகளில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இலங்கையின் உயர்ஸ் தானிகர் ஒருவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க மலேசிய அரசாங்கம் தவறி விட்டதாகவும், இது தொடர்பிலான முறையான விசாரணை ஒன்று நடத்தி முடிக்கப்படும் வரை தமது தூதுவரை திருப்பி அழைக்க முடிவு செய்திருப்பதாகவும் வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்தரின் வெளிநாட்டுப் பயணங்களின்போது அவரது ஆட்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். எனக்கு மலேஷியாவில் எதிர்ப்பு வரும் என்பது தெரியும். இதை அறிந்து கொண்டே நான் அங்கு சென்றேன் என மஹிந்த ராஜபக்ஷ இது பற்றிக் கூறும்போது தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர், மஹிந்த எங்கு சென்றாலும் அவருக்கு (பக்.13)

உள்ளூராட்சி எல்லை நிர்ணயம்

தெல்தோட்டை முஸ்லிம்களுக்கு அநீதி

(நஸீஹா ஹஸன்)

உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் மேற்கொள்ளும்போது தெல்தோட்டை வாழ் சிறுபான்மை மக்களுக்கு பாரிய அநீதி ஏற்படவுள்ளதாகவும் அதனால் இவ்விடயம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் கவனம் செலுத்துமாறும் வலியுறுத்தி தெல்தோட்டை சமூக அபிவிருத்தி ஒன்றியம் இரு தரப்புக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. (பக்.06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து செக்கன் கதைகள்

தம்பி நான் ஊர்ல கடை வச்சிருந்தேன். ஊருக்குள்ளே காசுக்கு விற்றதை விட கடனுக்குப் போனது தான் அதிகம். அதிலும் பெண்கள் தான் அதிகம்.

அவர்களின் வாசற் படி ஏறி கடன் கேட்டுப் போவேன். அதற்கு அவர்கள் சொல்லும் பதில்

'யாஹ். பொறுங்களேன். நாங்க என்ன ஊரை விட்டு ஓடவா போறோம்.'

ஆறு மாசம் கழித்துப் போனாலும் அதே பதில் தான் 'நாங்க என்ன ஊரை விட்டு ஓடவா போறோம். பொறுங்களென்'

வெட்கத்தோடு திரும்புவது தான் மிச்சம் என்று பெருமூச்சோடு முடித்த அவர் கடைசியாகச் சொன்னார்.

.'தம்பி! கடைசியா அவங்க யாரும் ஊர விட்டு ஓடல்ல. அங்க தான் இருக்காங்க.

ஆனா நான் தான் ஊர விட்டு கட்டாருக்கு ஓடி வந்துட்டேன்'

- அப்துர் ரஹ்மான்

'யாரும் எழும்பிப் போக வாணம். யாரும் எழும்பிப் போக வாணம்.. ஐந்தாறு அறிவித்தல்கள் தான். எல்லாரும் அப்பிடியே உக்காருங்க..'

என்ற கொஞ்சம் கண்டிப்பான குரலிலேயே ஜும்மாத் தொழுகையின் பின் அறிவிப்பு செய்யப் பட்டாலும், அதையும் தாண்டி வெளியே வந்தான் யாஸீன்.

வெளியில் வேனுக்குள் உம்மா நெஞ்சு வலியுடன் படுத்திருப்பது யாருக்குத் தெரியும். வேன் வைத்திய சாலையை நோக்கிப் பறந்தது.

- அன்சார் ஷியாம்

After A/Ls

Become a

4 Months

Certified Islamic Banker

-Lead your career in a progressing industry-

The Islamic Banking & Finance industry has been identified as one of the fastest growing sectors within the global economy. There is a great demand for professionals to serve this industry both locally and globally.

"Join the Islamic Finance journey with FGA to master the skills in your chosen field. I recommend FGA is the best place to qualify and develop your career in Islamic Banking & Finance"

Mohamed Ishrath, Amana Bank PLC

CISI ACCREDITED TRAINING PARTNER

FGA Registered with TVEC under P01/0709

CLASS COMMENCEMENT

Date : 18 - September - 2016

Time : 9.30 am - 10.30 am

JOB

Guaranteed Paid Internship of 3 months in leading Islamic Banks & Financial institutions in Sri Lanka.

RECOGNITION

This programme will lead to the Islamic Finance Qualification (IFQ) offered by CISI-UK.

EXEMPTION

this programe will offer exemption for Diploma in Islamic Banking & Finance (DIBF) offered by FGA.

Classes will be conducted in **Colombo, Nintavur & Kalmunai**

REGISTER NOW 077-7703567 077-4616710

First Global Academy (FGA) #4, Level 1, Collingwood Place, Colombo 06, Sri Lanka.

+94 11 7395090-3

www.firstglobalacademy.com

பெருநாளைக்கு ஹபாயா வாங்க முன்

உன் உடலின் மொழி பெயர்ப்புக் கருவி ஹபாயா... (அல்லாஹ் அருள் செய்தோரைத் தவிர மற்றோருக்கு,) Roll on ஐயும் தாண்டிய உன் Blue girl perfume கும்மென்று மூக்கையும் மூளையையும் துளைத்தது. Zeena வின் கணவனும் Farza வின் மச்சானும் நீ நடந்து சென்ற park road இளைஞர்களும் மிரண்டு பார்த்தனர்.

இறைச்சிக் கடை Faris நாநா முள்ளொன்றைக் கொத்துவதை விட்டு விட்டு உன்னைக் கொத்தினார் பார்வையால். நீ அவதானிக்க வில்லை, அவர் கண்களில் நெருப்புத் தெரித்தது. ஏனெனில் அவரொரு நல்லடியார்.

Threewheel park ஐ கடக்கும் போது 'அழகான நீச்சலுடையொன்று' என்று சொன்னது உனக்குத்தான். அவர்களால் முடிந்த படி இஸ்லாஹ் செய்தார்கள்.

துவேஷம் பேசித்திரிந்து கடைசியில் கலவரத்தின் போது முன்னின்று கடை எரித்த விமலதாச உன்னோடு மட்டும் அன்போடு சிரித்தான்.

அவர்களுக்கு வேண்டியது இஸ்லாம் சாக வேண்டும். நீ இறுகிய ஆடைக்குள் இஸ்லாத்தை மூச்சுத் திணற வைத்திருப்பதை அவன் கண்டு பிடித்து விட்டான். Tape இன்றியே அளக்கலாம் என்று சொன்னவன், உன் நண்பியின் அடுத்த வீட்டு, மூளை வளர்ச்சி குன்றிய shazran. சிறுவர்களும் பார்த்தனர், ஒரு முதியவரும் பார்த்தார். ஒரு நாயும் பார்த்தது மறையும் வரை உன்னையே பார்த்துக் கொண்டிருந்தானே அவன் ஒழுக்கமில்லாதவன் என்று அறியப்பட்டவன்.

இப்போது சந்தோசமா? எல்லோரும் பார்த்துவிட்டனர்.எல்லோர் மத்தியிலும் சலசலப்பு. உனது மணமும், மினுக்கமும் ஒய்யாரமும் மயக்கி விட்டது. மக்களை இப்பொழுது சந்தோசமா? நீ நடத்தை கெட்டவள் உன் ஆடை உடலோடு ஒட்டியிருந்தால் அது மணமணத்தால் நெஞ்சை சின்ன தொரு shawl மூடியிருந்தால் சந்தர்ப்பம் அடைந்தால் நடத்தை பிசகியும் சென்று விடுவாய் நீ சுவனத்து வாச த்திற்கும் தகுதியற்றவள். நானல்ல அண்ணல் எம் பெருமான் சொன்னது.

உன் பிலயார்ட் ஹபாயாவை இரண்டிஞ்சி மடித்துத் தைக்காவிடின் அல்லாஹ் உன்னை மறுமையில் பார்க்க மாட்டான். மையித்தின் அவ்ரத் கூட பார்க்கத் தடுக்கப்பட்டது, நெருங்கிய உறவினர்க்கும் கூடஉன் நிர்வாணத்தை ஊர் முழுதும் காட்டி அலைகிறாயே!..அல்லாஹ்வின் மீதாணையாக ஆடையணிந்தும் நிர்வாணிகளைக் கண்ட ஆத்திரத்தில் எழுதுகிறேன்.

-ஹுமதா கனூப்பார்

அது மட்டும் இந்தப் பள்ளியில நடக்காது. நான் ட்ரஸ்டி போர்ட் தலை வனாக இருக்கங் காட்டீம் இந்தப் பள் ளிக்கு பெண்கள் வார துக்குவுடமாட்டேன். அது பெரிய பித்துனா என்று கர்ச்சித்துக் கொண்டேபௌத்த, சிங்கள கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் தனது மூத்த மகளையும், மிசனரி சர்வதேச பாடசாலை யில் கற்கும் தனது இளைய மகளையும் பாடசாலையில் இறக்கி விட்டு வருவதற்காக காரை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தார் காஸிம் ஹாஜியார்.

- ரஸ்மி.

கண்டி மற்றும் திஹாரியில்

Diploma in Sales Management

- Indoor Sales
- Outdoor Sales
- Introduction to Business Management
- Human Resource Management (HRM)
- Marketing Management
- Business Communication
- Personal Development as a Manager

Duration 4 Months

பாடநெறி ஆரம்பம் 19th - Sep

Get 5 Diplomas

Real Access Program

- Diploma in Web Designing
- Diploma in Computer Studies
- Diploma in Graphic Designing
- Diploma in Spoken English
- Diploma in Hardware Enineering

Full Time

03 Months

Mon - Fri 8.30 a.m - 4. 30 p.m

பாடநெறி ஆரம்பம் 19th - Sep

HOT LINE 0777 222 529

Diploma in Teacher Training Program

- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING

AMI

Well qualified panel of Lecturers with American Qualification

Certificate Level - 3

06 Months

பாடநெறி ஆரம்பம் 17th - Sep

Diploma in AUTO CAD

Computer Aided Designing & Drafting

Saudi, Dubai, Qatar, Drawings will be given to the students for practice

03 Months

G.C.E. O/L, A/L → Diploma AUTO CAD → Advance Diploma AUTO CAD → AUTO CAD 3D Special → MEP

Certificate Level - 3

பாடநெறி ஆரம்பம் 18th&19th Sep

Diploma in MEDIA

By Academy of Media Colombo

(Leading Journalist Panel in Sri Lanka)

Duration - 3 Month

Medium : Tamil

- News Paper
- Radio
- Television

03 Months

பாடநெறி ஆரம்பம் 17th - Sep

Diploma in Hotel Management

- Front office
- Food & Beverages
- International Cookery
- House Keeping
- Pastry & Bakery
- Languages - French & English

Duration 4 Months

பாடநெறி ஆரம்பம் 19th - Sep

FOREIGN MINISTRY (TVEC) APPROVED CERTIFICATES

TOEIC City&Guilds EDFOCUS

இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.

ஆண் /பெண் இறுபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி

- Hostel Available

GOLDEN COLLEGE

www.goldencollege.lk

No : 548, Peradeniya Road, Kandy | No : 126, Kandy Road, Thihariya.

081 2 205 544 | 0777 222 529

033 2 245 515 | 0777 222 528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய மாதம் வந்துவிட்டது

-இஸ்பஹான் சரப்தீன்-

செப்டம்பர் மாதம் வந்துவிட்டால் இலக்கியவாதிகளுக்கும் வாசகர்களுக்கும் நூல் வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கும் பருவ காலமாலமாகத் திகழ்கிறது. இலங்கைச் சூழலில் இப்படி ஒரு மாதம் ஒதுக்கப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இம்மாதத்தையொட்டி நாட்டின் பல இடங்களில் புத்தக் கண்காட்சிகளும் புத்தக அங்காடிகளும் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணலாம். தரமான இலக்கியப் படைப்புகளுக்கான விருது வழங்கல் விழாக்கள் இடம்பெறுவதும் அடுத்து வரும் ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக ஒதுக்கப்பட்டிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாகும்.

இதில், BMICH புத்தக் விற்பனைக் கண்காட்சி, கொடகே புத்தகக் கண்காட்சி மற்றும் பிரதேச ரீதியில் ஏற்பாடு செய்யப்படுகின்ற கண்காட்சிகளைக் குறிப்பிடலாம். இவை, புத்தக விற்பனையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் சிறந்த சந்தைகளாக்க் காணப்படுகின்றன. இருந்த போதிலும் தரமான தமிழ் மொழி நூல்களை காணக் கிடைக்காதது வருத்தமளிக்கிறது.

முன்பு குறிப்பிட்டது போல, புத்தகங்களை மதிப்பீடு செய்து எழுத்தாளர்களை கௌரவப்படுத்தும் வகையிலான விருது வழங்கும் விழாக்கள் நடாத்தப்படுவதும் முக்கியமான ஒரு விடயமாகும். இதில், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு நடாத்தும் அரச இலக்கிய விருது விழா, கொடகே நிறுவனம் நடாத்தும் கொடகே விருது விழா, சரசவியின் விதுதய விருது விழா மற்றும் நாவல்களுக்கு மாத்திரம் விருது வழங்கும் ஸ்வர்ன புஸ்தக விழா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதில், மிக முக்கியமானது கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு நடாத்தும் அரச இலக்கிய விருது விழாவாகும். இலக்கிய மாதத்தை முன்னிட்டு இவ் விழாவுக்கான தேசிய ஒருங்கிணைப்பாளர் A.M.A Bandara, மற்றும் அரச இலக்கிய ஆலோசனைக் குழுத் தலைவர் Jayasumana Dissanayake ஆகியோரை சந்தித்து இது குறித்து உரையாடினோம்.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தேசிய இலக்கிய துணைப் பேரவை 1952 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க இலங்கை கலைப் பேரவைச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய இலக்கியத் துணைப் பேரவையினாலேயே இலக்கியம்சார் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

இதன் முக்கிய கடமை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நாட்டின் இலக்கியத் துறைக்கு பங்களிப்பதாகும்.

மிக முக்கியமான விடயம் அரச இலக்கிய விழாவை நடாத்துவதாகும். வருடா வருடம் இவ் விழா நடாத்தப்பட்டு வருகிறது. (2016) இம்முறை 59 ஆவது தடவையாக நடைபெறும் மேற்படி விருது வழங்களின்போது 2015 ஆம் ஆண்டு வெளிவந்த சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த கவிதை, நாவல், சிறுகதை, பாடலாக்கத் தொகுப்பு, அறிவியல் புனைக்கதை, நாடகம், புலமைத்துவ ஆய்வுசார் படைப்புகள், நானாவிதம், இளையோர் இலக்கியம், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு நாவல், மொழிபெயர்ப்பு சிறுகதை, மொழிபெயர்ப்பு கவிதை, மொழிபெயர்ப்பு நாடகம், மொழிபெயர்ப்பு புலமைத்துவ மற்றும் அறிவுசார் படைப்புகள் என 15 பகுதிகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

வெளிவரும் நூல்களில் 5 பிரதிகளை சுவடிக் கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது அறிந்ததே. இப்படி சுவடிக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நூல்களில் சிறந்தவற்றை தேசிய இலக்கிய துணைப் பேரவை பணங் கொடுத்து வாங்கி, அவற்றில் மதிப்பீட்டுக்கு தகுதி பெற்ற நூல் பட்டியலை உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிடப்படும். பெயர் பட்டியலில் உங்கள் நூல் இடம்பெறாவிட்டால், விழா வருடத்துக்கு முந்தைய வருடத்தில் முதல் பதிப்பாக வெளிவந்த 48 பக்கங்களுக்குக் குறையாத நூலின் மூன்று பிரதிகளை அனுப்பி வைக்குமாறு கோரி பத்திரிகைகளில் அறிவித்தல் விடுக்கப்படும். ஜனவரி மாதம் இவ் அறிவித்தல் வெளியாகும்.

1500 இற்கு மேற்பட்ட சிங்கள மொழி மூல நூல்களும் 100 இற்கும் 150 இற்கும் இடைப்பட்ட ஆங்கில மொழி நூல்களும் 275 இற்கும் 300 இற்கும் இடைப்பட்ட தமிழ் மொழி மூல நூல்களும் போட்டிக்கு கிடைக்கப் பெறுகின்றன. இவற்றை மதிப்பீடு செய்வதற்காகவும் தெரிவு செய்வதற்காகவும் ஊவா தவிர்ந்த மற்ற எல்லாப் பல்கலைக்கழகங்களும் இணைந்து கொள்வதோடு ஜூரிக்கு தகுதியான இலக்கியப் புலமையாளர்களும் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். தமிழ் மொழி மூல நூல்கள் மூன்று சுற்றுக்களின் பின் தெரிவுசெய்யப்படுவதோடு, ஆங்கில மற்றும் சிங்கள நூல்கள் 4 சுற்றுக்களின் பின் தெரிவு செய்யப்படுகின்றன.

இது தவிர தேசத்திற்கு இலக்கியப் படைப்புகளை வழங்கி தமது வாழ்நாள் முழுவதும் இலக்கியத்திற்காக அர்ப்பணித்த தமது வாழ்நாளில் ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் சாகித்திய ரத்னா விருது ஒவ்வொரு முறையும் சிங்கள, தமிழ், ஆங்கில மும்மொழிகளிலும் மூன்று இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இம்முறை தமிழுக்கு டொக்டர் ஜெபநேசன் பிதாவுக்கும், சிங்களத்திற்கு பண்டித சிறிதிலக சிறி அவர்களுக்கும் ஆங்கிலத்திற்கு டொக்டர் மார்லின் பீரிஸ் அவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. இலங்கையில் ஒரு இலக்கியவாதிக்குக் கிடைக்கும் அதி உயர் விருது இதுவாகும்.

இலங்கை ஜனநாயகக் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அவர்களின் தலைமையில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சரின் பங்கு பற்றுதலுடன் வருடந்தோரும் வெகுவிமர்சையாக நடைபெற்று வருகிறது.

அத்தோடு, இலக்கிய விழாவை முன்னிட்டு இலக்கிய விரிவுரைகள ஏற்பாடு செய்து இலக்கிய இரசனையைப் பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. முதல் அமர்வில் இலக்கிய இரசனை சம்பந்தமான ஒரு உரையும் இரண்டாவது அமர்வில் பல இலக்கியவாதிகள கலந்து கொள்ளும் செயலமர்வும் இடம்பெறும். தமிழ் மொழி மூல இலக்கிய உரை அண்மையில் கொடகலை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றது. சிங்கள மொழி மூல உரை முதலாம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

மாதாந்தம் ஒரு இலக்கிய உரை கொழும்பில் இடம்பெறுகிறது. இது சிங்கள மொழியில் நடாத்தப்படுகிறது. அது தவிர தமிழ் மொழி மூல இலக்கிய உரைகளை இரு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

முன்னரை விட தற்போது தமிழ் இலக்கிய படைப்புகளுக்கும் படைப்பாளர்களுக்கும் அதிக கவனம் செலுத்தப்படுவதால், தமிழ்ப் படைப்பாளிகளுக்கு உற்சாகமூட்டும் வகையிலான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதில், மொழிபெயர்ப்புக்கான உதவிகளை வழங்கல் மற்றும் விருது பெரும் நூல்களை மும்மொழிகளுக்கும் மாற்றுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இளைய தலைமுறை எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் தரப்படுத்தவும் மட்டக்களப்பில் இலக்கிய செயலமர்வுகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கைப்பிரதிப் போட்டி ஒன்று நடாத்தப்படுகிறது. ஒரு புத்தகம் முழுமையடைய முன் உள்ள கைப்பிரதிகளுக்கான இப்போட்டி மும்மொழிகளிலும் நடைபெறுகிறது. இப்போட்டிக்கான அறிவித்தல் வருடந்தோரும் பிரசுரிக்கப்படுகிறது. இப்போட்டியில் வெற்றிபெறும் நூல் அமைச்சின் இலக்கியப் பேரவையினால் அச்சிட்டு வெளியிடப்படும்.

ஒரு எழுத்தாளனின் மூலம் வெளியிடப்படும் ஒரு நூலை 'வெளியீட்டுப் பிரிவு' முன்வந்து வெளியிடும். பின் 25,000 பெறுமதியான நூல்களை தாமே வாங்கி நூலகங்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யும். இது பற்றிய ஒரு விளம்பரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அதன் பின் விண்ணப்பப் படிவத்துடன் ஒரு புத்தகம் அனுப்பி வைத்தால் அதனை பரீட்சிக்கும் குழுவிடம் வழங்கி தகுதிவாய்ந்ததாகக் கண்டால் இந்த முறையில் தமது புத்தகத்தையும் வெளியிட்டுக்கொள்ள முடியும்.

வருடாந்தம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு போட்டி நடத்தப்படுகிறது. கவிதை, கவிதை வாசிப்பு, கட்டுரை, சிறுகதை, கையெழுத்து என பல பிரிவுகளில் மும்மொழிகளிலும் இப்போட்டி நடாத்தப்படுகிறது. இதற்கான அறிவித்தல் வருடந்தோரும் ஜனவரியில் வெளியிடப்படுகிறது. பிரதேச செயலகம் மூலமாகவும் பிறகு மாவட்டம் பிறகு தேசிய மட்டத்திலும் என ஒழுங்கு முறையில் போட்டிகள் நடைபெறுகிறது. அத்தோடு விருது விழாவுக்கு தெரிவாகும் நூல்களை மாணவர்களை வாசிக்கத் தூண்டும் வகையில் குறிப்பாக நாவல்களை திறனாய்வு செய்யும் வகையிலான ஒரு போட்டியையும் நடாத்தி வருகிறோம்.

இலக்கியவாதிகளை கௌரவிக்கவும், புதிய தலைமுறை இலக்கியவாதிகளை உற்சாகமூட்டவும், பாடசாலை மட்டத்தில் எழுத்தாளர்களை இணங்காணவும் மற்றும் தரப்படுத்தவும், இலக்கிய ரசனையை பகிர்ந்துகொள்ளவும், இலக்கியப் படைப்புகளை மக்கள் மயப்படுத்தவும் என பல நிகழ்வுகள் இவ்விலக்கிய மாதத்தை மையப்படுத்தி இடம்பெற்று வருகின்றன. இவை பற்றி எந்தளவில் நாம் அறிந்து வைத்திருக்கிறோம் என்பதையும் நமது பிரிதிநிதித்துவம் மற்றும் பங்குபற்றுதல் எத்தனை சதவிகிதம் என்பதையும் உணர்ந்து கொண்டாலே இவ்வாக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

கண்டி மடவளையில் பெண்களுக்கான



ENGLISH & LIFE SKILLS

Next Intake 19th SEP

பாதுகாப்பான வதிவிட வசதி

இக் கற்கைநெறியில் உள்ளடங்குபவை :

- English Language (Special)
- Computer Application
- Pre- Marriage Counseling
- Cookery
  - Bakery Items
  - Cake Varieties
  - Rice Varieties
  - Sweets
- Self Employment Courses
  - Ribbon Embroidery
  - Brazilian Embroidery
  - Crochet
  - Doll Decorating
  - Patch Work & More
- Sinhala Language
- Bridal Dressing

சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவிக்கு UK சான்றிதழ் வழங்கப்படும்

- Life Skills
- Motivation
- Psychology
- Herbal Beauty Culture
- Social Media & Safety
- Human Development
- Human Nutrition & Hazard
- Dress Making (Cutting Method)
  - Shalwar
  - Blouse
  - Skirt
  - Habaya & More
- தஜ்வீத்,அஹ்லாக்,தர்பியா உட்பட மேலும் சில இஸ்லாமிய பாடநெறிகள்

5 CERTIFICATES ISO + Govt அங்கீகார சான்றிதழ் உட்பட

4 Months Full Time

100% தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் பாடநெறி

Diploma in Islamic Banking & Finance

தற்போது தொழில் சந்தையில் அதிக வேலை வாய்ப்புக்கள் உள்ள பாடநெறி

ISO சான்றிதழ் வழங்கப்படும் UK Qualification

Job Arrangement

Target Group:
- After A/L's
- After O/L's
- Job Seekers

6 Months Part Time
2 Months Full Time

Conducted By
- THE ONLY World Prize Winning & Internationaly Certified Lecturer in SRI LANKA (ABE-UK / ABP-UK)
- University Lecturer (1st Class)

EMERRAD Ladies Academy
363B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 - T: 081 25 90 600

Hotline: 077 877 966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரிடம் சொல்லி அழுவது?

அநீதியும் அநியாயமும் தலைவிரித்தாடும் அதிகார மையங்கள் புவியெங்கும் பரந்திருக்கும் வரை நீதியையும் நியாயத்தையும் எவரிடமும் எதிர்பார்க்க முடியாது. இந்த நிலையில் எந்த அதிகார மையமாவது நீதிக்கும் நியாயத்துக்கும் என எழுந்து நின்றால் அது அவரவர் சுயநலத்தின் எதிர்பார்ப்பேயன்றி, நீதிக்கும் நியாயத்துக்குமான தூய்மையான முன்னெடுப்பாக அமையப் போவதில்லை. இதனால் தான் நீதி, நியாயத்துக்கான போராட்டங்கள் உலகெங்கும் உள்ள அநியாயக்கார மையங்களால் நசுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் யாரிடம் போய் நியாயம் கேட்பது என்ற விரக்தியின் விளம்பில் உலகம் தள்ளாடுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் இலங்கை விஜயம் தொடர்பிலும் நாட்டின் புத்திஜீவிகள் மத்தியில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் புரிந்த அட்டகாசம் அநியாயமானது என அறிக்கைகள் தெரிவித்த போதும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படாமல் இருப்பது ஏன், தான் பதவிக்கு வந்ததும் குவாண்டனாமோ வதைச்சாலையை மூடிவிடுவதாகச் சொன்ன அமெரிக்க அதிபர் ஒபாமா, இன்னும் ஓரிரு மாதங்களில் தனது தவணையை முடித்துக் கொள்ளவிருக்கும் சூழலிலும் இதனை மூடாமல் இருப்பது தொடர்பில் என்ன விசாரணை நடத்தப்பட்டது. சிரியாவில் இலட்சக் கணக்கில் கொல்லப்படுகின்ற அப்பாவி சிவிலியன்கள் தொடர்பில் கொலையாளிகள் விசாரிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன போன்ற இன்னோரன்ன கேள்விகள் மனிதாபிமானத்தை மதிக்கின்றவர்களால் எழுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் விஜயம் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான விஜயமாக இலங்கையின் புத்திஜீவிகள் மட்டத்தில் மதிக்கப்பட வில்லை. எகிப்திலே பெரும்பாலான மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வாறான சபைகள் இலங்கையில் ஜனநாயகத்துக்காக தூய்மையுடன் உழைப்பார்கள் என்ற நம்பிக்கை இங்கு யாருக்கும் இல்லை.

வடக்கு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் நிறுவப்பட வேண்டும் எனக் கோருகின்ற ஐ.நா. சபை, 60,000 க்கும் மேற்பட்ட ஜேவிபியினர் காணாமலாக்கப்பட்ட போது வாய் திறக் காமல் இருந்தது அவர்கள் இடதுசாரிகள் என்பதனாலா? அப்படியாக இருந்தால், தொழுகையிலே ஈடுபட்டிருந்த, புனித யாத்திரையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த நிராயுதபாணிகளை கொன்று குவித்தது தொடர்பில் இவர்கள் விசாரணை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இரவோடிரவாக விரட்டப்பட்ட அப்பாவிகளை மீள்குடியேற்றுவது தொடர்பில் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்பதை நினைத்தும் பார்க்க முடியாது.

ஐ.நா. செயலாளரின் விஜயத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஒரு தரப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டு பேச்சு வார்த்தைகளில் உள்ளடக்கப்படாமை இதனை உறுதிப்படுத்துகிறது. வடக்கு முதலமைச்சருடன் மூடிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட செயலாளர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சரை சந்திக்காமல் விட்டது அவரது பாரபட்சத்தை காட்டுகிறது. ஐ.நா. செயலாளரின் நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம் தரப்பினை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் எதனையும் அரசாங்கம் செய்யாமல் விட்டது. முஸ்லிம்களை ஒரு பொருட்டாக மதிக்காத அரசின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

உரையின் ஆரம்பத்தில் அஸ்ஸலாமு அலைக்கும் சொல்லித் தொடங்கி, இறுதியில் சுக்ரன் ஜஸீலன் சொல்லி முடிப்பதால் மட்டும் ஒரு இனத்துக்கான அங்கீகாரத்தை வழங்கி விட முடியாது என்பதனை செயலாளர் நாயகம் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சகலருக்கும் பாரபட்சமின்றி நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானம் உள்ளவர்களது எதிர்பார்ப்பாகும்.

இப்படியான சபையொன்றின் தேவையையே உலகம் தற்பொழுது உணர்ந்து வருகிறது. தத்தமது சொந்த நிலைப்பாடுகளில் இருந்து விலகி, தூய்மையாக மனித குலத்தின் விடிவு தொடர்பில் உழைக்கின்ற மத்தியஸ்த சபைகளையே உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது. அப்போது தான் உலகில் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியும்.

ஊர்ஜிதமற்ற தகவல்களை வைத்து புலனாய்வுப் பிரிவு செயற்படக் கூடாது

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரூவன் விஜயவர்த்தன அவர்களுக்கு தேசிய ஒற்றுமைக்கான மன்றம் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திரு. M.M. சுஹைர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

இன்றைய இந்த இராப்பொழுதுக்கான எமது நோக்கம் இரண்டாகும். முதலாவது, முஸ்லிம்களுடன் தொடர்புடைய சில விவகாரங்களைப் பரிசீலனை செய்து, நாட்டின் தேசிய அக்கறைசார் கண்ணோட்டத்தினுள் அவற்றை நிலைப்படுத்தல். இரண்டாவது, விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியம் குறித்து எமது சொந்த சமூகத்தை எச்சரிக்கை செய்வதற்கான தருணம் ஏற்பட்டிருக்கின்றமையாகும்.

புலனாய்வுத் தகவல்களை ஒன்று திரட்டல் என்பது முக்கியமானதாகும். ஆனால், நம்பகமானதும் துல்லியமானதுமான தகவல்களைத் திரட்டுதல் என்பது அதனைக் காட்டிலும் முக்கியமானதாகும். தன்னல அக்கறைகளைக் கொண்ட தரப்பினர்களால் முன்வைக்கப் படுகின்ற தவறான அல்லது சந்தேகத்திற்கிடமான தகவல்களை தவிர்த்து விடுதல் என்பது முற்றிலும் இன்றியமையாததாகும்.

புலனாய்வுத் தகவலைப் பொருள்கோடல் செய்வதனூடே எடுக்கப்படும் பிழையான தொரு தீர்ப்புக்கு பல உயிர்கள் விலையாகக் கொடுக்கப்பட நேரிடும். உண்மையில், விலை மதிப்பற்ற பல அப்பாவி உயிர்களை அது விலையாகக் கொண்டிருக்கும். அத்தகைய பல சந்தர்ப்பங்களுள் ஒன்றை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

துணை நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு நம்பகத்தன்மையற்ற ''புலனாய்வுத் தகவல்களை'' வழங்கி நிலைகுலைவைத் தோற்றுவிப்பதிலுள்ள அபாயங்களை சில்கொட் அறிக்கை அம்பலப்படுத்துகின்றது. ஈராக்கிற்குப் படையெடுப்பதற்கு ஏலவே தீர்மானித்திருந்தவர்களுக்கு உதவுவதில் முக்கிய வகிபாகத்தை M16 அறிக்கை வகித்திருந்தது.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த இருவர் ISIS அமைப்பில் இணைந்துகொள்வதற்கென தென்னிந்தியாவில் இருந்து நீர்கொழும்புக் கூடாகப் பயணித்ததாகக் குற்றஞ்சாட்டி, பல்வேறு ஊடகங்களிலும் அறிக்கைகள் வெளிவந்திருந்தன. குறித்த தினசரி ஒன்றின் முக்கிய தலைப்புச் செய்தி ''இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கான மையமாகக் கொழும்பு'' என உளறியிருந்தது.

அந்த அறிக்கையை நீங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்திப் பார்க்கின்றபோது, 'இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கான' மையமாகக் கொழும்பு உருவாகியுள்ளது என்ற விஷமத்தனமான தலைப்புச் செய்திக்கோ, அல்லது ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் கொண்ட கேரள ஜோடியொன்று ISIS அமைப்புடன் ஏதேனுமொரு விடயத்தை மேற்கொள்வதற்காக இருந்ததென்றோ, அல்லது அவர்கள் ISIS அமைப்புடன் இணைந்திருந்தனர் என்றோ ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவான எந்தவொரு விடயத்தையும் உங்களால் கண்டு கொள்ள முடியாமற் போகும்.

குறித்த இரு நபர்களினதும் பெயர்கள் கூட ஏற்றுக்கொள்ளத்தக்க முஸ்லிம் பெயர்களாக அமைந்திருக்கவில்லை. இந்தியப் புலனாய்வு மூலமொன்றில் இருந்து குறித்த செய்தி பெறப்பட்டதாக அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த ஆதார மூலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நபருடையதோ அல்லது நிறுவனத்தினுடையதோ எந்தவொரு பெயரும் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

ஆர்வமிகு விடயம் என்னவென்றால், கடந்த செவ்வாய்க்கிழமை அன்று (2016 ஆகஸ்ட் 02) அதே தினசரி மிகவும் வரவேற்கத்தகு ஆசிரியர் தலையங்கம் ஒன்றைத் தீட்டியிருந்தது. குறித்த கேரள ஜோடி பற்றிய செய்தி தொடர்பில் மேற்படி ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

''துரதிஷ்டவசமாக, போலியான செய்தி ஒன்றிலிருந்து தயாரிக்கப்பட்ட ஊடக விந்தை ஒன்றை விட இதில் வேறெதுவுமில்லை. பயங்கரவாதம் தொடர்பிலான மிகைப்படுத்தப்பட்ட மஞ்சள் பத்திரிகையிலின் இத்தகைய போக்கு நீண்ட தூரம் போய்விட்டது. அத்தோடு அது மேலும் தொடர்வதற்கு இடமளிக்கப்படக் கூடாது. தவறான ஆதார மூலம், தவறான தகவல்கள் மற்றும் தாட்சணியம் பாராத பயங்கரமான பத்திரிகையியல் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட வேண்டும்.''

எத்தகைய நம்பகத் தன்மையுமில்லாத இவ்வாறான தன்மையைக் கொண்ட அறிக்கைகள் தங்களது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைய காலத்துக்குக் காலம் நிறுவனங்களால் ஊடகங்களில் வெளிக்கொணரப்படுகின்றன. அத்தகைய அறிக்கைகளை எமது பாதுகாப்புத் தரப்புக்கள் நிராகரித்திருந்த

போதிலும்கூட இது நிகழ்கின்றது. உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் சரி இத்தகைய குற்றச்சாட்டுக்களைத் தொடக்கி வைப்பவர்களை நேர்காணல் செய்தல் உட்பட, இது தொடர்பில் பரந்துபட்ட புலன்விசாரணையை மேற்கொள்ளவது மிகவும் பெறுமானம் மிக்கதாக அமையும்.

மேற்சொன்ன அத்தகைய அறிக்கைகளுள் இன்னுமொன்று, LeT என நன்கறியப்பட்டுள்ள லக்ஷர்-ஏ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பு தனது ''இலகுபடுத்தல் மத்திய நிலையம்'' (Facilitation Center) ஒன்றை இலங்கையில் நிறுவியுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து மிகச் சரியாக ஒரு மாதம் கடந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தது.

இப்போது யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்களாகின்றன. நாம் இன்னும் அத்தகைய மத்திய நிலையம் ஒன்றைக் கண்டு பிடிக்கவில்லை. இது பேரழிவு ஆயுதங்கள் பற்றி நான் ஏலவே குறிப்பிட்ட அதே செய்தியை ஒத்தது. இது நிகழ்ந்து நான்கு வருடங்களின் பின்னர் - அதாவது 2013 இல், மாதவ் நலாபட் (Madhav Nalapat) என்பவர் கொழும்பு பற்றிய விவரணம் ஒன்றை ''சன்டே கார்டியன்'' எனும் இந்திய வார இதழுக்கு எழுதியிருந்தார்.

அதில் அவர், பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படும் லக்'ர்-ஏ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பினர் கால்பதிக்கும் புதியதொரு தளமாக இலங்கை மிகத் துரிதமாக மாறி வருகின்றது எனக் குறிப்பிட்டிருந்தார்.

நாலாபட்டின் அந்தச் செய்தி வெளிவந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. அந்தச் செய்தியில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதை இன்று நாம் அறிந்து கொண்டோம். கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள நால்பட், இலங்கை அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டு, அவருடைய குற்றச்சாட்டு தொடர்பில் குறுக்குச் சரி பார்த்தலை மேற்கொள்வதற்கு அவரது உதவியும் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும் பொருத்தமற்ற ஒன்றெனக் கருதி, அவர்கள் ஏளனத்துடன் இருந்திருக்கக் கூடும்.

2003 ஆம் ஆண்டில் பெயர் குறிப்பிடப்படாத வெளிநாட்டுப் புலனாய்வு மூலமொன்றினால் இத்தகைய குற்றச்சாட்டைக் கொண்ட பிறிதொரு செய்தி ஊடகங்களில் கசியவிடப்பட்டது. அச்செய்தியில், யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியா மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு லக்ஷர்-ஏ-தொய்பா தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவை யாவும் ஊடகங்களில் வெளிவந்த அப்பட்டமான பொய்கள். ஆனால் அவற்றை மக்கள் உண்மை என நினைத்து இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான சாத்தியக் கூறுகள் உண்டெனும் போலியான அச்சத்திற்கு தமது உள்ளங்களையும் எண்ணங்களையும் உட்படுத்திக் கொள்கின்றனர். 30 ஆண்டுகள் நீடித்த யுத்தத்திலிருந்தும், அது ஏற்படுத்திய வடுக்களிலிருந்தும் தற்போதுதான் மீண்டுள்ள ஒரு நாட்டுக்கு அது ஒரு கொடூரமான செய்தியாகவே அமைந்திருந்தது.

முஸ்லிம் அடையாளத்தைக் கொண்டுள்ள நபர்களால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான சாத்தியங்கள் உள்ளன எனும் இத்தகைய குற்றச்சாட்டுக்களும், இவற்றையொத்த போலியான குற்றச்சாட்டுக்களும் இங்குள்ள அப்பாவி முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்ற ஒரு சமூகமாக ஆக்கிவிடுகின்றன. அது - வரலாறு நெடுகிலும் பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த ஒரு சமூகத்தின் மீது தொடுக்கப்படும் வலி மிகுந்த ஒரு பிரதி பலிப்பாகும்.

LTTE பயங்கரவாதத்தை எதிர்த்து உறுதியோடு நின்றமைக்காக எமது சமூகம் மிகப் பாரிய துயரங்களைச் சந்திக்க நேர்ந்தது. வடமாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமிழ் பேசும் முஸ்லிம்கள், இன்னமும் தங்களுடைய சொந்தக் காணிகளில் மீள் குடியேற்றப்படாத நிலையிலுள்ளனர்.

ஆயுதப் படைகளில் இணைந்து பணியாற்றுகையில் விலைமதிக்க முடியாத தமது இன்னுயிர் களை இந்நாட்டுக்காகத் தியாகம் செய்த பல முஸ்லிம்களைப் பற்றிய விபரங்களைப் பாதுகாப்பு அமைச்சு முழுமையாக அறியும். அதிலும் குறிப்பாக மலாய் முஸ்லிம்கள் புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றியமைக்காக, அவர்கள் விடுதலைப் புலிகளினால் கொலைசெய்யப்பட்டமையை குறித்த அமைச்சு நன்கறியும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவை சீர்குலைக்கும் நோக்கில் தன்னல அக்கறைகளைக் கொண்ட சில சக்திகள் இலங்கை ஊடகங்களைப் பயன்படுத்தி வருகின்றன என்பது கண்கூடு. துரதிஷ்டவசமாக, இத்தகைய போலியான அறிக்கைகள் இங்கு வாழ்ந்து வருகின்ற, சமாதானத்தை நேசிக்கும், மதிப்புமிகு முஸ்லிம் சமூகத்தின் நேர்மைத் தன்மையின் மீது சேறுபூச முனைகின்றன.

ஊடகங்களில் வெளியாகும் - புலனாய்வு அறிக்கைகள் என அழைக்கப்படும் - இத்தகைய அறிக்கைகளுள் எதுவும் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிராது என நான் நம்புகின்றேன். ஏனெனில், அவை துணை நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளியிடப்பட்ட புனைவுகள் என்பது வெளிப்படையாகவே தெரியும்.

மேற்கு வங்காளத்தில் அப்பாவி மதகுருமார்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின் புலத்தில் இஸ்ரேலின் முகவரமைப்புக்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளதாக பங்களாதேஷ் நாட்டின் உள்துறை அமைச்சர் அண்மையில் BBC செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

கியோனிஸவாதிகள், நவீன-பழைமைவாதிகள் (Neo-cos)மற்றும் ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் போன்றோர் தத்தமக்கென தனியான நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டுள்ளனர் என்பது நன்கறியப்பட்ட விடயமாகும். அவர்கள் உலகம் பூராகவும் தமது முகவர்களை வைத்திருக்கின்றனர். நிகழக்கூடுமென எதிர்பார்க்கின்ற ISIS அமைப்புக்கான ஆட்சேர்ப்புக்கள் குறித்து மாத்திரமன்றி, அதற்கு சரி சமமாக, நாட்டினுள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கான தொடக்கப் புள்ளிகளைத் தேடி ஆய்வுகளை முன்னெடுக்கக் கூடிய வெளிநாட்டு முகவர்கள் குறித்தும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்குள்ளது என்பதே இங்கு சாலப் பொருத்தமானதாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தின் மூலம் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான எமது சொத்துக்கள் மேற்குலகின் 700 இற்கும் மேற்பட்ட ஆயுதத் தொழிற்சாலைகளை இயங்க வைக்க உறிஞ்சப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த ஆயுதத் தொழிற்சாலைகள் ஒருபோதும் மூடப்படப் போவதில்லை. இதில் உண்மை யாதெனில், அவர்கள் எமது இழப்புக்களின் மூலம் பாரியளவிலான வியாபாரங்களை மேற்கொண்டுள்ளனர் என்பதாகும். முரண்பாடுகள் மற்றும் மோதல்களை ஏற்படுத்துவதன் மூலமே அவர்களால் இந்த வியாபாரத்தைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியும்.

இத்தகையதொரு பின்னணியில், எமது நாட்டின் சகல எல்லைகளிலும் வெளிநாட்டு முகவர்களைக் கண்காணிக்கின்ற மிக முக்கியமான பணியைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்களை நாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். பெரும்பாலும் அத்தகைய முகவர்களுள் சிலர் தங்களுடைய அரசாங்கங்களுக்குத் தெரியாமல் ஆயுத உற்பத்தித் துறையில் பணியாற்றுகின்றவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் தங்கள் எஜமானர்களின் அபாயகரமான நிகழ்ச்சி நிரல்களுடன் (பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் சமூக நிறுவனங்களின் நிலைப்பாடு சமூகமயமாக்கப்பட வேண்டும்

நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கையின் சகல இனத்தவர்களினதும் அரசியல் அபிலாஷைகளும் கோரிக்கைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டே புதிய அரசியலமைப்பு உரு வாக்கப்படும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு நம்பிக்கையளித்தபோதும், மாறி வரும் தற் போதைய நிலவரங்கள் அச்சங்களை உருவாக்கி வருகின்றன.

குறிப்பாக, அரசியலமைப்பு மாற்றம், தேசிய இனப்பிரச்சினைக்கான சமஷ்டித் தீர்வு குறித்த அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாடு துலங்காத நிலையில், தமிழ்த் தரப்பினர் மற்றும் சர்வதேச நாடுகள் அரசு மீது விதித்து வரும் அழுத்தங்கள் குறித்து முஸ்லிம் சமூகம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது.

புதிய அரசியலமைப்பு வரைவு, உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை மீள்நிர்ணயம், புதிய தேர்தல் சீர்திருத்தம், தமிழ் தரப்பின் சமஷ்டிக் கோரிக்கை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, நிலம் மற்றும் ஏனைய வளப் பிரச்சினை குறித்த மிகத் தெளிவானதும் தூர நோக்குள்ளதுமான அரசியல் நிலைப்பாடுகளை முஸ்லிம் சிவில் சமூகம் எடுக்க வேண்டிய முக்கிய தருணம் இது.

ஏனெனில், இலங்கை எதிர்கொண்டுள்ள இந்த நிலைமாறும் கட்டத்தை மிகக் கவனமாக எதிர்கொள்ள முடியாமல் தவறி விடுவோமானால், அது முஸ்லிம் சமூக வரலாற்றில் மிகப் பெரும் அரசியல் தவறாகப் பதியப்படும் என்பதில் சந்தேகமில்லை.

முன்பை விட முஸ்லிம் சிவில் சமூகம் அரசியல் ரீதியில் ஓரளவு விழிப்படைந் துள்ளது என்பதனை சமீபத்திய போக்குகள் காட்டுகின்றன. ஆனாலும், சிவில் சமூகத்தின் பெரும் பகுதி இன்னும் அரசியல் பிரக்ஞையற்ற, அரசியல்வாதிகளின் வாய் வீரங்களுக்கு உணர்ச்சிக் கோஷங்களை எழுப்புகின்ற பிண்டப் பிரமாண்டமாகவே காட்சி தருகிறது.

இத்தனைக்கும் மத்தியில் கிழக்கிலும் நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் சில முஸ்லிம் சிவில் சமூக நிறுவனங்கள் மிகுந்த உட்சாகத்துடன் களத்தில் பணியாற்றி வருவது ஓரளவு நம்பிக்கை தருகிறது. அந்த வகையில் சமீபத்தில் உருவாக்கப்பட்ட கிழக்கு முஸ்லிம்களின் சிவில் சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பு முக்கியமானதோர் திருப்பமாகும். இது போன்ற நிறுவனங்கள் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நெருக்கடி களை கட்சி சார்பற்று, சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முன்வைக்க விளைந்துள்ளமை ஆரோக்கியமானதே.

குறிப்பாக, வடக்கும் கிழக்கும் தனித்து இயங்க வேண்டும் என்ற அதன் உறுதியான நிலைப்பாடு கவனத்திற்குரியது. எல்லை மீள் நிர்ணயம் மற்றும் தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பான அவர்களது கோரிக்கைகளும் முக்கியமானவை. நிலைமாறும் காலகட்டத்தில் நிலைத்திருக்க வேண்டிய முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடுகளை ஒருமித்த குரலில் முன்வைப்பதும் அதற்கான அணிதிரட்டல்களை மேற்கொள்வதும் இன்றைய அரசியல் களத்தில் உடனடியாக வேண்டப்படும் சமூகப் பணியாகும்.

முஸ்லிம் சமூகத்தின் அடுத்த கட்ட அரசி யல் நகர்வுகள், தீர்மானங்கள், நிலைப்பாடு கள், சிவில் சமூகத்தின் கருத்தொருமைப் பாட்டுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சமூக நிறுவனங்களால் இன்று தெளிவாக்கப்பட்டுள்ளது. இது மிக முக்கியமானதோர் மாறுதலாகும். சமூகக் களத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் கருத்து மாற்றம் சமூகமயமாக்கப்பட வேண்டும்.

நாடு தேசிய ரீதியான நெருக்கடிகளை எதிர் கொள்ளும்போது அல்லது அரசியல் ரீதியான மாற் றம் ஒன்று இடம்பெறும்போது மாத்திரம் அது குறித்து அவ்வப்போது தமது வசதிக்கேற்ப தீர்மானம் மேற்கொள்ளும் அரசியல் கட்சிகள், முஸ்லிம் சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளை ஒருபோதும் வெளிக்கொணர்ந்ததில்லை. உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைத்ததுமில்லை. தாம் தொங்கியிருக்கும் பெரும்பான்மை அரசாங்கத்திடம் அழுத்தமாக அவற்றை முன்வைத்துப் போராடியதுமில்லை. இதுவே வரலாறாகிப் போன எமது சமூகத்தில் சிவில் நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாகும்.

தேசிய அரசாங்கம் ஒரு பக்கம் சர்வதேச சக்தி களின் அழுத்தங்களுக்கு அடிபணியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்னொரு புறம் தமிழர் தரப்புக் கோரிக்கைக்கு செவி சாய்க்கும் நிலைக்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்நிலையில், சிவில் சமூகத்தின் பங்கேற்பு இன்னும் முக்கியமானது. குறிப்பாக, இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் தமிழ்த் தரப்பு சமஷ்டியைக் கோரும் இத்தருணத்தில், முஸ்லிம் அரசியல் தலைமைகள் கள்ள மௌனம் காக்கும்போது, முஸ்லிம் சிவில் சமூகத்தின் பங்குபற்றல் தவிர்க்க முடியாதது.

ஏற்கனவே நாம் குறிப்பிட்ட விவகாரங்கள் அனைத்திலும் மிகவும் உணர்வுபூர்வமானதும் மிக வும் வினைமையானதுமான விவகாரம் சமஷ்டி கோரிக்கையாகும். இதனை முன்வைத்துள்ள தமிழ் தரப்பு, முஸ்லிம் சிவில் சமூகத்தைப் புறக்கணித்து விட்டு, முஸ்லிம் அரசியல் தலைவர்களோடு பேசுவதால் எந்தப் பிரயோசனமுமில்லை. இதிலுள்ள வேடிக்கை என்னவெனில் மண்ணில் தலைபுதைக்கும் தீக் கோழிகள் போல் தமிழ் தலைமைகள் முஸ்லிம் சிவில் சமூகத்தைக் கண்டுகொள்ள மறுப்பதுதான்.

இன்று எல்லை மீள்நிர்ணயம் முஸ்லிம் சமூகத் தின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் மீது ஓர் இடியாக இறங்கியுள்ளது. எமது அரசியல் தலைமைகள் காலம் தாழ்த்தி எடுக்கும் முயற்சி கள் எவ்வளவு ஆபத்தானது என்பதற்கு மீள்நிர்ணயம் ஓர் தெளிவான உதாரணமாகும்.

ஒகு குறிப்பிட்ட பிரதேசத்தின் சனத்தொகைப் பரம்பல், இனவிகிதாசாரம், நிலத் தொடர்பு என் பவை கவனிக்கப்படாமல் பெரும்பான்மை சிங்கள மக்களோடு முஸ்லிம் பகுதிகள் இணைக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்டுள்ள புதிய எல்லைகள் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை குறைக்கப் போகின்றன.

திருகோணமலை, கம்பஹா, புத்தளம் மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்ட எல்லை நிர்ணயங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எல்லை நிர்ணய குழுவின் தலைவர் அசோக பீரிஸிடம் சுட்டிக்காட்டி யுள்ளார். ஆனால், அது காலம் கடந்த ஞானமாகும்.

ஏனெனில், முறையற்ற எல்லை நிர்ணயங்களால் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டிய போதும், அக்கோரிக்கை முன்வைக்கப்படுவதற்கு முன்பே குறிப்பிட்ட எல்லை நிர்ணயங்கள் நிலஅளவைத் திணைக்களத்திடம் பட வரைபுகளுக்காகக் கையளிக்கப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் நகரசபை, புத்தளம் பிரதேச சபை, கற்பிட்டி பிரதேச சபை, ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபை, வண்ணாத்தி வில்லு பிரதேச சபை, சிலாபம் நகர சபை, சிலாபம் பிரதேச சபை, நாத்தாண்டியா பிரதேச சபை என்பவற்றில் புதிய எல்லை மீள்நிர்ணயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மாவட்டத்தில் அக்குறனை பிரதேச சபை, பாத்த ஹெவாஹெட்ட பிரதேச சபை, பாத்த தும்பரை பிரதேச சபை என்பவற்றிலும் இது போன்ற அநீதிகள் இடம்பெற்றுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட் டத்திலுள்ள மூதூர், கந்தளாய் பிரதேச சபைகளிலும் எல்லை மீள்நிர்ணயங்களிலும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அக்குறணை பிரதேச சபைக்கு 11 முஸ்லிம் உறுப்பினரக்ளைப் பெற்றுக் கொள்ளும் வகை யில் வட்டார எல்லகைள் நிர்ணயிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டிருந்தபோதும், தற் போது 9 முஸ்லிம் பிரதிநிதிகளும் 9 சிங்களப் பிரதிநிதிகளும் பெறும் வகையிலான எல்லை மீள்நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய முறைப்பாட்டு விசாணைக் குழு விசாரணை களைப் பூர்த்தி செய்து எல்லைகளை மீள்நிர்ண யம் செய்து பட வரைபுக்காக எல்லை நிர்ணயங் களை நிலஅளவைத் திணைக்களத்திற்கு சமர்ப் பித்து விட்டது. இதனால் இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் குறித்து மீளவும் முறைப்பாடு செய் வதற்கான அவகாசம் மொத்தமாகவே இல்லாமல் போயுள்ளது.

அரசியல் கட்சிகளை நம்பியிருப்பதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை இது சிவில் சமூகத்திற்கு அழுத்தமாக வலியுறுத்தியுள்ளது. சமஷ்டிக் கோரிக்கை, தேர்தல் மறு சீர்திருத்தம் என்ப வற்றிலும் முஸ்லிம்களுக்கு எதிரான அநீதி நிகழ்ந்து விடாமல் இருக்க, சிவில் சமூகம் உடனடியாக களத்திற்கு வர வேண்டியுள்ளது.

குறுகிய அரசியல் ஆதாயங்களை விலக்கி வைத்து விட்டு முஸ்லிம்களின் உண்மையான அரசியல் அபிலாஷைகளை இதய சுத்தியுடன் பிரதி பலிக்கக் கூடிய தெளிவான அரசியல் நிலைப்பாடு களை எடுக்க வேண்டிய தருணம் இது. இதற்கென உழைத்து வரும் சி வில் சமூக நிறுவனங்களின் போராட்டம் பலப்படுத்தப்பட வேண்டும். சிவில் சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பு இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். கிழக்கிலும் தென்னிலங்கை யிலும் முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஒன்றுபட்ட குரலில் உரத்துச் சொல்வதற்கும், அரசாங்கத்திடம் அழுத்தமாக முன்வைப்ப தற்கும் சிவில் சமூக நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய இக்கட்டான, அரசியல் முக்கி யத்துவம் வாய்ந்த வரலாற்றுத் தருணத்தில் கருத்தொருமைப்பாட்டுக்குரிய அனைத்து அரசியல் நிலைப்பாடுகளும் சமூகமயமாக்கப் பட வேண்டும். முஸ்லிம் சமூகத்தை மிகச் சரியான திசைவழியில் அரசியல் மயமாக்குவதற்கான மிகச் சிறந்த தருணம் இது. இது கைநழுவிப் போய்விடக் கூடாது.

நாடளாவிய ரீதியில், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நிலைப்பாடுகளை சமூக மயமாக்கும் வேலைத்திட்டமொன்று வகுக்கப் பட வேண்டும். அதில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1. அரசியல் ரீதியில் முஸ்லிம் சமூகத்தை விழிப்பூட்டவும் அறிவூட்டவுமான வளவாளர் குழுவொன்று தயார்படுத்தப்பட வேண்டும். அது எமது நிலப்பிரச்சினை, வளப் பகிர்வு, நிர்வாகத் துறை பங்கேற்பு தொடர்பான முதற் தர தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, சிவில் சமூகத்தை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சிகளைத் திட்ட மிட வேண்டும்.

2. பள்ளிவாயல்கள், வினைத்திறனுள்ள ஒரு சமூக நிறுவனம். அதன் மிம்பர்கள் சக்தி வாய்ந்தவை. எந்த விளம்பரமும் இன்றி ஆயிரக்கணக்கில் மக்கள் ஒன்று சேரும் இடம். எனவே பள்ளிவாயல் இமாம்கள், குறிப்பாக குத்பா நடத்துபவர்கள் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நெருக்கடிகள் குறித்து விஷேடமாக அறிவூட்டப்பட்டு, அவர்கள் மூலம் நமது செய்தி மக்களைச் சென்றடைய வேண்டும்.

3. மூடிய அறைகளிலிருந்து திறந்த வெளிகளை நோக்கி மக்கள் மையப் பிரச்சா ரங்கள் விரிவாக்கப்பட வேண்டும். குறிப்பாக, சமஷ்டி மற்றும் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பாக வடக்கு கிழக்கின் ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசத்திலும் வீடு வீடாகச் செ ன்று தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

4. இஸ்லாமிய தஃவா இயக்கங்களின் முழு வீச்சுடனான பங்களிப்பு இவ்விடயத் தில் பெறப்பட வேண்டும். அவர்களுக்கென்று சிவில் சமூகத்திலுள்ள ஆதரவுக் குழுக்கள் மக்களை அரசியல் மயமாக்குவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

5. வணிக சங்கங்கள், பள்ளிவாயல் சம்மேளனங்கள், சமூக நல நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் என எல்லா வகையான சமூக அமைப்புகளும் புதிய அரசியல் நகர்வுகள் குறித்து அறிவூட்டப்படு வதோடு, எதிர்கால அரசியல் செயற்பாடு களுக்கான அவர்களது பங்களிப்பும் பெறப்பட வேண்டும்.

6. முஸ்லிம் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், எமது அரசியல் பிரச்சினைகள், நிலைப்பாடுகள் குறித்து விழிப்பூட்டப்படுவ தோடு, அச்சு/இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக அவற்றை சமூகத்திற்கு முன்வைப்பதற்கும் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

7. துறைசார் நிபுணத்துவ அணிகள் (முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கள், முஸ்லிம் அரச அதிகாரிகள் சங்கள், முஸ்லிம் பொறியியலாளர்கள் சங்களும் போன்றவை) தனித்தனியாகவும் கூட்டாகவும் அரசியல் பிரச்சினைகள் மற்றும் நிலைப்பாடுகள் குறித்து வலுவூட்டப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முரண்பாடு எதற்கு?

இஸ்லாம் என்பது சாந்தி சமாதானம். ஸலாம் என்ற சொல்லில்,இருந்து இஸ்லாம் உருவானது. இஸ்லாத்தில் 3 அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன. முதலாவது ஸலாம். இரண்டாவது ரஹ்மாஹ். மூன்றாவது வசதிய்யா. ஸலாம் என்பது சாந்தி சமாதானம். ரஹ்மாஹ் என்பது கருணை தயவு இரக்கம் ஆகும். வசதிய்யா என்பது நடுநிலை.

ஸலாம் என்ற கோட்பாட்டை எடுத்துக் கொண்டால் நாம் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தொழுகையை நிறைவேற்றுகிறோம். உலகில் உள்ள 180 கோடி முஸ்லிம்களுள் பெரும்பாலானவர்கள் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுகிறார்கள். தொழுகை முடிந்ததும் வலப்பக்கமும் இடப்பக்கமுமாக திரும்பி, தங்களின் மீது சாந்தி சமாதானம் உண்டாவதாக எனக் கூறுகிறோம். கோடிக்கணக்கிலான முஸ்லிம்களின் வாயால் இவ்வார்த்தை வெளிப்படுகிறது. இதுவே இஸ்லாத்தின் சமாதானக் கோட்பாடு.

இரண்டாவது ரஹ்மாஹ், அதாவது கருணை, இரக்கம் ஆகும். இஸ்லாம் அல்லாஹ்வை மகா கிருபையுடையவன் என்பதாகவே அறிமுகப்படுத்துகின்றது. ஒரு முஸ்லிம் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 17 தடவைகள் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனக் கூறுகிறான். முழு உலகிற்கும் அன்பு கருணையை போதிப்பதற்கு அருட்கொடையாக நபி (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. முழு உலகம் என்பது மனித உலகம் மாத்திரமல்ல. மிருக உலகம், மரம், செடி, கொடி, தாவரங்கள் அனைத்தையுமே உள்ளடக்குகின்றது.

மூன்றாவது வஸதிய்யா, அதாவது நடுநிலைமை பேணல். தீவிரப்போக்கை கடைபிடிக்காத தன்மையே இது. இஸ்லாம் எப்பொழுதும் தீவிரப்போக்கை ஆதரித்தது கிடையாது. ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் உங்களுக்கு முன்பிருந்தவர்கள் கடும்போக்குடையவர்களாக செயற்பட்டதனாலேயே அவர்கள் அழிவை நோக்கிச் சென்றார்கள் எனக் குறிப்பிட்டார்கள்.

இஸ்லாம் எப்பொழும் கலந்துரையாடலை ஆதரிக்கிறது. அது தீவிரத் தன்மையை போதிக்கவில்லை. அல்குர்ஆனில் 'கவ்ல்' என்ற சொல் 1700 இடங்களில் வந்துள்ளது. அதன் பொருள் கலந்துரையாடல் கருத்துப் பரிமாறல் என்பதாகும். அதுபோன்று நபி (ஸல்) அவர்கள் யுத்தத்தையும் வன்முறையையும் ஆதரிக்கவில்லை. அதற்கு விருப்பப்படவுமில்லை.

இஸ்லாம் தற்காப்புக்காக வேண்டியே யுத்தத்தை ஆதரித்தது. பாதுகாப்பு நோக்கத்திற்காகவே நபி (ஸல்) அவர்கள் யுத்தம் செய்யுமாறு மக்களை பணித்தார்களே ஒழிய, அதை எந்நேரமும் ஆதரிக்கவில்லை. உதாரணத்திற்கு அலி (ரழி) அவர்களின் மகனுக்கு பெயர் வைக்கும் பொழுது அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த சொல்லான ஹர்பை பெயர் சூட்ட முனைந்தார்கள். அதன் பொருள் போர். அக்காலத்தில் பெரும்பாலான சிறுவர்களுக்கு இப்பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அலி (ரழி) அவர்களுக்கும் பாத்திமா (ரழி) அவர்களுக்கும் முதல் குழந்தை கிடைத்த பொழுது என்ன பெயரை சூட்டப் போகிறீர்கள் என நபியவர்கள் கேட்டதற்கு 'ஹர்ப்' என்று சொன்னார்கள். அப்பெயரை சூட்டுவதற்கு நபியவர்கள் விருப்பப்படவில்லை.

ஹஸன் என்ற பெயரை வைக்குமாறு கூறினார்கள். இரண்டாவது குழந்தை பிறந்த சந்தர்ப்பத்திலும் என்ன பெயர் வைக்கப்போகிறீர்கள் என கேட்டதற்கு 'ஹர்ப்' எனும் பெயரை வைக்கவுள்ளதாக சொன்னார்கள். அதற்கு நபியவர்கள் அதை வைக்காதீர். ஹுஸைன் என்ற பெயரைச் சூட்டுங்கள் என்று கூறினார்கள்.

எனவே சமாதானம், அன்பு, நடுநிலைமை பேணல் போன்ற விடயங்களையே இஸ்லாம் உலகிற்கு வழங்கியுள்ளது. இவ்வாறு போதிக்கின்ற மார்க்கத்தில் நாம் இன்று ஒருவர் எமக்கு கை நீட்டினால் நீ முஸ்லிமல்ல. நான் தான் முஸ்லிம் என்று வாதிடுகிறோம். பள்ளிவாயலில் ஒரு ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் பொழுது அது அப்படியல்ல. இப்படித்தான் செய்ய வேண்டும் எனக் கூறி சண்டைபிடித்துக் கொள்கின்றோம். தொழுகைகளிலும் அப்படித்தான். ஏதாவது மார்க்கப் பிரச்சினைகள் ஏற்படும் பொழுதும் அங்கு பல அமைப்புக்கள் கருத்து முரண்பாடு கொள்கின்றன. இஸ்லாம் இவற்றை போதிக்கவில்லை. ஒற்றுமை என்னும் கயிற்றை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறு இஸ்லாம் கூறுகின்றது.

இன்று ஒரு சிலர் தாம் நினைப்பதை ஏனையவர்களுக்கும் திணிக்கப் பார்க்கிறார்கள். முகத்தை மூட வேண்டும், கறுப்பு நிற ஆடைதான் அணிய வேண்டும், இவ்வாறு செய்யாதவர்கள் முஸ்லிம்களல்ல என்று கூறுகிறார்கள். இஸ்லாத்தை கருவறுக்க நினைப்பவர்கள் முஸ்லிம் சமூகத்திற்குள் மூழ்கின்ற இவ்வாறான பிரச்சினைகளை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்கிறார்கள்.

இஸ்லாம் மார்க்கம் வன்முறை மிக்கது. கொடூரமானது என்ற கருத்துக்களை இஸ்லாத்தின் எதிரிகள் சமூக மட்டத்தில் பிரசாரப்படுத்தி வருகிறார்கள். எனவே மார்க்கத்தை முறையாக ஆராய்ந்து கற்று அதன்படி செயலாற்ற வேண்டும். கருத்து வேறுபாடுகளை களைந்து ஐக்கியத்துடன் தேசிய மட்டப் பிரச்சினைகளில் கவனஞ் செலுத்த வேண்டும்.

மதத் தலைவர்களே எம்மைப் பிரித்து வைத்திருக்கிறார்கள்

சகவாழ்வு தொடர்பாக சர்வ மத சமாதானப் பேரவையின் இணைத் தலைவர் பிதா W. திலகரத்ன மீள்பார்வைக்கு வழங்கிய கருத்துக்களிலிருந்து...

சர்வ மத சமாதானப் பேரவையானது ஐந்து மதத் தலைமைகளை ஒன்றிணைத்து 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பிக்குகள், பிதாக்கள், குருக்கள், மவ்லவிமார்கள் மற்றும் பஹாயி மதத் தலைவர்கள் இதில் உள்ளடங்குவர்.

மதத் தலைவர்களுக்கு மத்தியில் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கும் தேசிய பிரச்சினைகளில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காகவும் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. இராணுவத்தினருக்கும் LTTE இனருக்கும் இடையிலான மோதல்களின்போது அவ்விரு சாராருக்கும் மத்தியில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக் கில் சில வேலைத்திட்டங்கள் இந்நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிறுவனம் 'எகமுது லங்கா' (United Lanka) என்ற ஒரு வேலைத்திட்டம் மூலமாக பல மாவட்டங்களிலும் இருந்து உயர் தரம் கற்கும் மாணவர்களை ஓரிடத்தில் ஒன்று திரட்டி, ஒரு கருப்பொருளை வைத்து, அது பற்றி ஐந்து மதங்களும் எதனைப் போதிக்கின்றன என்பதை மதத் தலைவர்கள் மூலம் தெளிவுபடுத்தும் பணியை வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது.

இதன் மூலமாக மாணவர்களுக்கு மத்தியில் இருக்கும் இன, மதங்கள் மீதான அவநம்பிக்கைகளையும் சந்தேகங்களையும் களைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சமகால நிலவரங்களை தெளிவுபடுத்தும் நோக்கில் இதனை தற்போதும் சர்வமத சமாதானப் பேரவையானது முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு, நாட்டில் ஏதும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அது இனப்பிரச்சினையாகவோ மதப்பிரச்சினையாகவோ இருக்கலாம். உடன் செயற்படும் விசேடமான அணி (Special Tasks Force) ஒன்று உள்ளது. முரண்பாடு உள்ள இடத்துக்குச் சென்று அது பாரிய பிரச்சினைகளாக உருவெடுக்க முன் சம்பந்தப்பட்ட மக்களுடன் கதைத்து தீர்த்து வைக்க ஐந்து மதத் தலைவர்களும் உடன் செயற்படும் வகையில் இந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

அரசினாலோ அல்லது வேறு அதிகார அமைப்புகளாலோ மக்களுக்கு ஏதும் அநீதிகள் நிகழவிருந்தால், அவற்றுக்கு எதிராக தைரியமாக குரல் கொடுக்கும் அமைப்பாகவும் சர்வமத சமாதானப் பேரவை திகழ்கிறது.

சகவாழ்வுக்கான சவால்கள்

சகவாழ்வுக்கு இரண்டு விடயங்களே சவால்களாக இருக்கின்றன. ஒன்று, அரசியல்வாதிகளின் ஆதிக்கம். இரண்டு, சில மதத் தலைவர்களின் ஆதிக்கம். இவ்விரு சாராரின் நடவடிக்கைகளால்தான் அதிகமான இனப்பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. மதங்களுக்கு இடையே பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன.

மதத் தலைவர்களே எம்மைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மாத்திரம் அல்லது தமது மதத்துக்குள் மாத்திரம் செயற்படுவதற்கு எம்மை சிறுவயதில் இருந்தே மூளைச் சலவை செய்திருக்கிறார்கள். எமக்கு மற்றவர்களோடு பழக இதனால் இடமளிக்கப்படவில்லை.

எனவே, இதிலிருந்து விடுபட வேண்டும். மதத் தலைவர்கள் என்ற வகையில் எமது பிரச்சினைகளுக்கு எமது பாரம்பரிய மதப் போதனைகளின் படி தீர்வு காண முடியாது. எமது மதங்களுக்கு இடையிலேயே சமாதானம், நல்லிணக்கம் கிடையாது என்பதே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

மதம் என்பது மனிதர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஓர் அமைப்பொழுங்கு. அவற்றின் மூலம் ஓர் உயர் விளைவைப் பெற முடியாது. எச்சரிக்கையைப் பெற முடியாது. விசேடமாக அரசியல் தலைவர்கள் மதத் தலைவர்கள் தத்தமது ஒழுக்க போதனைகளைப் பார்த்தால் அதன்படி வாழ்ந்தால் அங்கு சகவாழ்வை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும். நாம் எம் ஒவ்வொருவரிடமும் உள்ள ஒழுக்கப் போதனைகள் அடங்கிய கொள்கைகளில் உடன்பட்டிருக்கிறோம். எனவே, அவ்வந்த மதங்களின் பிரதான போதனைகளை மதித்து செயல்பட்டோமானால் சகவாழ்வைக் கட்டியெழுப்ப ஏதுவாக அமையும்.

அது போன்று எமது பேரவையின் எதிர்பார்ப்புசகவாழ்வைகட்டியெழுப்புவதாகும். மதங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்தல். அதற்காக நாம் எமது மதங்களில் இருந்து விலகி அல்லது மத அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை பெற்று ஒழுக்கப் போதனைகளை நோக்கி கவனங் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் சகோதர, சகோதரிகள் என மனிதத்துவத்திற்கு மதிப்பளித்து, மனிதாபிமானத்தை முற்படுத்தி செயற்பட முடியுமாக இருந்தால் அதனை செய்ய முடியுமாக இருக்கும்.



முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் எடுத்துக் கொண்டால் எமது பழைய ஏற்பாட்டில் உள்ள பல விடயங்கள் குர்ஆனில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் உள்ள பல விடயங்களும் குர்ஆனில் இருக்கின்றன. முஹம்மது நபி வருகை தந்து ஹதீஸ் மூலம் ஒழுக்கப் போதனைகளை முன்வைத்திருக்கிறார்கள்.

எனவே தொன்மையான பிணைப்புகள் காரணமாக முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் இடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியுமாக இருக்கும். பல்வேறு பிரச்சினைகள் வரலாற்றில் ஏற்பட்டிருந்தாலும் நாட்டில் உள்ள பிரச்சினைகளின்போது ஒருமித்து குரல் கொடுக்க முடியுமாக இருக்கும்.

விசேடமாக அண்மையில் கொழும்பில் நடந்து முடிந்த உலக இஸ்லாமிய மாநாடு எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. வழமைக்கு மாற்றமாக இம்முறை சகல மதத்தினரையும் அழைத்திருந்தார்கள். இம்முறை தேரர்கள் எட்டுப் பேர் அளவில் வருகை தந்திருந்தார்கள். உரையாளர்களாகவும் தேரர்கள் வருகை தந்திருந்தார்கள். கிறிஸ்தவ பீடங்களை பிரதிநிதித்துவப்படுத்தி Fathars மற்றும் Sisters வருகை தந்திருந்தார்கள்.

இது நல்லதொரு முன்னேற்றம். நாம் எதையும் மறைத்து செய்தால் மக்கள் சந்தேகம் கொள்வார்கள். ஆனால் நாம் வெளிப்படையாக செய்தால் எல்லா மதத் தலைவர்களுக்கும் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற தெளிவு கிடைக்கும். இப்படியான செயல்களாலேயே சகவாழ்விற்கான வழிகள் கிடைக்கின்றன.

நான் கண்டியில் வசிப்பவன். அங்கு வசிக்கும் முஸ்லிம் சமூகத்துடன் பழகுகிறேன். அவர்களது பரம்பரைப் பெயர்கள் சிங்களத்திலேயே காணப்படுகிறது. 'முதியன்ஸலாகே' அல்லது 'கெதர' என முஸ்லிம் பெயர்களுடன் இணைந்து சிங்களப் பெயர்களே காணப்படுகின்றன. கடந்த கால மனிதர்கள் எந்தளவு நெருக்கமாக இருந்திருக்கிறார்கள் என்பது இதில் இருந்தே புரிகிறது.

அரபு நாடுகளில் இருந்து ஆண்கள் மாத்திரமே வந்தார்கள். இங்குள்ள இலங்கைப் பெண்களை திருமணம் முடித்ததால் பாதி அறபி பாதி சிங்களம். பாதி அறபி பாதி தமிழ். இப்படி ஒரு நிலைதான் இருந்தது. பிக்குகளும் மவ்லவிமாரும் தனது சமூகத்துக்கு இவற்றை சொல்லிக் காட்ட வேண்டும். நாம் இலங்கையர் வேறு வேறு இனத்தவரல்ல என்று கூற வேண்டும்.

சில அடிப்படைவாதிகள் இருக்கிறார் கள். உதாரணமாக இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியும் கிரிக்கெட் விளையாடும்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக கைதட்டி ஆரவாரம் செய்கின்றனர். இலங்கை அணிக்கு இப்படி ஆதரவு வழங்குவதில்லை. எனவே, இங்கு அறாபியமய மாக்கம் நடக்கிறதோ என பேரினத்தவர்கள் மத்தியில் அச்சமும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

சதாம் ஹுஸைனின் யுத்த காலத்தில் சதாம், சதாம் எனக் கோசம் எழுப்பிக் கொண்டு கொழும்பில் பாதைக்கு இறங்கினார்கள். உண்மையில் இது எமக்கு சம்பந்தமில்லாத ஒரு விடயமாகும். இப்படி நடந்துகொள்வதால் பேரினத்தவரிடம் சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்கும். இதை இல்லாமல் செய்ய வேண்டும்.

முஸ்லிம்கள் தாம் இலங்கையர் என்ற வகையில் வாழ வேண்டும். ஒரு சிறிய உதாரணத்தைக் கூறுகிறேன். நான் கண்டி பிரதேசத்தில் வசிப்பவன் என்ற வகையில், அறபு நாடுகளுக்கு சென்று வந்த சில பெண்களிடம் முகம் மூடி கறுப்புடை அணியும் ஒரு கலாச்சாரம் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ளது. இது அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் சிங்களவர் மத்தியில் பாரிய அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் இதன் மூலம் வெவ்வேறு தப்பான காரியங்கள் இடம்பெற வாய்ப்பிருக்கிறது. இப்படி கொலையும் செய்திருக்கிறார்கள். எனவே இவற்றை தவிர்த்து நடப்பதே சிறந்தது.

தொகுப்பு: இஸ்பஹான் சாப்தீன், அனஸ் அப்பாஸ்

உள்ளூராட்சி... (1ம் பக்கத் தொடர்)

சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் உப தலைவர் அப்துல் ரஹீம் நஸார் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

சிங்களம், தமிழ், முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் தெல்தோட்டை நகரம் தற்போதுள்ள எல்லை நிர்ணயங்களுக்கு அமைவாக மூவின மக்களுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றது. எனினும், நல்லாட்சி அரசின் ஆலோசனைக்கு அமைய புதிய எல்லை நிர்ணயம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்குழு பரிந்துரை செய்யும் யோசனைக்கு அமைய அங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. கடந்த பாத்த ஹேவா ஹெட்ட பிரதேச சபையில் 23 உறுப்பினர்கள் இருந்தனர். அதில் 3 முஸ்லிம்கள், 2 தமிழர்கள் உள்ளடங்களாக 5 சிறுபான்மை பிரதிநிதித்துவம் அங்கு இருந்தது. ஆனால், புதிய எல்லை நிர்ணயத்தின்படி உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படுமாயின் பாத்த ஹேவா ஹெட்ட தொகுதியில் ஒரு சிறுபான்மை பிரதிநிதித்துவத்தையாவது பெற்றுக் கொள்வது சிரமமாக அமையும்.

எனவே, எல்லை நிர்ணயம் மேற்கொள்வதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. ஆனால், அது சிறுபான்மை சமூகத்துக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் மேற்கொள்ளப் படுமாயின் அதற்கு நாங்கள் கடும் எதிர்ப்பினை தெரிவிப்போம். ஆகவே, பிரதமர் மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம் மக்களோடு மனந்திறந்து பேசத் தயாராக உள்ளேன்

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் உள்ளார். ஒட்டு மொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இத்தகைய நிலைப்பாட்டை கொண்டுள்ளார்களா? வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்கின்ற விடயத்தில் உங்களுடைய நிலைப்பாடுகள் என்ன?**

கே. துரைராஜசிங்கம்

விவசாயம் மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் - கிழக்கு மாகாண சபை

வட கிழக்கு இணைப்பு என்னும் விடயம் எங்களைப் பொறுத்தவரையில் புதிய விடயமொன்றல்ல. இது வரலாற்று ரீதியில் பார்க்கப்பட வேண்டிய விடயம். 1827 களில் கோல்புறுக் கமரன் ஆணைக்குழு வருகை தந்த நேரத்தில் இலங்கையின் அரசியலமைப்பு தொடர்பான பல்வேறு விதமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அதில் கண்டியன் லீக் என்னும் அமைப்பு, இலங்கை ஒரு பன்மைத் துவம் கொண்டதொரு நாடு என்பதனால் இந்தப் பன்மைத்துவத்தை அங்கீகரிக்கக் கூடிய விதத்தில் இதன் அரசியல் அமைப்பு இருக்க வேண்டும் என்றும் அதனடிப்படையில் கண்டிய மாகாணம், கரையோர மாகாணம், வட கிழக்கு இணைந்ததொரு மாகாணம் என்ற வகையில் அமைக்கப்பட்டு அதற்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூட்டாட்சி அல்லது சமஷ்டி என்ற கோரிக்கையை விடுத்தார்கள்.

அவ்வேளையில் எமது தலைவர்கள் இது ஒரு நாடாக இருக்க வேண்டும், இதிலே பிரிவினை தேவையில்லை என்ற அடிப்படையில் அதற்கவர்கள் ஒத்துப்போகவில்லை. இதற்குப் பின்னர் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக அதாவது, தமிழ் தலைவர்களும் சிங்கள தலைவர்களும் நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக நெருக்கமாக இருந்தார்கள்.

சுதந்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்த காலப்பகுதிகளில் சில வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கின. தமிழ்த் தலைவர்கள் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை கேட்ட பொழுது, சிங்களத் தலைவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் என்று சொல்லத் தொடங்கினார்கள்.

அவ்வாறு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் வருகின்ற வேளையிலும் கூட கொழும்பு மத்தியில் ஒரு தொகுதியை தமிழர்களுக்கு கொடுக்கக்கூடிய விதமானதொரு உடன்பாடு இருந்தது. ஆனால் அவ்வுடன்பாட்டை அவர்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்த விடவில்லை. பிறகு சேர் பொன் இராமநாதன், பொன் அருணாசலம் போன்றவர்கள் தமிழர்கள் தங்களுக்கென தனியானதொரு அரசியல் வழியிலே செல்ல வேண்டும் என்று நினைத்தார்கள்.

1950 களுக்குப் பிறகு இந்நிலைமை முற்றிலும் மாறியது. இக்காலப்பகுதியில் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றதும் தந்தை செல்வாவுக்கும் பண்டாரநாயக்கவுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவ்வொப்பந்தத்தில் வடக்கில் ஒரு மாநிலமும் கிழக்கிலே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அமைப்பொன்று முன்மொழியப்பட்டது.

இங்கு வட கிழக்கு இணைப்பு தொடர்பாக சொல்லப்பட வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், இந்த மாநிலங்கள் மாகாண எல்லைகளுக்கு அப்பால் விரும்பினால் இணைந்து கொள்ளலாம் என்ற ஏற்பாடும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதுவும் வட கிழக்கு இணைப்பு என்கின்ற விடயத்தையே சொல்கின்றது.

அண்மைக் காலங்களை எடுத்துக் கொண்டால், 1994, 1995, 1998 வரையிலுமாக இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் இதில் முஸ்லிம் காங்ரஸும் இணைந்து கொண்டது- வட கிழக்கு இணைந்ததொரு மாநிலம் மற்றும் தென் கிழக்கு மாநிலம் என்கின்ற விடயங்கள் பேசப்பட்டன. இவையும் வட கிழக்கு இணைப்பு சம்பந்தமாகவே சொல்கின்றது. 1987ல் 13ம் திருத்தம் வருவதற்கு முன்னர் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின்போது வடகிழக்கு ஏன் இணைந்த மாநிலமாக இருக்க வேண்டும் என்பது தொடர்பாக ராஜீவ் காந்தி அவர்களுக்கு எமது தலைவர்கள் விளங்கப்படுத்தியிருந்தார்கள்.

வட கிழக்கு இயற்கையாகவே தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மாநிலமாக இருந்தது. 1947க்கு முன்பிருந்தே மெல்ல மெல்ல சிங்களக் குடியேற்றங்கள் உருவாக ஆரம்பித்தது. இந்தச் சிங்கள குடியேற்றங்கள் எங்களுடைய இயற்கை நிலைமைகளை முற்றிலும் மாறுபடுத்தி எங்களுக்குரிய மாநிலத்தை கபளீகரம் செய்கின்றதொரு நிலைமை வந்ததன் காரணமாக இன்னும் இன்னும் இறுக்கமாக வட கிழக்கு இணைப்பு என்பதை நாம் கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஏனெனில் உலக நாடுகளில் அல்லது சர்வதேச சட்டத்தில் ஒரு இனம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கு சர்வதேச சட்டங்கள் ஆதரவாகத்தான் இருக்கின்றது. ஆகவே ஒரு மொழி வழி ஒரு குறிப்பிட்ட இடத்திலே வாழ்ந்ததொரு சமுதாயம் தன்னுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு சர்வதேச சட்டத்திலே இடம் உள்ளது.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பை பார்க்கும் பொழுது பெரும்பான்மை மக்களுடைய அதிகரிப்பு முழு இலங்கையிலும் 1948ம் ஆண்டு தொடக்கம் 1983 வரையிலுள்ள காலப் பகுதிகளில் இரண்டரை மடங்கால் பெருகியுள்ளது. கிழக்கு மாகாணத்தை எடுத்துப் பார்த்தால் சிங்கள மக்களுடைய பெருக்கம் 9 மடங்கு அதிகரித்துள்ளது. அவர்களுடைய சனப்பெருக்கம் குருரத்தனமான அதிகரிப்பொன்றை காட்டுகிறது. இவ்வாறெல்லாம் இயற்கைக்கு மீறியதொரு அதிகரிப்பை வைத்துக் கொண்டு எங்களுடைய உரிமைகளை நசுக்குவதென்பது நியாய அடிப்படையில் பார்த்தாலும் சரி அது எவ்விதத்திலும் பொருத்தமானதல்ல. ஆகவே தான் நாங்கள் மேற்சொல்லப்பட்ட எல்லாக் காரணங்களின் அடிப்படையிலும் வட கிழக்கு இணைப்பு என்பது எங்களுக்கு தேவை.

- **வட கிழக்கு இணைப்பு என்னும் விடயத்தை பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் ஏற்றுக் கொள்வதில்லை. இந்நிலையில் இவ்விடயத்தை எவ்வகையில் சாத்தியப்படுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறீர்கள்?**

இதிலே தற்பொழுது உள்ள பிரச்சினை என்னவென்றால், முஸ்லிம் மக்கள் இதனை ஏற்றுக்கொள்வார்களா இல்லையா என்பது. முஸ்லிம் மக்களுடன் நாங்கள் பேச வேண்டும். மனந் திறந்து பேச வேண்டும். 30 ஆண்டுகள் நடைபெற்ற இந்த கசப்பான விடயங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஆளுக்காள் சேறு பூச நினைப்பது என்பது நாங்கள் எங்களுடைய சமுதாயத்தை நேசிக்காமல் எங்களுடைய உணர்வுகளுக்கு மட்டும் இடம்கொடுக்கின்றோம் என்ற இடத்திற்கு எம்மைக் கொண்டு வந்து விடும்.

ஆகவே அந்தக் கசப்பான சம்பவங்களை எல்லாம் நாம் விளங்கிக் கொண்டு அடுத்த சந்ததிக்கு இந்தக் கசப்புகளை பேசாமல் இருக்கக் கூடிய விதத்திலே நாம் முஸ்லிம் மக்களோடும் முஸ்லிம் அரசியல் தலைவர்களோடும் பேச வேண்டும்.

- **இணைந்த வட கிழக்கிற்குள் முஸ்லிம்களுக்குரிய உத்தரவாதங்கள் எவ்வாறு இருக்கும்?**

ஒருவர் கொடுப்பதும் ஒருவர் பெறுவதும் தான் உத்தரவாதம். இது அப்படி கொடுப்பது வாங்குவது என்கின்ற பிரச்சினையொன்றல்ல. இரண்டு தரப்பினரும் இருந்து பேசி இந்தக் கட்டமைப்பு அதாவது ஒருவருடைய உரிமையை ஒருவர் விளங்கிக் கொள்ளக்கூடாது. அதிலே நாங்கள் எப்பொழுதும் எங்களுடைய தலைவர்கள் மிகவும் நிதானமாகத் தான் இருந்து வந்திருக்கிறார்கள். உண்மையில் தமிழரசுக் கட்சியை எடுத்துக் கொண்டால் தமிழரசுக் கட்சி இலங்கை தழிழர்களுக்காக உருவாக்கப்பட்டதல்ல. தமிழரசுக் கட்சி மனித உரிமைகளைக் காப்பாற்ற வந்த கட்சி.

மலையகத்திலே இருந்த 10 லட்சம் மக்களுடைய வாக்குரிமைகளும் குடியுரிமைகளும் பறிக்கப்பட்ட பொழுது தான் எங்களுடைய கட்சி உதயமாகியது. நாங்கள் அங்கு எங்களுடைய வாக்குகள் சம்பந்தமாக பார்க்கவில்லை. மனித உரிமைகள் தொடர்பாகவே அவதானம் செலுத்தினோம். அவ்வாறு பார்க்கின்ற பொழுது வட கிழக்கிலே இருக்கின்ற தமிழ் பேசும் மக்கள், நாம் மதத்தால் வேறுபட்டிருக்கலாம். இதில் கிறிஸ்தவர்களும் உள்ளார்கள். ஆனால் எங்களுடைய மொழி, பண்பாடு, கலாசாரம் என்பன அண்மைக்காலமாக முளைத்துள்ள அடிப்படைவாதங்கள் என்கின்ற வகையிலே வித்தியாசமாக போய்க்கொண்டிருந்தாலும் அநேகமான பண்பாட்டு பாரம்பரியங்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் இருக்கின்றன. ஆகவே அந்த வகையிலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இங்கு சேர்ந்து தான் வாழ வேண்டும் என்பதிலே எந்தவித கருத்து வேறுபாடும் யாரிடமும் இருக்க மாட்டாது.

இவ்வடிப்படையில் நாம் ஒருவருடன் ஒருவர் தங்கி இருக்க வேண்டுமென்றால் இந்த நிலை சிநேகபூர்வமானதாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் போட்டி போட்டுக்கொண்டு ஒருவர் இலாபத்தை எடுப்பதற்காக சில விடயங்களை செய்கின்றார், இன்னொருவரை நட்டப்படுத்த நினைக்கின்றார் என்கின்றதொரு மனப்பாங்கு உருவாகக்கூடாது. தமிழனுடைய வயல் அழிந்துபோகின்றதென்றால் அதைப் பற்றி தமிழனை விட முஸ்லிம் வியாபாரி தான் கூடுதலாக கரிசனை கொண்டுள்ளவராக இருக்கின்றார். அப்படி ஒவ்வொரு விடயத்திலும் பார்க்க வேண்டும். முஸ்லிம்களுடைய வியாபாரம் நடக்க வேண்டும் என்றால் தழிழ் மக்களிடம் தங்கியிருக்க வேண்டி வரும். தமிழ் மக்கள் பொருட்களை வாங்க வேண்டும் என்றிருந்தால் அவர்களுடன் நேசத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இப்படியான விடயங்களை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்துக் கொண்டு நாங்கள் சேர்ந்து வாழ்வதற்கு என்னென்ன முட்டுக்கட்டைகள் இருக்கின்றன? அவற்றை பார்த்து அவற்றை பேசிக்கொண்டு இணைந்த வட கிழக்கிலே நாங்கள் எல்லோரும் சந்தோசமாக வாழ்வது தான் எங்களுடைய இலக்கு. அதை அடைவதற்காக ஒருத்தரை ஒருத்தர் வஞ்சிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் இலாபம் அடைந்து இன்னொருவர் நட்டமடைய வேண்டிய அவசியமில்லை. உலக அரசியல் அமைப்புக்களில் எத்தனையோ ஏற்பாடுகள் உள்ளன. நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்கிறோம். எங்கெல்லாம் இப்படியான விடயங்களுக்கு நல்ல தீர்வு இருக்கின்றதோ அவற்றையெல்லாம் பிரயோகித்து நாங்கள் ஒரு தீர்வை கண்டு கொள்ள முடியும்.

- **மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலப் பகுதிகளை தழிழர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றதே, இது தொடர்பில்..**

சிலர் காணிப் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு தான் இவ்வளவு பிரச்சினைகளையும் முன்தூக்க நினைக்கின்றார்கள். போர்க்காலங்களில் சிலர் காணிகளை விற்றுள்ளார்கள். சிலர் வாங்கியுள்ளார்கள். சில இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். மீள் நிர்மாணம் அமையும்போது பழைய இடத்திற்குதான் நாம் செல்வோம். பழைய நிலைமைக்கு எல்லோரும் வர வேண்டும் என்பது தான் எமது எதிர்பார்ப்பு. ஆகவே காணிகள் தொடர்பான பிரச்சினைகள் வருகின்ற பொழுது அவரவர் உரித்துடைய காணிகள் உரித்தாவணங்களை வைத்திருக்கின்ற பொழுது அந்த உரித்தாவணத்தின் அடிப்படையிலேயே காணி போகும். அதை யாராலும் தடை செய்ய முடியாது.

தேவையான காணிகள் என்கின்ற பொழுது நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கக் கூடிய ஏற்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளது. அந்த ஏற்பாடுகளின் அடிப்படையில் நிலமில்லாதவர்கள் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பித்து அதன்மூலம் காணிக்கச்சேரிகள் நடைபெற்று நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும். சிலர் நினைக்கிறார்கள் இவர் என்னுடைய நிலத்தை பிரித்துவிட்டார் அவர் என்னுடைய நிலத்தை பிரித்துவிட்டார் என்பதாக. சிலர் இதனை இன உருவத்திலே கொண்டு வருகிறார்கள். சாதரணமாக ஒரு காணியை இழந்த தனிப்பட்ட ஒருவர் தனது காணியை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு நிறைய ஏற்பாடுகள் இருக்கின்றது. அது சட்டமுறையிலான ஏற்பாடுகளாக இருக்கலாம். சமரச அடிப்படையிலான ஏற்பாடுகளாக இருக்கலாம். அதை அவர் பெற்றுக்கொள்ளலாம். இதைச்சிலர் இன அடிப்படையில் எடுத்து அரசியல் இலாபம் காண முனைகிறார்கள். ஆகவே இவ்வாறான விடயங்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

- **1990களில் வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பில் வடமாகாணத்தில் தமிழரசுக் கட்சி எவ்வாறான நடவடிக்கைகளை செய்து வருகிறது?**

வட மாகாண சபையிலிருந்து நான் அறிந்த விடயங்களின் அடிப்படையில் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் எல்லோரையும் மீள் குடியேற்றம் செய்வது தொடர்பில் விண்ணப்பிக்கச் சொல்லி இருக்கிறார்கள். (பக்.14)

அபூ ஷாமில்

நமக்கு யாரும் எதிரிகள் இல்லை

பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு வந்தவரை தாக்கியுள்ளார்கள். தொழுகை நடக்கவிடாமல் பள்ளிவாசலை இழுத்து மூடச் செய்திருக்கிறார்கள். ஜும்ஆ தொழுகை நடக்க விடாமல் தடைசெய்யப்பட்டதை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடியிருக்கிறார்கள். கோடீஸ்வர முஸ்லிம் வர்த்தகர்களை கொலை செய்திருக்கிறார்கள். கொட்டிலாய் இயங்கி வந்த பள்ளிவாசலை உடைத்திருக்கிறார்கள். பள்ளிவாசலிலேயே முஸ்லிம்களை வெட்டிக் கொன்றிருக்கிறார்கள்.

இவைகள் எல்லாம் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் முஸ்லிம் விரோத பொதுபலசேனாவினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டகாசங்கள் அல்ல. இலங்கை முஸ்லிம் சமூகம் மீது இலங்கை முஸ்லிம்களே ஆற்றும் புண்ணிய கருமங்கள். ஆம். புண்ணிய கருமங்களாக நினைத்துத் தான் இவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வர்த்தகர்களை கொலை செய்வதைத் தவிர.

இதனால் தமக்கு நன்மை கிடைக்கிறது. தனது தரஜா கூடுகிறது என்று இவர்கள் நினைக்கிறார்கள். இஸ்லாம் மார்க்கத்தை பாதுகாப்பதற்காக ஜிஹாத் செய்து விட்டோம் என்ற பூரிப்பில் அல்லாஹு அக்பர் (அல்லாஹ்வே பெரியவன்) என்று கோஷம் எழுப்பிக் கொண்டாடுகிறார்கள். இவர்களுக்கு அல்லாஹ்தான் அக்பரா? யார் அக்பர் என்பதனை புரியாமலா இவர்கள் கோஷமிடுகிறார்கள்?

முஸ்லிம் நாடான ஈராக், குவைத்தை ஆக்கிரமித்து அழித்தது. தனது பணியைச் செய்து முடித்ததும் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் ஈராக்கை அழித்தன. அமெரிக்கா மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டது. தனது ஆயுத வியாபாரம் நடக்கவும் வேண்டும், தான் பயங்கரவாதியாகப் பெயரெடுக்கவும் கூடாது. இதனை வென்றெடுப்பதற்கான புதிய யுத்திதான் முஸ்லிம் நாடுகளில் முஸ்லிம்களையே ஏவி விட்டு தான் கூத்துப் பார்ப்பது. இனி எதிரியான முஸ்லிமை அடக்குவதற்கான ஆயுத விற்பனை என்ற பேரில் முஸ்லிம் நாடுகளின் மொத்தப் பணமும் அவர்களுக்குக் கிடைக்கிறது. பயங்கரவாதிகள், உலகுக்கு அச்சுறுத்தலானவர்கள் என்ற பெயரும் முஸ்லிம்களின் தலையில் கட்டிவிடப்படுகிறது.

தற்பொழுது உலகில் யுத்தம் நடக்கின்ற நாடுகள் எல்லாம் இந்த முட்டாள்தனத்துக்கு அடிமைப்பட்டவை களாகத் தான் தெரிகின்றன. எகிப்து, சிரியா, லிபியா, யெமன்... என எல்லா நாடுகளிலும் முஸ்லிம்களை வைத்தே தான் முஸ்லிம் நாடுகள் சூறையாடப்படுகின்றன. ஈராக்கிலே 15 இலட்சம், சிரியாவிலே மூன்று இலட்சம் என முஸ்லிம்கள் கணக்கு வழக்கில்லாமல் கொல்லப்படுகிறார்கள், முஸ்லிம்களாலேயே. நலிந்து போன யெமன், மீண்டும் எழ முடியாமல் சிதைக்கப்பட்டு துவம்சம் செய்யப்படுகிறது, முஸ்லிம்களாலேயே.

தங்களுக்குள்ளேயே சண்டை பிடித்துக் கொண்டு தாங்களே அழிந்து போகின்ற இந்த முட்டாள் தனத்துக்கு வழிப்பட்டுத் தான் நாங்களும் செல்லுகிறோமா? ஆசியாவிலேயே படிப்பறிவு அதிகமான வீதத்தைக் கொண்ட நாட்டில் வாழ்கிறோம் என்ற வகையில், ஆசியாவிலேயே படிப்பறிவு அதிகமான முஸ்லிம்களாக நாங்கள் இருக்கிறோம். எங்களிடமும் இதுபோன்ற அறியாமை வளர்வதற்கு நாங்கள் இடம்கொடுக்க முடியுமா? சிறுபான்மைச் சமூகமாக எப்படி சிறப்பாக வாழ்வது என்பதற்கான முன்மாதிரியை ஆசிய முஸ்லிம் சமூகம் அறிவுஜீவிகளான இலங்கை முஸ்லிம்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில், நாங்கள் இப்படி நடந்து கொள்ளலாமா?

முஸ்லிம்களும் சகவாழ்வும் என்ற தொனிப் பொருளில் நடந்த சர்வதேச இஸ்லாமிய மாநாட்டிலே, வந்திருந்த ஏனைய மதத் தலைவர்கள், வெளிநாட்டவர்கள் முன்னிலையிலும், ''பல்வேறு பிரிவுகளாக பிரிந்திருக்கின்ற இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் முதலில் சகவாழ்வு உருவாக்கப்பட வேண்டும்'' என்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோது, இலங்கை முஸ்லிம் சமூகம் வெட்கித் தலைகுனிவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

களத்திலே நடக்கின்ற விடயங்களைப் பார்த்தால் இலங்கை முஸ்லிம்களும் தமக்குள் தாமே அடித்துக் கொள்கின்ற சதி வலையில் சிக்கி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்தச் சமூகத்துக்கு வெளியில் இருந்து எதிரிகள் வரத் தேவையில்லை, சமூகத்துக்குள்ளாலேயே எதிரிகளை உருவாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையை எதிர்ச் சக்திகளுக்கு கொடுப்பது போல உள்ளது. நாங்களே ஜாஹிலிய்யத் சமூகமாக மாறி, உள்ளூர சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறோம். எங்களிடம் இன நல்லிணக்கம், சக வாழ்வுக்கான முன்மாதிரிகளையெல்லாம் எதிர்பார்த்து ஏமாறாதீர்கள் என ஆசிய முஸ்லிம் சமூகத்தின் கன்னத்தில் அறைந்து சொல்வது போல் உள்ளது.

கௌரவமான சமூகமாக வாழ்ந்து, அடுத்த பரம்பரையை தலைநிமிர்ந்து வாழவைப்பதும் தாழ்ந்து போன சமூகமாக இழிவுபட்டிருப்பதும் எங்களது கைகளில் தான் தங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெஸ்ட் போட்டிகளை இரண்டாகப் பிரிப்பதற்கு எதிராக ஆசிய நாடுகள் பலத்த எதிர்ப்பு!

சர்வதேச கிரிக்கட் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளினுடைய சந்திப்பொன்று டுபாயில் அமைந்துள்ள சர்வதேச கிரிக்கட் கவுன்ஸிலின் தலைமையகத்தில் கடந்த 6ம் திகதி ஆரம்பமாகியது. 139 வருட கால வரலாற்றை கொண்ட டெஸ்ட் விளையாட்டை இரண்டு பிரிவுகளாக வேறுபடுத்துவது தொடர்பிலான கலந்துரையாடலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கட்டின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும் டெஸ்ட் போட்டிகளை காண வரும் பார்வையாளர்களை பெருக்குவதற்குமாக ஒரு வருடத்திற்கு முன்னர் இத்தீர்மானம் முன்மொழியப்பட்டிருந்தது. தொலைக்காட்சி உரிமைகளால் கிடைக்கின்ற இலாபத்தில் கூடுதலான பகுதி பலம்பொருந்திய நாடுகளுக்கு பெற்றுக்கொள்வதே இத்தீர்மானத்தின் உள்நோக்கம் என சொல்லப்படுகின்றது.

இலங்கை சார்பில் மேற்படி கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்கு இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி அஷ்லி த சில்வா டுபாய் நோக்கிப் பறந்துள்ளார். எவ்வாறிருப்பினும் மேற்படி கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்திலேயே ஆசிய நாடுகள் அதற்கு பலத்த எதிர்ப்பை தெரிவித்திருந்தன. இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இத்தீர்மானத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டுள்ளதோடு சிம்பாப்வே கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையும் ஆசிய நாடுகளின் கருத்தில் ஒன்றுபட்டுள்ளது.

''இவ்வாறு இரண்டு பிரிவுகளைக் கொண்ட டெஸ்ட் கிரிக்கட்டினை அறிமுகப்படுத்தியுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கை கிரிக்கட் நிர்வாகம் பலத்த எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறது. அத்தகைய முறையினால் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் கீழ் மட்டத்திலுள்ள அணிகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படும் என்பதையும் நாம் குறிப்பிட்டுள்ளோம்'' என்பதாக இலங்கை கிரிக்கட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கட்டினை அவ்வாறு 2 மட்டங்களில் நடாத்துவதனால் தரப்படுத்தலில் கீழ் நிலையிலுள்ள நாடுகளின் வருமான நிலைமைகள் மிக வேகமான முறையில் கீழ் மட்டத்தை நோக்கிச் செல்வதாகவும் டெஸ்ட் போட்டிகளின் போட்டித்தன்மையும் கீழ் நிலைக்குச் செல்வதனால் பார்வையாளர்களின் உற்சாகம் குறைவடைவதாகவும் இலங்கை கிரிக்கட் சபையின் நிலைப்பாடாக உள்ளது.

இலங்கையின் மற்றுமொரு சாதனை தகர்ந்தது

கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி பல்லேகல மைதானத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது T-20 போட்டியில் அபாரமாக ஆடிய அவுஸ்திரேலிய அணி T-20 போட்டி வரலாற்றில் அதிக ஓட்டங்களை குவித்த அணி என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட அவுஸ்திரேலிய அணி மெக்ஸ்வெலின் அபார சதத்துடன் (145 ஓட்டங்கள்) 20 ஓவர்கள் முடிவில் 260 ஓட்டங்களைக் குவித்தது. இதற்கு முதல் இலங்கை கென்யாவுக்கெதிராக 2007ஆம் ஆண்டு 260ஓட்டங்களைக் குவித்ததே சாதனையாக இருந்தது. கடந்த வாரம் இங்கிலாந்து அணி பாக்கிஸ்தானுடனான ஒருநாள் போட்டியில் 444 ஓட்டங்களைக்கு வித்து ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த இலங்கையின் சாதனையை முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

"பங்களாதேஷ் தொடரில் பங்கேற்பேன்" மொயின் அலி

கடந்த ஜூலை டாக்காவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து பாதுகாப்பு காரணங்களுக்காக இங்கிலாந்து அணி பங்களாதேஷுக்கு சென்று விளையாட தயங்கும் நிலையில் அவ்வணியின் சகல துறை ஆட்டக்காரர் மொயின் அலி தான் குறித்த தொடருக்கு தெரிவு செய்யப்பட்டால் நிச்சயம் பங்களாதேஷுடனான கிரிக்கெட் தொடரில் விளையாடுவேன் என தெரிவித்துள்ளார். இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் மூன்று ஒரு நாள் மற்றும் இரண்டு டெஸ்ட்போட்டிகளை கொண்ட கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 7 முதல் நவம்பர் 1 வரை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

OMSEDஇன் தேசிய இளைஞர் மாநாடு

OMSED's National Youth Convention

OMSED Sri Lanka அமைப்பின் தேசிய இளைஞர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (04/09/2016) பாணந்துரை உம்முல் மலீஹா கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்ஸன் ஆரிப் தலைமையில் இடம் பெற்றது. ''போதைப் பொருள் அற்ற தேசத்தை நோக்கி'' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த இளைஞர் மாநாட்டிற்கு பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கலந்து கொண்டதோடு பிரதம பேச்சாளர்களாக ராவய பத்திரிகையின் ஆசிரியர் சட்டத்தரணி K.W. ஜனரன்ஜன மற்றும் சமாதானத்துக்கும் புரிந்துணர்வுக்குமான அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முனீர் முளவ்பர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ் அதிதிகளாக ஜமாஅதுஸ் ஸலாமாவின் தலைவர் அஷ்.ஆஸாத் அப்துல் முஃத், மேர்சி கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ். பௌஸுர் ரஹ்மான், NDDCB யின் பணிப்பாளர் பேராசிரியர் ரவிந்தர பெர்னான்டோ, MFCD யின் தலைவர் ஹனான் ஹுஸைன், தேசிய மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் டாக்டர் சூமி, பாணந்துரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திலக் பல்லியகுருகே ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 1000 இளைஞர்கள் வரை பங்குகொண்ட இந்த மாநாட்டின் இறுதியில் போதைப் பொருளுக்கெதிராக நாடளாவிய ரீதியில் இடம் பெறவுள்ள Signature Campaign ஒன்றும் பிரதம அதிதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடன் யாஹு தூக்கிலிடப்பட வேண்டும்

- முன்னாள் நெதர்லாந்துப் பிரதமர்

இஸ்ரேல் பிரதமர் ஒரு போர்க் குற்றவாளி. அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமான ஹேக்கில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என நெதர்லாந்தின் முன்னாள் பிரதமர் ட்ரைஸ் வேன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் நெடன் யாஹு நெதர்லாந்துடன் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அங்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த சந்தர்ப்பத்திலேயே முன்னாளர் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நெதர்லாந்தின் தலைநகருக்கான நெடன் யாஹுவின் விஜயத்தைக் கண்டித்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். போர்க் குற்றவாளிக்கு இந்த நாட்டிற்கு வருவதற்கு அனுமதியில்லை. ரோம் ஒப்பந்தத்தின்படி ஆக்கிரமிப்பு, சட்டவிரோத எல்லை விரிவாக்கம் என்பன தெளிவான போர்க் குற்றமாகும். அப்படியான குற்றத்தில் ஈடுபட்ட ஒருவரை ஏன் நாம் எமது நாட்டிற்கு அழைக்க வேண்டும். நாம் அவரை நேரடியாக சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதுவே சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

85 வயதான ட்ரைஸ் வேன், பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவான கையொப்ப வேட்டையில் 2014 இல் இருந்து ஈடுபட்டு வருகிறார்.

சர்வதேசப் பார்வை

காஷ்மீரில் இளைஞர்களை இலக்குவைக்கின்றது இராணுவம்

பர்வேஷ் இம்ரோஸ்

இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்மு காஷ்மீரில் முஸ்லிம் இளைஞர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவதாக காஷ்மீர் அரசியல் செயற்பாட்டாளர் பர்வேஸ் இம்ரோஸ் தெரிவித்துள்ளார். கடந்த ஜூலை 8 ஆம் திகதியிலிருந்து இந்திய இராணுவம் ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரிலும் புறநகர் பகுதிகளிலும் மேற்கொண்டு வரும் பாகுபாடற்ற, எல்லை மீறிய இராணுவ நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டவை என இந்திய அரசை அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அல் ஜஸீராவுக்கு பர்வேஷ் வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, காஷ்மீர் விவகாரத்தில் காட்டி வரும் இரட்டை முகத்தையும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார். கடந்த இரண்டு மாத தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் இந்திய இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டவிரோதக் கொலைகள் சாதாரண இளைஞர்களுக்கிடையில் ஆக்கிரமிப்பு இராணுவம் குறித்த ஆவேசத்தைத் தூண்டுவதனால் தொடர்ந்தும் வன்முறைச் சூழலொன்றை இந்திய இராணுவம் உருவாக்கி வருவதாகவும் இம்ரோஸ் கூறியுள்ளார்.

காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்திற்கு இந்தியாவின் வெறெந்தப் பகுதியிலும் இராணுவத்திற்கு இல்லாத சிறப்பதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் படி சட்டவிரோதக் கொலை, ஆட்கடத்தல், பாலியல் பலாத்காரம், கொள்ளை போன்ற எந்த நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய இராணுவத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. மேற்போந்த மனிதாபிமானமற்ற, சட்டவிரோத நடவடிக்கைகள் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டவை என மறைக்கப்பட்டு வருகின்றது. இதுதான் காஷ்மீரில் வன்முறைகள் தொடர்வதற்கான மூல காரணமாகும். பல இளைஞர்களின் கண்கள் திட்டமிட்டு காயப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு மிகுதியான இராணுவம் பயன்படுத்தப்படுகின்றது.

1947 ஆம் ஆண்டிலிருந்து காஷ்மீரின் பெரும் பகுதியை கட்டுப்படுத்தி வரும் இந்தியா, ஐ.நா. விதித்த மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தாமல் தனது மாநிலங்களில் ஒன்றாக காஷ்மீரை கட்டுப்படுத்தி வருகின்றமையே இப்பிரச்சினையின் ஆணிவேராக உள்ளது.

ட்ரம்பிற்கு ஆதரவாக இஸ்ரேலில் பிரச்சாரம்

அமெரிக்க குடியரசுக் கட்சியின் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் குதித்துள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு ஆதரவாக இஸ்ரேலில் தீவிர பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக Middleast Monitor இணையம் தெரிவிக்கின்றது.

இஸ்ரேலில் 3 இலட்சம் அமெரிக்கப் பிரஜைகள் உள்ளனர். கர்னாய் சாம்ரோன் குடியேற்றத் திட்டத்திலேயே பெருமளவிலான அமெரிக்கப் பிரஜைகள் வாழ்கின்றனர். மேற்குக்கரையிலுள்ள இக்குடியேற்றத்தில் வாழும் அமெரிக்கப் பிரஜைகளுக்கிடையில் ட்ரம்பிற்கு ஆதரவான தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன.

கடந்த மே மாதம் அமெரிக்கத் தேர்தல் குறித்து இஸ்ரேலில் நடைபெற்ற கருத்துக் கணிப்பீட்டில் 40 வீதமானோர் ஜனாநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவளித்துள்ளனர். குடியரசுக் கட்சி வேட்பாளர் ட்ரம்பிற்கு 31 வீதமனோர் ஆதரவளித்துள்ளனர்.

அமெரிக்காவில் வாழும் 50 இலட்சம் யூதர்களில் அனேகர் யாருக்கு ஆதரவளிக்கப் போகின்றனர் என்பது இதுவரை மங்கலாகவே உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இரு வேட்பாளர் களும் தீவிர இஸ்ரேல் ஆதரவாளர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

ட்ரம்ப் சமீபத்திய பிரச்சாரக் கூட்டங்களில் பராக் ஒபாமாவை கடுமையாக விமர்சித்து வருவதோடு, தற்காலிகமாக முஸ்லிம்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் கோரி வருகின்றார்.

மீளவும் சவூதி - ஈரான் முறுகல்

2015 இல் மக்காவில் இடம்பெற்ற அனர்த்தம் குறித்து சவூதி ஈராக் ஆகிவற்றிடையே கடும் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. சவூதி அறேபியாவின் தலைமை முப்தி ''தெஹ்ரான் தலைவர்கள் முஸ்லிம்கள் அல்ல'' என்று தீர்ப்பளித்ததை அடுத்து, கடந்த வருடம் ஹஜ் கிரியையில் நூற்றுக்கணக்கான ஈரானியர்கள் உயிரிழந்தமைக்கு சவூதி அதிகாரிகளே காரணம் என்று ஈரான் குற்றம்சாட்டியுள்ளது. ஈரான்-சவூதி ஆகிய இரு நாடுகளும் பிராந்தியத்தில் தம்மை பரஸ்பர வரலாற்றுப் பகையாளிகளாகக் கருதுகின்றன.

6ஆம் திகதி மக்காவில் வெளியான செய்திப் பத்திரிகையொன்றில் சவூதி அறேபியாவின் தலைமை முப்தி அப்துல் அஸீஸ் அஷ்ஷெய்க், ''கடந்த வருட அனர்த்தம் குறித்து ரியாதை குற்றம் சாட்டும் கொமைனியின் விமர்சனம் ஆச்சரியமானதல்ல. ஏனெனில், ஈரானியர்கள் மஜூஸிகளின் வழித்தோன்றல்கள்'' எனத் தெரிவித்துள்ளார். அச்செய்தியில், அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ''நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் முஸ்லிம்கள் அல்லர். அவர்கள் நெருப்பு வணங்கிகளின் (மஜூஸிகளின்) வழித்தோன்றல்கள். இதனால் சுன்னி முஸ்லிம்களுக்கு எதிரான அவர்களது பகைமை மிகவும் பழையது'' எனத் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் நிகாபுக்கு எதிரான கருத்துக் கணிப்பீடு

சுவிட்சர்லாந்தின் சிவில் அமைப்பொன்று சமீபத்தில் அந்நாட்டு மக்களிடையே நிகாபை சுவிட்சர்லாந்தில் தடைசெய்வது குறித்து மேற்கொண்ட கருத்துக் கணிப்பீட்டில் பெருமளவிலானோர் நீக்குவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். 15842 பேர் கருத்துக் கணிப்பீட்டிற்கு தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் அரசியல் கட்சி சார்ந்தோர், பொதுமக்கள், வியாபாரிகள், கல்வித் துறை சார்ந்தோர், சட்டத் துறை சார்ந்தோர் உள்ளடங்குவர்.

கணிப்பீட்டில் கலந்துகொண்டவர்களின் 55 வீதமானோர் நிகாப் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். 16 வீதமானோர் அவ்வாறு தடைசெய்வதுதான் சிறப்பானது என்று கருத்து வெளியிட்டுள்ளனர். ஜேர்மனியர்களை அதிகம் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டோரில் 72 வீதமானோர் நிகாபை தடைசெய்ய வேண்டும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, ஈராக்கின் நகர் மௌசூலில் பெண்கள் புர்கா எனப்படும் நிகாப் அணிவதற்கு அல்லது முகம் மூடுவதற்கு தாஇஷ் எனப்படும் பயங்கரவாத இயக்கம் தடை விதித்துள்ளது. புர்கா அணிந்த நிலையில் தமது தளபதிகள் மீது கடந்த காலங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. எனவேதான் நாம் இதற்குத்

தடைவிதிக்கிறோம் என தாஇஷ் பயங்கரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

தாஇஷின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தப் பகுதியிலிலும் பெண்கள் புர்கா அணிவதற்கும் புகைத்தலுக்கும் தாடி வளர்த்தலுக்கும் கண்டிப்பான தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்பயங்கரவாத இயக்கம் தமது கட்டுப்பட்டில் இருந்த நிலத்தின் 40 வீதமானவற்றை இழந்துள்ளனர்.

யெமனுக்கு உதவுவதற்கு சூடான் தயார்

யெமனின் அரசியல் ஸ்திரத்தைப் பாதுகாத்து, நாட்டில் உறுதியான ஒரு அரசாங்கத்தை நிறுவும் முயற்சிகளுக்கு சூடான் முழு அளவில் ஆதரவளிக்கத் தயார் என சூடான் அறிவித்துள்ளது.

அந்நாட்டின் ஜனாதிபதி ஒமர் பஷீர் சமீபத்தில் யெமன் பிரதமர் அஹ்மத் உபைதை சூடான் தலைநகர் காட்டூமில் சந்தித்த போதே பஷீர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகால . வரலாற்றுத் தொடர்புகள் உள்ளன. கலாச்சார உறவுகளும் வலுவானவை. தற்போது யெமன் எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டு வருவ தற்கு சூடான் தன்னால் முடியுமான அனைத்து உதவிகளையும் வழங்கும் இரு நாடுகளின் அரசியல் ஸ்திரம், இராணுவ உறவுகள் மற்றும் பொருளாதாரத் துறை முன்னேற்றம் அகியவை குறித்து இரு தரப்பும் ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை, மெயன் பிரதமர் உபைத், பஷீருடனான தனது சந்திப்பு நம்பிக்கையளிப்பதாகவும், எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இணைந்து செயல்படுவதற்கன வாய்ப்பு கிட்டியுள்ளது என்றும் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன் நிலமும் சமூகமும்

அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்
தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

நவீன வரலாற்றில் பலஸ்தீன் மீதான யூத ஆக்கிரமிப்பும் காலனித்துவமும்

இஸ்லாமிய ஆட்சிக்காலத்தில் பலஸ்தீனில் யூதர்கள் குறிப்பிடப்படும்படியாக இருக்கவில்லை. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் சுமார் 5000 யூதர்கள்தான் காணப்பட்டார்கள். மிக குறைந்தளவு நிலம்தான் அவர்களிடம் இருந்தது. ஐரோப்பாவில் யூதர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் ஏற்பட்டு ''யூதர்கள் என்ற பிரச்சினை'' அங்கு தோன்றியதுபோது (குறிப்பாக ரஷ்யா, கிழக்கு ஐரோப்பாவில்) யூதர்களின் மறுவாழ்வுக்கான திட்டத்தை சியோனிச இயக்கம் முன்வைத்ததை தொடர்ந்துதான் பலஸ்தீனில் யூத ஆக்கிரமிப்பும் திட்டமிட்ட காலனித்துவமும் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் இறுதி இரு சதாப்தங்களில்தான் இது நிகழ்ந்தது.

பனா, தக்மா போன்ற விவசாய செயலணிகளை அவர்கள் 1878களில் ஆரம்பித்தார்கள். இது தோல்வியடையவும் 1882களில் மீளவும் புதிதாய் ஆரம்பித்தனர்.

இதேபோன்று ''ரீஷியோன் லித்ஸியோன்'',''ஸுக்ரூன்'', ''யஃகூப்'' போன்ற விவசாய திட்டங்களும் 1882களில் ஆரம்பிக்கப்பட்டன. ''கீரன் கைமீத்'' என்ற யூத சமூக நிதியமும் உதவி செய்தது.

உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இறுதிப்பகுதியில் அதாவது 1917, 1918களில் யூதர்களின் 420000 தூனம் நிலங்களை தன்வசப்படுத்தி வைத்திருந்தார்கள். (தூனம்- சதுர கி.மி) இது பலஸ்தீனின் மொத்த பரப்பில் 1.56% ஆகும். இது அமீரிய ராஜ்யத்தின் நிலமாகும். விவசாய பாடசாலைகளை உருவாக்கவே இவை வழங்கப்பட்டன. அக்காலத்தில் உஸ்மானிய ராஜ்யத்தின் நிர்வாக சீர்கேடுகளை நன்கு பயன்படுத்திக்-கொண்டார்கள். தமது கனவுகளையும் நன்கு பயன்படுத்தி கொண்டார்கள். தமது கனவுகளை நனவாக்குவதற்காக ஏமாற்று மோசடி வேலைகளில் ஈடுபட்டதுடன் இலஞ்சமும் கொடுத்தார்கள். 1917-1948 களில் பலஸ்தீனை பிரித்தானியா ஆக்கிரமித்தபோது யூதர்கள் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி கொண்டார்கள். சுமார் 1380000 தூனம் (சதுர கி.மீ) நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். 11948 வரை சுமாராக 1800000 தூனம் (சதுர கி.மீ) நிலத்தை தன்வசப்படுத்திக் கொண்டார்கள்.

இதில் கறுப்பு நிறத்தில் உள்ளது பலஸ்தீன் வெள்ளை நிறத்தில் இருப்பது இஸ்ரேல். 1947 இன் பிறகும் பலஸ்தீன் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு எப்படி உள்ளதென்று.

இது மொத்த நிலத்தின் 6.67% ஆகும். இங்கு 291 யூத குடியேற்ற திட்டங்களை உருவாக்கினார்கள். 1947 நவம்பர் 29ஆம் திகதி பலஸ்தீனை 3ஆக பிரித்து ஐ.நா சபை தீர்மானம் நிறைவேற்றியது. இந்த 181ஆவது தீர்மானத்தின் பிரகாரம் முழு பலஸ்தீனினதும் 54% யூதர்களிடமும் 46% பலஸ்தீனர்களிடமும் 1% சர்வதேச சமூகத்திடமும் வழங்கப்பட்டது. (1% குத்ஸ் பிரதேசமாகும்)

1948 யுத்தத்தில் 77% மான பலஸ்தீன் நிலத்தை யூதர்கள் ஆக்கிரமித்தார்கள். இது 20770km² ஆகும். பலஸ்தீனர்களிடம் 5876km² அளவை கொண்ட மேற்கு கரையும் 363km² அளவை கொண்ட காஸா சிறு நிலப்பரப்புமே எஞ்சியது. பெரும்பாலான பலஸ்தீன கிராமங்களை யூதர்கள் தகர்த்து சின்னாபின்னமாக்கினார்கள். அதன் சொந்தக்குடிகளை நிறுவினார்கள். 1985வரை 756 யூத குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டன. எஞ்சியிருந்த அறபிகளின் சொத்துக்களை சூறையாடினார்கள். 62கிராமங்கள் இவ்வாறு சூரையாடப்பட்டு அதன் உரிமையாளர்கள் ஆயுத முனையில் விரட்டியடிக்கப்பட்டார்கள். இவ்வாறு பல மில்லியன் கணக்கான நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. பெருவாரியான வக்ப் சொத்துக்கள் அவர்களது கண்காணிப்பின் கீழ் சென்றுவிட்டன. 1948ம் ஆண்டில் பலஸ்தீனர்களின் கண்காணிப்பில் வெறும் 4% நிலம்தான் எஞ்சியது. இதனைக்கூட யூதர்கள் ஆக்கிரமிக்கவே முனைகின்றார்கள்.

1967ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற 6நாள் யுத்தத்தில் மேற்குக்கரை, காஸாவையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

(தொடரும்)

பாலைவனச் சிங்கம்

(சுலைமான் ஹாதிர்)

வரலாற்று நவீனம் அங்கம் - 15

ஹமதானி

சட்டம் ஒரு கழுதை

அரச வக்கீலின் கெடுபிடியான கேள்விகளுக்கெல்லாம் சுலைமானின் வக்கீல் உம்மாத் சுப்கி சிறந்த ஆணித்தரமான ஆதாரபூர்வமான பதில்களை வழங்கினார். அத்துடன் எகிப்திய சட்டங்களே சுலைமானை நிரபராதி என நிரூபிக்கின்றன என்பதை அழகிய முறையில் சட்ட வாதம் புரிந்து விளக்கினார்.

இவற்றை எல்லாம் செதுக்கப்பட்ட மூன்று சிலைகள் போன்று அமர்ந்த மூன்று நீதிபதிகளும் அவதானித்துக்(?) கொண்டிருந்தனர். அவர்கள் உம்மாத் சுப்கியின் சட்டவாதத்தைக் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் அரச வக்கீலினதும் உம்மாத் சுப்கியினதும் சட்டவாதம் நிறுத்தப்பட்டது. தலைமை நீதிபதி நீதிமன்ற சேவகர் ஒருவரை அழைத்து காதில் ஏதோ ''குசு குசு'' ஊதினார். பின் அந்த சேவகர் வெளியே இருந்த இராணுவ அதிகாரியை நோக்கிச் சென்றார். நீதிமன்றத்தில் சில கணங்கள் மயான அமைதி குடிகொண்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் மக்கள் மன்றம் கலைக்கப்பட்டு ஜனங்களை வெளியேறுமாறு இராணுவத்தினர் பணித்துக் கொண்டிருந்தனர். சுலைமான் ஹாதிரின் தாயும் சகோதர்களும் மாத்திரம் அங்கே நிற்க அனுமதிக்கப்பட்டனர். என்றுமில்லாதவாறு ஜனங்கள் கலைக்கப்பட்டு அனுப்பப்பட்டது அனைவருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது ''இந்த வழக்கில் ஏதோ சூது நடக்கப்போகிறது போலும்'' என்று ஜனங்கள் தமக்குள் கதைத்தவாறு கலைந்து சென்றனர்.

இப்பொழுது பிரதம நீதிபதி(?) எழுந்துபேசலானார். எதிர்தரப்பு வாதியான சுலைமான் ஹாதிர் மீது ஏழு யூதர்களைக் கொன்ற கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது. அந்த ஏழு பேரும் இஸ்ரவேலியப் பிரஜைகள் என்பதை அறிவீர்கள். இந்த வழக்கை நாம் மூவரும் ஆராய்ந்ததிலிருந்து(?) அவர் இரண்டு குற்றங்களை இழைத்துள்ளார் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

1. இராணுவத் தளபதியின் உத்தரவின்றி, சட்ட விரோதமாகத் துப்பாக்கியைப் பிரயோகித்தமை.

2. கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட எகிப்தின் சிநேகபூர்வ நாடான இஸ்ரவேலின் ஏழு நிரபராதி உல்லாசப் பயணிகளைக் கொன்றமை.

கேம்ப்டேவிட் ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் இணங்கியுள்ள ஷரத்துக்களில் ஒன்றான, இரு நாட்டுப் பிரஜைகளுக்கும் இரு நாடுகளிலும் சுதந்திரமாக நடமாடலாம் என்பதற்கும் எமது நாட்டின் அரசியல் சட்டயாப்பின் ஷரத்துகளுக்கும் மாறாக சுலைமான் ஹாதிரின் செயல் அமைந்திருக்கிறது. இதன்படி இந்நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் காண்கிறது. அதற்காக அவருக்கு மரண தண்டனையை விதிக்கிறது. இன்னும் இரு தினங்களில் அது நிறைவேற்றப்படும் என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

நீதிமன்றம் முழுவதும் சுடலை மௌனம் நிலவியது. அந்தத் தீர்ப்பைக் கேட்டதும் சட்டத்தரணி உம்மாத் சுப்கியின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல என்று வழிந்தது. சிறுபிள்ளை போல் கதறி அழவேண்டும் போலிருந்தது அவருக்கு. சுலைமானை பல வருடங்களாக அவர் அறிந்திருந்தார். தன் சொந்த நடத்தையிலும் மார்க்க விடயங்களிலும் அவன் தூய்மையாக நடப்பதை அறிந்து வைத்திருந்தார். அதனால் அவரைப் பற்றி ஒரு தனிமதிப்பு அவரது உள்ளத்தில் இடம்பெற்றிருந்தது. பால் மனம் கொண்ட சுலைமான் ஹாதிர் அநீதியின் கொடுங்கரங்களினால் மரண தண்டனைக்கு ஆளாகப் போவதை நினைக்க அவரது நெஞ்சம் நெக்குறுகியது.

ஆனால், சுலைமான் ஹாதிரோ இந்தத் தீர்ப்பினால் எந்தப் பதற்றத்திற்கும் உட்படவில்லை. இந்தத் தீர்ப்பை ஏற்கனவே எதிர்பார்த்தவன் போன்று கம்பீரமாகக் கூண்டில் நின்றான். அந்த முடிவை அவன் பேறாகக் கருதி இருக்க வேண்டும். அதனால் தான் மலர்ந்த முகத்துடன் நின்றான் போலும்.

முன்னால் இருந்த நீதிபதிகள் மூவரையும் ஒரு முறை அர்த்த புஷ்டியுடன் பார்த்து அவர்களைப் பற்றி தனது உள்ளத்திலே எடைபோட்டுக் கொண்டான். அப்பொழுது பிரதம நீதிபதி சுலைமானை நோக்கி, இந்தத் தீர்ப்பு பற்றி உமது இறுதி வார்த்தைகளைக் கூறலாம்!'' என்றார். இப்பொழுது சுலைமான் பேசலானான். ஆனால் உள்ளத்தினால் பேசினான். அதனாலே தான் அவனது நாவிலிருந்து சொற்கள் மலர்ந்து கருத்து மணக்க உயிரோட்டமுள்ளதாக வெளிப்பட்டது. மல்லிகைச் செடியில் பூக்கும் எல்லாப் பூக்களும் மல்லிகைக்கே உரியதான மணம் இருப்பதைப் போல சுலைமான் ஹாதிரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவனது உள்ளத்தில் பிறந்து நாவால் வெளிப்பட்டது என்பதாலேயே ஓர் உயிரோட்டம் இருந்தது.

''அக்கிரமக்காரர்களின் முன்னால் அஞ்சாமல் உண்மைகளைக் கூற வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவனின் சட்டங்களுக்கு மாற்றமான இந்த அநியாயக்கார மனித சட்டங்கள் இன்று என்னை இங்கு குற்றவாளியாக நிறுத்தியுள்ளது. எனக்கு நீதியான தீர்ப்பு வழங்கியதாகக் கூறிக் கொள்ளும் அநியாயக்காரர்களே நான் கூறுவதைக் கேளுங்கள், இவ்வாறு நான் பேசுவதை வைத்து அக்கிரமமான மனித சட்டங்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க விளைவதாக யாரும் கருதிக் கொள்ளக்கூடாது.

இந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் நான் முற்றிலும் நிரபராதி! எனது பரிசுத்தமான மனச்சாட்சியை மதிப்பிடுவதற்கு இந்த மண்ணுலகத்து மதிப்பீடுகள் போதாது. போதவே போதாது. அப்படியிருக்க மண்ணுலகத்திலும் நீதியான மனித மூளையின் மதிப்பீடுகளை விடுத்து அக்கிரமக்காரர்களின் மதிப்பீடுகளை வைத்து எனக்குத் தீர்ப்பு வழங்கிய நீங்கள் எல்லாம் நீதிபதிகளே அல்ல! உங்களின் தீர்ப்பு இந்த உலகத்திற்கே!'' என்று சுலைமான் கூறிவிட்டு பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதினான்.

فَقْضِ مَا أَنْتَ بِقَاضٍ إِنَّمَا تَقْضِيْ هَذِهِ الْحَيَاةَ الدُّنْيَا...

பின்பு மீண்டும் தொடர்ந்து பேசினான். இறை சட்டங்களே உண்மையான சட்டங்கள். நீங்கள் தீர்ப்புக் கூறும் மனித சட்டங்கள் சட்டங்களே அல்ல. அவைகள் கழுதைகளே. ஏனெனில் இங்கே மனித சட்டங்களை விட்டுவிட்டு ஷரீஅத் சட்டங்களின் படி எனது வக்கீல் என்னை நிரபராதி என நிரூபித்தபோது, முன்னால் செல்பவனை முறைத்துப் பார்க்கும் கழுதையைப் போல, அதனை ஏற்கமுடியாது என சீறிப்பாய்ந்தீர்கள். அப்பொழுது மனித சட்டங்களின் பின்னால் நின்று கூட எனது வக்கீல் என்கொலை குற்றமற்றது என நிரூபித்துவிட்டார். அப்பொழுது கூட பின்னால் நின்று கூட பின்னால் செல்பனை உதைத்தெறியும் கழுதையைப்போல அவரின் வாத்தை கவனத்தில் கொள்ளாது என்னைக் குற்றவாளியாக்கிவிட்டது உங்கள் சட்டம். ஆம் அவைகள் கழுதைகள். உங்களை சுமக்கத்தான் அவை உதவும். என சுலைமான் ஹாதிர் காரசாரமாக ஆனால் மரியாதையாக பேசிக்கொண்டிருந்த போது நீதிபதி (?) குறுக்கிட்டு

''போதும் உமது பேச்சை நிறுத்தும்! தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் ஆகிவிடுவான் போலிருக்கு..! இராணுவத்தினரே இவனை இப்பொழுதே அழைத்துச் சென்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெப்போ நகர் மீது குளோரின் வாயுத் தாக்குதல்

றவூப் ஸெய்ன்

சிரியாவில் அரச படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ள கிழக்கு அலெப்போ நகரின் அயல் பகுதியான அல்ஸுக்காரா மீது இராணுவம் குளோரின் வாயு அடங்கிய பீப்பாய் குண்டுகளை (Barrel Bombs) வீசியுள்ளதால் பலரின் நிலைமை பரிதாபத்திற்குரியதாக மாறியுள்ளதாக அலெப்போ ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அல்ஜஸீரா செய்தியாளரும் இதனை உறுதிசெய்துள்ளார்.

நாளாந்தம் சிரியாவில் போர்க்கள நிலைமைகளை அறிக்கைப்படுத்தும் லண்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய நிறுவனமும் இத்தகவலை ஊர்ஜிதம் செய்துள்ளது.

சிரிய சிவில் பாதுகாப்பு அமைப்பும் மருத்துவக் கழகமும் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள புகைப்படங்களில் குழந்தைகள் மூச்செடுக்க முடியாமல் திணறும் காட்சிகள் மனதை உருக வைக்கின்றன. பெரும்பாலான குழந்தைகளுக்கு ஒட்சிசன் முகமூடிகள் அணியப்பட்டுள்ளன.

சமீபத்தில் அலெப்போ நகரை கிளர்ச்சியாளர்கள் முழுமையாகக் கட்டுப்படுத்திய பின்னர் சிரியாவின் ஷீஆ அரசாங்கம் அந்நகர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டது. விமானத் தாக்குதல்களில் பெரும்பாலும் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்களை சிரியாவின் அரச இராணுவம் பயன்படுத்தி வருகின்றமை ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டது.

2014, 2015 ஆம் ஆண்டுகளில் சிரிய இராணுவம் பொது மக்கள் மீது இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியிருந்ததை ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதனைக் குழு உறுதிசெய்திருந்தது. சென்ற மாதத்திலும் சிரியாவின் அரச படையினர் அலெப்போ நகர் மீது குளோரின் வாயுத் தாக்குதலை நடத்தியது. இப்போது நான்காவது முறையாக குளோரின் வாயு சேர்க்கப்பட்ட பீப்பாய்க் குண்டுகள் மக்கள் மீது வானிலிருந்து பொழியப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இது குறித்து ஆராயவுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

பொதுவாக சர்வதேச ரீதியில் தடுக்கப்பட்ட இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவது போர்க் குற்றமாகும். ஏற்கனவே இரு முறை இது ஊர்ஜிதம் செய்யப்பட்டும் ஐ.நா. எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது கிழக்கு அலெப்போவை இரண்டாவது முறை கிளர்ச்சியாளர்களிடமிருந்து கைப்பற்றியுள்ள சிரிய இராணுவத்திற்கு ஈரான், ஈராக், சிரியா, மற்றும் லெபனானைத் தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லாஹ் இய்க்கம் நேரடியாக ஆதரவளித்து வருகின்றது. இதன் மூலம் அந் நகரம் ஐந்து நாடுகளது படை களின் முற்றுகையின் கீழ் வந் துள்ளது.

வான் வழியாகவும் தரை வழியாகவும் அந்நகர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தான்தேன்றித்தனமான இராணுவத் தாக்குதல்கள், பெருமளவிலான குழந்தைகள், பெண்கள், முதியோர்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

தொடர்ச்சியான குறுக்குச் சமரில் சிக்கியுள்ள மக்களுக்கு உடனடித் தேவையாகவுள்ள உணவு, மருத்துவம் போன்ற நிவாரணங்களை விநியோகிப்பதற்கும் சிரியாவின் அரசு இடையூறுகளை விளைவித்து வருகின்றது. இதனால் பெருமளவிலான மனித உயிர்கள் அழிவதற்கான வாய்ப்புள்ளது என்று மனித உரிமை நிறுவனங்கள் குற்றம் சாட்டுகின்றன.

கடந்த சில மாதங்களில் பெருமளவிலான சிறுமியர்கள் இந்நகரில் கொல்லப்பட்டுள்ளனர். 3 இலட்சம் சிவிலியன்கள் இந்நகரில் முற்றுகையின் கீழ் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2011 இல் சிரியாவின் அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்கள் மேற்கொண்ட அமைதிப் புரட்சிக்கு எதிராகவே இராணுவம் கடும் வன்முறைகளைக் கட்டவிழ்த்தது. இதனால், மக்கள் புரட்சி ஆயுதமேந்தும் கிளர்ச்சியாக மாற்றமடைந்தது. அஹ்ரா ருஷ் ஷாம் எனப்படும் ஆயுத இயக்கம் முன்னணிக்கு வந்தது.

சிரியாவின் அரசாங்கம் 10 வீத அலவி ஷீஆக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாகும். இது கடந்த நான்கு தசாப்தங்களாக 90 வீத சுன்னி முஸ்லிம்களை அடக்கி வருகின்றது. பாரிய பொருளாதாரப் பின்னடைவு, வேலையில்லாப் பிரச்சினை, அரசியல் சுதந்திரமின்மை போன்ற பல்வேறு காரணங்களை முன்னிறுத்தியே மக்கள் புரட்சி ஆரம்பித்தது. துரதிஷ்டவசமாக ஷீஆ அரசுக்கு ஆதரவாக ஈரான், ஈராக், லெபனான் படைகள் களமிறங்கியுள்ளன.

போதாக் குறைக்கு ரஷ்ய விமானங்களும் புரட்சியாளர்களை இலக்கு வைக்கின்றன. இதனால், இரண்டு கோடி மக்கள் தொகையில் சுமார் அரை வாசிப் பேர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். இன்னொரு பங்கினர் உள்நாட்டில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இதுவரை நான்கரை இலட்சம் சிரிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் என்ற பெயரில் பொது மக்கள் இலக்கு வைத்து கொல்லப்படுகின்றனர். சர்வதேச சமூகமோ மௌனம் காக்கின்றது.

ரோஹிங்யா முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஆங்சான் சூகி தீர்வு காண்பாரா?

கடந்த பல வருடங்களாக உலகளவில் பேசப்பட்டு வரும் மியன்மாரின் ரோஹிங்யா இன முஸ்லிம்களது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆங்சான் சூகி முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கென ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் கொபி அனானை அவரது அரசாங்கம் நியமித்துள்ளதாக மியன்மார் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

7 கோடி மக்களைக் கொண்டுள்ள மியன்மார் பெரும்பான்மை பௌத்த நாடாகும். அதில் ரேக்கின் எனப்படும் மாநிலத்தில் வாழும் ரோஹிங்யா இன முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் நிகழ்ந்து வரும் வன்முறைகளால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் அகதிகளாய் வெளியேறியும் வருகின்றனர்.

இரு இனத்தவர்களிடையேயும் பேச்சுவார்த்தைகளை நடத்தி, பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு கொபி அனானை சூகி நியமித்துள்ளார். தற்போது அவர் ரேக்கின் மாநிலத்திலுள்ள அரசியல் தலைவர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றார். எனினும், கடந்த வாரம் சித்திவே விமான நிலையத்தில் அனான் வந்திறங்கியபோது ரேக்கின் மாநில பௌத்த இயக்கங்கள் அவருக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தன.

கொபி அனானின் ஆணைக் குழுவை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். வெளிநாட்டவர்களுக்கு இங்கு இடமில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷமெழுப்பினர். ரோஹிங்யா மக்களுக்கு குடியுரிமை இல்லை என்று அந் நாட்டின் இராணுவ அரசாங்கம் கூறிவந்தது. வன்முறைகளுக்கும் ஆதரவளித்தது.

முஸ்லிம்களுக்கு குடியுரிமை இல்லை என்ற கருத்தில் உடன்பட்டிருந்த ஆங்சான் சூகி, தற்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

4 மில்லியன் ரோஹிங்யா முஸ்லிம்கள் ரேக்கின் மாநிலத்தில் செறிந்து வாழ்கின்றனர். கல்வியறிவு, பொருளாத வளர்ச்சி என்பவற்றில் மிகப் பின்தங்கிய மாநிலம் இதுவே. மதத் தீவிரவாதம் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக உள்ள மாநிலமாகவும் இதுவே கருதப்படுகின்றது.

முன்னைய ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு வசதியாக இனவாதத்தைத்

தூண்டி வந்தனர். குடியுரிமை மறுக்கப்பட்டதோடு, நிலவுரிமை, உயர் தொழில் உரிமை, கல்வியுரிமை, நடமாடும் உரிமை என்பனவும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டு வந்தன.

அங்கு அரச ஆதரவுடன் அவ்வப்போது அரங்கேற்றப்பட்ட இனக்கலவரங்களில் முஸ்லிம்கள் நிராயுதபாணிகளாவே நின்றனர். அதனால் பெரும் சொத்திழப்பும் மனித அழிவும் ஏற்பட்டது.

இவ்வினக்கலவரங்கள் இதுவரை முற்றாக ஓய்ந்து விட்டதாகக் கூற முடியாது. எந்த நேரத்திலும் முஸ்லிம்கள் கொல்லப்படுவதும் விரட்டப்படுவதுமான சூழல் அங்கு நீடிக்கின்றது.

[illegible]

களான இவர்கள் பல நூற்றாண்டுகளாக மியன்மாரில் வாழ்ந்து வருகின்றனர். சுகாதாரம், கல்வி, மருத்துவம் என்பவற்றில் ஒப்பீட்டு ரீதியில் மிகப் பின்தங்கிய சமூகமாக இவர்களே உள்ளனர்.

சர்வதேச அறபு இஸ்லாமிய சமூகத்தின் ஆதரவும் அவர்களுக்கு இல்லை. உலகப் பார்வையிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு சிறுபான்மையான இவர்களின் பிரச்சினைகள் போதிய சர்வதேச கவனயீர்ப்பைப் பெறவில்லை.

மியன்மாரில் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற சூகியின் கட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளது. ஏற்கனவே அந்நாட்டில் 17 ஆயுதக் குழுக்கள் வெவ்வெறான மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதிலும் சூகி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தை உருவாக்கும் நோக்கிலேயே ரோஹிங்யா பிரச்சினையையும் அவர் கையில் எடுத்துள்ளார். அதில் எந்தளவு தூரம் நேர்மையாக இருக்கப் போகின்றார் என்பதே இப்போது எழும் கேள்வியாகும்.

ஐரோப்பாவின் கரையினிலே...

துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 04

துருக்கிய உஸ்மானியர்களின் ஆட்சி அன்றைய ஐரோப்பிய நாடுகளில் நிலவிய ஆட்சியைக் காட்டிலும் பல்வேறு வழிகளில் சிறந்து விளங்கியது. ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் அனைவரும் எவ்விதப் பாகுபாடுமின்றி சமத்துவமாக நடத்தப்பட்டனர். மத சகிப்புத் தன்மை நிலவியது. அடிப்படை உரிமைகள் தாராளமாக வழங்கப்பட்டன. பொருளாதார ரீதியான செழிப்பும், அறிவியற் துறை சார்ந்த வளர்ச்சியும் மேலோங்கியிருந்தது.

ரோமானியர்கள் பல நூற்றாண்டு காலம் முயற்சித்துக் கட்டியெழுப்பிய பைசாந்திய நாகரிகத்தை விட உஸ்மானியர்கள் உருவாக்கி இஸ்லாமிய நாகரிகம் ஐரோப்பியர்களை வெகுவாகக் கவர்ந்தது. முஸ்லிம் உலகுடன் ஐரோப்பாவுடனான உறவுகள் வலுப் பெற்றன. அரசியல், வணிக உறவுகள் விரிவடைந்தன. வியாபாரம் வளர்ச்சியடைந்து செல்வம் கொழித்தது. துருக்கியிலும் அதன் ஆட்சிப் பிரதேசங்களிலும் நெடுஞ்சாலைகளும் பாதைகளும் அமைக்கப்பட்டு, நகரங்களுக்கிடையிலான போக்குவரத்து சுலபமாக்கப்பட்டது.

இதேவேளை, ஐரோப்பியர்களிடையே இஸ்லாமிய பிரச்சாரப் படையணியொன்று அமைதியாக இயங்கி வந்தது. கிராமங்களிலும் நகரங்களிலும் அவர்களின் பிரச்சாரத்தின்

பல்வேறு தொழில்களைச் செய்து வந்த ஐரோப்பியர் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்டு இஸ்லாத்தை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. துருக்கிய சுல்தான் அப்துல் ஹமீத் காலத்தில் லெபனானில் இருந்த 18 சிற்றரசுகளும் இஸ்லாத்தில் இணைந்தன. அச்சிற்றரசர்களுக்கு இஸ்லாத்தில் இணைந்ததன் பின்னர் உயர் பதவிகள் அளிக்கப்பட்டன. 1423 இல் அல்பேனிய மன்னர் முஸ்லிமாகி, சிக்கந்தர் பேக் என்று பெயர் வைத்துக் கொண்டார். 1610 இல் அல்பேனியாவின் சனத்தொகையில் கிறிஸ்தவர்களை விட முஸ்லிம்களே மிகுதியாக இருந்தனர்.

வெகு விரைவாக கிறிஸ்தவர்களைச் சிறுபான்மையாக்கும் அளவு முஸ்லிம்கள் பெருகினர். இந்த மாறுதலுக்கு நிர்ப்பந்தம் எதுவும் காரணமாக இருக்கவில்லை. இதேபோன்று கிறிஸ்தவர்கள் தமது பெண்களை தாராளமாக முஸ்லிம்களுக்கு மணம் செய்து வைத்தனர். அதனூடாகவும் இஸ்லாம் அல்பேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவியது.

17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அல்பேனியாவின் ஒன்டிவாரி எனும் நகரத்தில் 2000 கத்தோலிக்கர்களே வாழ்ந்தனர். அந்நூற்றாண்டின் இறுதியில் அவர்களும் மறைந்தனர். அங்கிருந்த ஒரே திருச்சபையும் மறைந்து விட்டது. இன்று அல்பேனியா ஒரு முஸ்லிம் பெரும்பான்மை நாடாக விளங்குகின்றது.

சேர்பிய நாட்டு மன்னர் துருக்கிய சுல்தான் பாயசீதுக்கு தன் மகளை மணம் செய்து வைத்தார். ஹங்கேரியில் 30 கிராமங்களில் முஸ்லிம்களே வாழ்ந்து வந்தனர். 1340 இல் ஹங்கேரிய மன்னர் சார்ல்ஸ் ரொபட் என்பவர் அங்கிருந்த முஸ்லிம்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக மாற வேண்டும் அல்லது நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என பிறப்பித்த கடும் ஆணையினால் நாட்டை விட்டு வெளியேறினர். அதனால்தான் இன்று ஹங்கேரியில் முஸ்லிம்களது எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது.

சேர்பிய நாட்டில் அனேகர் தாமாகவே விரும்பி வந்து இஸ்லாத்தைத் தழுவினர். அவர்களுள் சிலர் தூய இஸ்லாமிய பிரச்சாரகர்களாகவும் மாறினர்.

பொஸ்னியா பெரும்பான்மை கிறிஸ்தவ நாடு. அங்கு Bogomiles எனப்படும் கிறிஸ்தவப் பிரிவினர் ஏனையோரால் கொடுமைப்படுத்தப்பட்டு வந்தனர். அவர்கள் துருக்கிய சுல்தான் 2ஆம் முஹம்மதிடம் பொஸ்னியாவை நோக்கிப் படையெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். சுல்தானுக்கு உதவிதோடு, பின்னர் முஸ்லிம்களாகவும் மாறினர். அவர்களுக்கு உயர் பதவிகளும் வழங்கப்பட்டன. அவர்களது பெருக்கம் காரணமாக காலப்போக்கில் பொஸ்னியா பெரும்பான்மை முஸ்லிம் நாடாக மாறியது. இன்று அது ஐரோப்பாவிலுள்ள மூன்று முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் ஒன்றாகும். அல்பேனியா, பொஸ்னியா ஹெசகோவினா, துருக்கி என்பனவே அவை. கொசோவோ இன்னும் முழு அளவிலான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஹாரியில் கலையும் தலைமைத்துவக் கனவு

ஸலாஹுத்தீன்



இலங்கை முஸ்லிம் சமூகம் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான பொறிமுறை என்ன? யாரிடம் போய் முறையிடுவது, யார் மத்தியஸ்தம் வகிப்பது என்கிற விவஸ்தையின்றி அது நாளும் பொழுதும் கட்டுக் கோப்பை இழந்து வருகிறது. அரசியலில் அதற்கென ஒரு தலைமை இல்லை. பொது வாழ்க்கையில் அதற்கென ஒரு தலைமை இல்லை. ஆன்மீகத்துக்கென ஒரு தலைமை இருந்தாலும் அது சமூகம் தழுவியதாக இல்லை என்பதைத் தான் அண்மைய திஹாரிய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

திஹாரியில் நான்கு ஜும்ஆப் பள்ளிவாசல்கள். இந்த நான்கு பள்ளிவாசல்களுமே அல்குர்ஆன், சுன்னாவுக்கு முரணானது என ஐந்தாவது பள்ளிவாசல் முளைக்கிறது. இந்த நான்கு பள்ளிவாசல்களதும் அல்குர்ஆன் சுன்னாவுக்கு முரணான விவகாரங்கள் என்ன, அவை தொடர்பிலான மார்க்கத் தீர்ப்புக்கள் என்ன, ஊரின் கட்டுக் கோப்பிலிருந்து பிரிந்து செல்லுமளவுக்கு இவற்றில் உள்ள நியாயங்கள் என்ன போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு விளக்கம் அளிக்கப்படாமையே பள்ளிவாசல்கள் ஐந்து ஆறாகப் பெருகக் காரணமாக இருந்து வருகிறது.

இந்த விடயங்களில் தலையிட்டு மத்தியஸ்தம் வகிக்க வேண்டியது யார்? திஹாரிய ஜம்இய்யதுல் உலமா தான் ஊரின் மார்க்க விவகாரங்களில் தீர்ப்புச் சொல்லுகின்ற சபையாக இருக்குமென்றிருந்தால் பள்ளிவாசல் உருவாவதைத் தடுப்பதற்கு முன்னர், முரண்பாடான விவகாரங்களில் உடன்பாடு காண்பதற்கு அந்தச் சபை என்ன நடவடிக்கைகளை எடுத்தது?

தொழுகின்ற முறையில், மையித்து அடக்குகின்ற முறையில், திருமணம் நடத்துகின்ற முறையில் என புதிதாகப் புகுத்தப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் வழிகேடுகள். வழிகேடர்கள் எல்லோரும் நரகவாதிகள். நரகவாதிகளின் பின்னால் இருந்து தொழ முடியாது என்பது தான் இன்னொரு பள்ளிவாசல் பிரிவதற்கான காரணம் என்றிருந்தால் இது தொடர்பில் உலமாக்களிடையே ஒருமித்த கருத்தொன்றுக்கு வரச் செய்கின்ற பணியை உலமாக்களின் சபை செய்திருக்க வேண்டும்.

அதற்குப் பின்னர் வருகின்ற தீர்ப்பைத் தான் மக்களிடம் விட வேண்டும். இரண்டு தரப்பாக இருந்து முரண்பட்டுக் கொள்கின்ற உலமாக்களில் யார் சரி என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை மக்களிடம் விட்டு விட்டால் அவர்கள் தமக்குத் தெரிந்த விதத்தில் கை கால்களால் தான் தீர்ப்புச் சொல்லுவார்கள். இது விடயத்தில் மக்களை வழிநடத்த வேண்டியது உலமாக்களின் பணியாகும்.

இதை விடுத்து மக்கள் கட்டுக் கடங்காமல் நடந்து கொண்டார்கள் என்று சொல்லுவது உலமாக்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்வதற்கு சமூகம் தயாராக இல்லை என்று செ ால்ல வருவதன் வெளிப்பாடாகும்.

ஷாபி மத்ஹபின் படி தான் செயலாற்றுவோம் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் யாப்பு சொல்கிறது. ஷாபி மத்ஹபின் படி இன்னொரு ஜும்ஆ பள்ளிவாசல் திஹாரியில் உருவாவதற்கு வாய்ப்பில்லை என்ற நியாயம் முன்வைக்கப்பட்டாலும், ஏன் ஏனைய விடயங்களிலும் ஜம்இய்யதுல் உலமா ஷாபி மத்ஹபை பின்பற்றுவதில்லை என்ற கேள்வி உலமாக்களாலேயே எழுப்படுகிறது. பெண்கள் முகத்தைத் திறக்கலாம், ஐவேளைத் தொழுகைக்குப் பின்னர் கூட்டாக துஆ ஓத வேண்டிய அவசியம் இல்லை போன்ற ஷாபி மத்ஹப் சொல்லுகின்ற விடயங்களை ஏன் ஜம்இய்யதுல் உலமா பின்பற்றுவதில்லை என்றெல்லாம் உலமாக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்ற கேள்விகள் ஜம்இய்யதுல் உலமாவை பக்கச் சார்பானதாகப் பார்ப்பதற்கு மக்களுக்கு ஏதுவாகின்றன. இவற்றை ஜம்இய்யதுல் உலமா தான் முன்வந்து தீர்த்து வைக்க வேண்டும்.

திஹாரியவில் பல மத்ரஸாக்கள் இயங்கி வருகின்றன. உலமாக்கள் இங்கு நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே ஜம்இய்யதுல் உலமாவின் அங்கத்தவர்கள் அல்ல. அண்மையில் உருவாக்கப்பட்ட இத்திஹாதுல் உலமாஉஸ் ஸலபிய்யீன் தனது கருத்துக்களுடன் இயைபான உலமாக்களை இணைத்துக் கொண்டு தனியாக இயங்குகின்றது. இந்த நிலையில் ஒட்டு மொத்த உலமாக்களினதும் சபையாக ஜம்மிய்யதுல் உலமாவை கருத முடியுமா என்பது தற்பொழுது கேள்விக்குறியாகிறது.

திஹாரியில் இயங்குகின்ற ஐந்து ஜும்ஆப் பள்ளிவாசல்களும் ஏதோ ஒரு சிந்தனையின் தனிப்பட்ட ஆதிக்கத்தின் கீழேயே இயங்குகின்றன. முழு முஸ்லிம் சமூகத்துக்குமான பள்ளிவாசல், அனைத்து சிந்தனைப் பிரிவுகளையும் உள்ளடக்கியதான பொதுவான பள்ளிவாசல் திஹாரியிலே இல்லை. திஹாரிய ஜம்இய்யதுல் உலமாவில் அனைத்து சிந்தனைப் பிரிவினரும் ஒன்றாக இயங்குகிறார்கள் என்று சொல்லிக் கொண்டபோதும் இந்த ஒன்றிப்பை கீழே நகர்த்துவதில் ஜம்இய்யதுல் உலமா வெற்றி பெறவில்லை. இதே போன்று அனைத்து சிந்தனைப் பிரிவினரும் இணைந்து ஒன்றாக நிர்வகிக்கின்ற பள்ளிவாசல்கள் எதுவும் ஊரிலே இல்லை. சமூகத்தை அரவணைத்துச் செல்வதற்கான ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலில் உள்ள போதாமையையே இது எடுத்துக் காட்டுகிறது.

இந்த வகையில் வெவ்வேறான கருத்துக்களுடன் உலமாக்கள் செயற்பட்ட போதிலும் ஊருடைய பொது விவகாரங்களில், ஊருடைய கட்டுக் கோப்பைப் பேணுவதில் பொதுவான உடன்பாடொன்றுக்கு உலமாக்கள் வர வேண்டும். பள்ளிகள் பிரிந்து செல்வதற்கான அனுமதி கொடுக்கின்ற அல்லது அனுமதி மறுக்கின்ற அலுவலகமாகவல்லாது, சமூகத்தை ஒருங்கிணைத்து வெற்றியின் பால் அழைத்துச் செல்லுகின்ற சபையாக உலமா சபை பரிணாமம் எடுக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான விடயங்களில் தைரியமாக முன்னின்று வழிநடத்தக் கூடிய பலத்தை ஜம்இய்யா பெற வேண்டும். அல்லாத பட்சத்தில் ஊருடைய தலைமைப் பொறுப்பு உலமாக்களிடம் இருந்து தூரச் சென்று விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மௌனம்தான் பதிலென்றிருந்தால்...!

வெலிகம ஹிப்ஷி தௌபீக்

ஒரு மூடன் கேள்விகளைக் கேட்டால், அதற்கு மௌனம்தான் மிக நல்ல பதில் என்பது பொன்மொழி. அதனால் இது எல்லா நிலைகளிலும் சரிப்பட்டு வராது. மூடன் யார்? வம்பன் யார்? மடையன் யார்? என்று அறிய முடியாத கால கட்டம் இது.

எதற்கெடுத்தாலும் முஸ்லிம்களையும், உலமா சபையையும் சீண்டிப் பார்க்கும் பொதுபலசேனா மீண்டும் ஒரு மறை திருவாய் மலர்ந்திருக்கிறது. உலமா சபைக்கும் ஐ.எஸ். இயக்கத்திற்கும் உறவு இருப்பதாக கிருளப்பனை பௌத்த நிலையத்தில் நடந்த கூட்டமொன்றில் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறியிருந்ததாக பத்திரிகைகளில் காண நேர்ந்தது. வழமை போல உலமா சபையும் பதிலளிக்காமல் மௌனம் காத்து வருவது கவலைக்குரியது.

நபி(ஸல்) அவர்களுக்கு எதிரிகள் பல்வேறு துன்பங்களை, இன்னல்களைக் கொடுத்தபோது, அவர்கள் சகித்தார்கள், எதிரிகளை மன்னித்தார்கள். ஆனால், இஸ்லாத்திற்கு வசைபாடும்போது அவர்கள் மௌனம் காக்கவில்லை. எதிரிகள் கவிதை பாடியபோது, நபிகளார் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரழி) அவர்களை வரவழைத்து பதில் கவி பாடி பதிலளித்தமை வரலாறு.

உலமாக்கள் சொல்வதெல்லாம் உண்மைத் தவிர வேறொன்றுமில்லை என்றும், இனவாதிகள் சொல்வதெல்லாம் பொய்யே பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை என்றும் நாம் நம்பினாலும், மௌனம் காத்தலானது சிலவேளை தலை கீழாகவும் நம்ப வைக்கலாம் அல்லவா?

உலமா சபைக்கு ஐ.எஸ் இயக்கத்தோடு உறவு உண்டு என்றும் ஹலால் சான்றிதழ் மூலம் பெறப்படும் நிதி ஐ.எஸ். இற்கு போவதாகவும் அபூ சைலான் குடும்பத்திற்கு உலமா சபை நிதி உதவி வழங்கியதாகவும் அப்பட்டமான பொய் என்றே முஸ்லிம்கள் நம்பும்போது, உலமா சபையோ வாய் மூடி மௌனம் காக்க வேண்டுமா?

முஸ்லிம்களுக்கே தேவையில்லாத ஐ.எஸ் இனவாதிகளுக்கே தேவைப் பட்டிருப்பதாக நாம் நம்புகிறோம். ஆயுதம் விற்று பணம் சம்பாதித்தார்கள், ஆட்களையும் வழங்கியிருக்கலாம் என்பதே எமது சந்தேகம். இந்த நிலையில் அபூ சைலான் குடும்பத்திற்கு யார் நிதி உதவி அளித்திருப்பார்கள்? தாம் செய்யும் துர் செயல்களை, மற்றவர் தலையில் போடுவது நயவஞ்சகர்களின் வழக்கம். அதுதான் இங்கே நடக்கிறதா?

இவ்வாறான ஒரு நிலையில் மதிப்பிற்குரிய உலமா சபை ஏன் மௌனம் காக்க வேண்டும். நல்லாட்சி அரசொன்று சிறுபான்மை பங்களிப்போடு உருவாகியிருக்கும் இத்தருணத்தில் பொய்யர்களுக்கெதிராக நீதி உரைக்க உலமா சபை தயங்குவதானது முஸ்லிம் சமூகத்திற்கு சாபக்கேடாகும். மௌனம் காத்தல் என்பது இதுதான் முதல் தடவையல்ல. முஸ்லிம்களின் பிரச்சினை என்று வந்தாலும் இதே உத்திதான் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு தஃவா இயக்கம்கூட மௌனம் காத்தல் உத்தியைப் பயன்படுத்தி இஸ்லாத்தின்பால் உள்ளதுபோல அநாகரிக பழக்க வழக்கங்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். இது ஏன் என்று கேட்டால் அரைவேர்க்காட்டு பதில் சொல்வார்கள். அதற்கும் மேல் கேட்டால் மௌனம் சாதிப்பார்கள். இன்று சிலர் பள்ளிவாசல்களில் குர்ஆன் ஓதும் நடைமுறையை அவதானித்தால் தலைகளில் போடும் தொப்பிகளைப் பார்த்தால் சில வேளை தெரிந்து கொள்ள கூடியதாய் இருக்கும்.

இப்படியாக மௌனம் நம் சமூகத் [illegible] பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முஸ்லிம்களுக்கு என்று இருக்கின்ற முக்கியமான இரண்டு சபைகள்தான் உலமா சபையும் வக்பு சபையும். 1960களில் வக்பு சபைக்கு நான் ஒரு முறைப்பாடு கொடுத்தபோது, உடன் விசாரித்து தீர்வு தந்தார்கள். இன்று அந்த பள்ளிவாசல்கள் நல்ல நிலையில் இயங்குகின்றது.

ஆனால், இன்று அப்படியல்ல. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன் பெரிய பள்ளிவாசல் (வெலிகம) ஒன்றின் மோசமான சூழல் பற்றி ஒரு முறைப்பாடு அனுப்பினேன். இரண்டு சபைகளிலிருந்தும் எந்தப் பதிலும் இல்லை. இவர்கள் மனம் வைத்து லேசாகவும் விசாரித்துப் பார்த்து, மனித உயிர்களுக்கு ஊறுவிளைவிக்கும் தொழில் சூழலை அகற்ற உதவியிருக்கலாம். கடலில் போட்ட கல்லுபோல இந்த சபையினர் மௌனம் காக்கத் தலைப்பட்டு விட்டனர். முஸ்லிம்களுக்கு முஸ்லிம்களாகவே ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளை கண்டுகொள்ளாத இந்த சபையினர் முஸ்லிம்களின் முதுகில் பயணம் செய்ய நினைப்பது சரியாகுமா?

நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் செயற்பாடுகள் பற்றி உபதேசம் பண்ணும் எம்மவர்கள், சமூகத் தீமைகளைக் கண்டால் கண்களை மூடிக்கொள்வதேன்? கடைசியாகப் படித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரூக் அவர்களின் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது சரியென்றே விளங்குகிறது.

''தம்மை மற்றவர்கள் தமது தேவைக்கேற்ப கையாள உலமா சபை விரும்பியோ விரும்பாமலோ, அல்லது தெரிந்தோ தெரியாமலோ இடமளிக்கிறது. இதனால் முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, முஸ்லிம் அல்லாத அரசியல் வாதிகள் கூட தமது சொந்தத் தேவைகளை உடன் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.''

''ஹலால் சான்றிதழ் விவகாரத்தில், சரியான விளக்கம் அளிக்க உலமா சபை தவறி விட்டது. இதனால் இனவாதிகள் சமூகத்தைச் சீண்டிப் பார்க்கும் வழி மிகைப்படுத்தப்பட்டு விட்டது'' என்ற கருத்துக்கள் சிந்திக்கத்தக்கவை.

எனவே உலமா சபையும் வக்பு சபையும் அரசியல்வாதிகளின் நலன் பேணுகிறதா? அன்றி முஸ்லிம் சமூகத்தின் நலன் பேணுகிறதா? என்பது குறித்து ஆராய்ந்து அறிய வேண்டிய விடயமாகும். பள்ளிவாசல்கள் சீரானால்தான், முஸ்லிம் சமூகம் சீராகும். பள்ளிகள் தோறும், மக்தப் வைத்து சம்பாதித்தாலோ, ஊறு விளைவிக்கும் வியாபார நிலையங்களை நிறுவுவதாலோ, சமூகத்தை சீர்படுத்த முடியாது. மாறாக ஒழுக்கக் கேடுகளே மிஞ்சும்.

முஸ்லிம்கள் செறிந்து வாழாத ஊர்களில் உள்ள உலமா சபைக் கிளைகளை புதியவர்களுக்கு இடமளிக்கும் வகையில் மௌலவிமார்கள் நியமிக்கப்படுவதும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழ்ஹிய்யா கொடுப்பவர்கள் முடியைக் களையலாமா?

முஹம்மத் பகீஹுத்தீன்

துல்ஹஜ் மாதம் 10ம் நாளாகிய பெருநாள் அன்று காலை பெருநாள் தொழுகை முடிந்ததிலிருந்து துல்ஹஜ் 13ம் நாள் சூரியன் மறைவதற்குள் இறை திருப்தியை நாடி தியாக உணர்வோடு ஆடு, மாடு, ஒட்டகங்களை அறுத்து பலியிடுவதற்கு 'குர்பானி' அல்லது உழ்ஹிய்யா எனப்படும். இது ஒரு வணக்கமாகும். இதனை நிறைவேற்றுவது கட்டாயமான சுன்னத் என்பதே பெரும்பான்மை அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

உழ்ஹிய்யா கொடுப்பது ஏன்?

இறைபயம் எனும் தக்வாவை பெறுவது உழ்ஹிய்யாவின் பிரதான இலக்காகும். அதாவது இறைவனின் கண்காணிப்பில் சதாவும் இருப்பதாக உணர்வதும், எந்த நிலையிலும் அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வோடு வாழ்வதும் தக்வாவாகும். அந்த மனோ நிலையை வளர்ப்பது உழ்ஹிய்யாவின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும்.

அவ்வாறு இப்ராஹீம் (அலை) அவர்களது தியாக வாழ்வை நினைவுகூர்வதும், அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து நற்கூலியை பெறுவதும், உள்ளத்தில் உள்ள கஞ்சத்தனத்தை அகற்றுவதற்கு பயிற்சி எடுப்பதும், பெருநாள் தினங்களில் எல்லோரும் பசியாறி சந்தோசமாக வாழ்வதற்கு வழியமைப்பதும் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான ஏனைய நோக்கங்களாகும்.

உழ்ஹிய்யா கொடுப்பதற்கு நாடிய ஒருவர் துல் ஹஜ் மாதம் முதல் தினத்திலிருந்து உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் வரை முடிகளை நீக்காமல், நகங்களை களையாமல் இருப்பது சுன்னத் ஆகும். ''உங்களில் உழ்ஹிய்யா கொடுக்க நாட்டமுள்ள ஒருவர் துல்ஹஜ் மாதத்திற்குரிய பிறையை கண்டுவிட்டால் அவர் தனது முடி, நகங்களை களைவதை விட்டும் தன்னை தடுத்துக் கொள்ளட்டும் என நபி ஸல் அவர்கள் கூறியதாக உம்மு ஸலமா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம் முஸ்லிம்)

மேற் குறித்த நபி மொழியை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்ற பின்புலத்தை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த ஹதீஸ் குறித்து இமாம்கள் புரிந்து கொண்ட முறையை பார்க்கும் போது மூன்று கருத்துக்களை காண முடிகிறது.

1) குர்பான் கொடுக்க நாடியவர் அதை கொடுக்கும் வரை முடிகளையும், நகங்களையும் களைவது ஹராம். இந்த கருத்தை இமாம் அஹ்மத், ஸஈத் பின் முஸய்யப், இஸ்ஹாக் போன்ற புகஹாக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2) முடி மற்றும் நகம் களைவது ஹராம் அல்ல. ஆனால் அது மக்ரூஹ். அதாவது விரும்பத்தகாத ஒரு செயல் என்ற கருத்தினை இமாம் ஷாபி அவர்கள் கூறியுள்ளார்கள். இமாம் அஹ்மத் ஹராம் என்ற கருத்தை கூறியிருந்தாலும் அவருடைய இன்னொரு கருத்து மக்ரூஹ் என்பதாகும். இவ்வாறே இமாம் மாலிக் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

3) ஹராமும் அல்ல மக்ரூஹும் அல்ல. குர்பான் கொடுக்க நாடியவர் சாதாரண ஒருவரைப் போல் உடலுறவு கொள்ளலாம், முடி வெட்டலாம், நகங்களை களையலாம். இது இமாம் அபூ ஹனீபாவின் கருத்தாகும்.

இந்த கருத்து முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணம் என்ன?

ஏற்கனவே குர்பானி கொடுப்பவர் பேண வேண்டிய விடயங்களை அறிவித்த உம்மு ஸலமா (ரழி) அவர்களின் ஹதீஸுக்கு மாற்றமாக ஆயிஷா (ரழி) அவர்கள் பின் வருமாறு அறிவித்துள்ளார்கள்.

''நபியவர்கள் குர்பான் கொடுப்பதற்காக தெரிவு செய்த பிராணிக்காக அதன் கழுத்தில் அடையாளமாக போடும் கயிற்றை நான் தான் எனது கைகளால் தயார் செய்து கொடுப்பேன். அதனை ரஸூல் (ஸல்) அவர்கள் குர்பானுக்கு அனுப்பி வைப்பார்கள். அந்தக் காலப்பகுதியில் இஹ்ராம் தரித்த ஒருவர் பேண வேண்டிய எந்த விடயத்தையும் இறைதூதர் (ஸல்) பேணுவதில்லை.'' (ஆதாரம் புகாரி முஸ்லிம்.)

இந்த ஹதீஸின் படி குர்பான் கொடுப்பவர் முடி, நகம் களையலாம். உடலுறவு கொள்ளலாம். ஹஜ்ஜுக்காகவோ உம்ராவுக்காகவோ இஹ்ராம் கட்டியவர் எதனை செய்யக் கூடாதோ அந்த விடயங்களை உழ்ஹிய்யா கொடுப்பவரோ அவரது குடும்பமோ பின்பற்ற தேவையில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

உம்மு ஸலமா (ரழி) அறிவிக்கும் ஹதீஸை விட ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை மிகவும் பலமானது என்றும், உம்மு ஸலமா (ரழி) அவர்களின் ஹதீஸ் மௌகூப் ஆனது என்றும் - அதாவது அது நபிகளாரின் கூற்றல்ல அவருடைய மனைவியான உம்மு ஸலமாவின் செய்தி எனவும் ஹதீஸ் கலை வல்லுனர்கள் அபிப்பிராயப்பட்டுள்ளனர்.

எனவேதான் இமாம்கள் இது குறித்து வித்தியாசமான பத்வாக்களை கொடுத்துள்ளனர். நிலைமை இப்படி இருக்கும்போது குர்பான் கொடுக்க நிய்யத் வைத்துள்ள ஒருவர் முடிகளைக் களைவது பற்றியோ நகங்களை அகற்றுவது பற்றியோ அவ்வளவு அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

குர்பான் கொடுக்க நாடிய ஒருவருக்கு இது ஒரு விரும்பத்தக்க செயல். அவ்வளவுதான். விரும்பினால் செய்யலாம் விரும்பினால் விட்டு விடலாம். உழ்ஹிய்யா என்ற வணக்கத்தில் இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. உழ்ஹிய்யா எனும் சுன்னத்தான அமல் செய்ய நாடிய ஒருவர் ஹராமான பாவத்துக்கு ஆளாகும் படி சுன்னா வழிவகுக்காது என்பதையும் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஹஜ்ஜுப் பெருநாள் என்பது துல் ஹஜ் பத்தாவது தினம் என்பதுடன் சுருங்கி விடுவதில்லை. அதனைத் தொடர்ந்து வரும் மூன்று நாட்களும் கொண்டாடி மகிழ்வதற்கான தினங்களே. அதனால்தான் ''அய்யாமுத் தஷ்ரீக்'' எனும் அந்த மூன்று நாட்களும் நோன்பு பிடிப்பது ஹராம் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

அவை உண்டு களித்து மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டிய நாட்களே. அந்த நாட்களில் ஏழை எளியவர்கள், உற்றார் சுற்றத்தினர், அண்டை அயலவர்கள் யாவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற பிரதான நோக்கில் தான் உழ்ஹியா வணக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாறாக முடிகளைவது குறித்து சர்ச்சைப்பட்டுக் கொள்வதற்கு அல்ல.

இஸ்லாம் கூறும் வழிகாட்டல்களைப் பேணி உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவோம்

உழ்ஹிய்யா என்பது இஸ்லாத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வணக்கமாகும். அது மிக முக்கியமான ஒரு சுன்னத்தாகும். அதனை நிறைவேற்றுபவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

இஸ்லாம் எல்லா உயிர்களையும் மதிக்கின்றது. அவைகளுக்கு நோவினை செய்வதைத் தடுக்கின்றது ஜீவ காருண்யத்தை ஏவுகிறது. ஒரு மிருகத்திற்கு உணவு கொடுக்காது சிரமப்படுத்திய மனிதரைப் பார்த்து நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாய் பேச முடியாத இப்பிராணியின் விடயத்தில் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள் என எச்சரிக்கையும் செய்துள்ளார்கள்.

எனவே, உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் ஒருவர் உழ்ஹிய்யாவுக்கான பிராணிகள் மீது கருணையோடு நடந்துகொள்ள வேண்டும். இவ்வணக்கத்தை இஸ்லாம் கூறும் எல்லாவித நெறிமுறைகளையும் பேணிச் செய்வது கடமையாகும். அப்பொழுது தான் உழ்ஹிய்யாவின் சிறப்புக்களையும் அடைந்து கொள்ள முடியும்.

அல்லாஹுதஆலா திருமறையில் ''உங்களுடைய உழ்ஹிய்யாவின் மாமிசங்களும் இரத்தங்களும் அல்லாஹ்வைப் போய் சேருவதில்லை. மாறாக உங்களின் இறையச்சமே அவனை அடைகின்றது.'' (22:37) என்று குறிப்பிட்டுள்ளான். இவ்வணக்கத்தை நிறைவேற்றும் பொழுது பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்:

1. மிருகங்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் எவ்வித நோவினையும் ஏற்படாது பார்த்துக் கொள்ளவேண்டும்.
2. உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை அறுக்கும் வரை பிராணிகளுக்கான தீனி கொடுக்கப்பட வேண்டும்.
3. உழ்ஹிய்யாவுக்கான பிராணியின் முன்னிலையில் ஏனைய பிராணிகளை அறுப்பது தவிர்க்கப்பட வேண்டும்.
4. அறுப்பதற்காப் பயன்படுத்தும் கத்தியை நன்றாகத் தீட்டி கூர்மையாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.
5. குர்பானி நிறைவேற்றப்படும் இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதோடு, அறுவைப் பிராணியின் எலும்பு, இரத்தம் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் அனைத்தையும் புதைத்து விடவேண்டும்.
6. அறுவைக்காகப் பயன்படுத்திய இடத்திலும் அதன் கழிவுப் பொருட்களையும் புதைத்த இடத்திலும் கிருமி நாசினிகளைத் தெளித்து சுகாதாரத்திற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.
7. நம் நாட்டில் அறுவைக்கென்று ஒரு சட்டம் உள்ளது. அச்சட்டத்தை இந்நாட்டு பிரஜைகள் என்ற வகையில் நாம் கவனத்திற்கொள்ளல் வேண்டும். (மிருகத்தின் உரிமைக்கான சான்றிதழ், மாட்டு விபரச் சீட்டு, சுகாதார அத்தாட்சிப் பத்திரம், மிருகங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்களை முன்கூட்டியே தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும்)
8. அனுமதியின்றி உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை வண்டிகளில் ஏற்றி வருவதையும் அனுமதி பெற்றதை விடவும் கூடுதலான எண்ணிக்கையில் எடுத்து வருவதையும் முற்றிலும் தவிர்ந்து கொள்ளவேண்டும்.
9. பல்லினங்களோடு வாழும் நாம் பிற சமூகத்தவர்கள் வேதனைப்படும் வகையிலோ அல்லது அவர்களுடைய உணர்வு தூண்டப்படும் வகையிலோ நடந்துகொள்ளக் கூடாது.
10. போயா தினத்தன்று அறுப்பு செய்வதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளுக்கு ஆளாகுவதை விட்டும் தவிர்ந்துகொள்ள ஏனைய நாட்களை இதற்காக பயன்படுத்த வேண்டும்.
11. உழ்ஹிய்யா நிறைவேற்றப்படும் படங்களை அல்லது வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
12. உழ்ஹிய்யாவை நிறைவேற்ற விரும்புவோர் அப்பிரதேச பள்ளிவாசல்கள் அல்லது பள்ளிவாசல்கள் சம்மேளனத்தோடு தொடர்பு கொண்டு கூட்டாக தம் கடமையை நிறைவேற்றுவது சிறப்புடையது.

பள்ளிவாசல் இமாம்கள், கதீப்கள் உழ்ஹிய்யாவின் சிறப்பையும், அவசியத்தையும் பற்றிப் பேசுவதோடு அதன் சட்ட திட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் குறிப்பாக மிருக அறுப்பை விரும்பாத பிற மத சகோதரர்கள் வாழுகின்ற சூழலில் அவர்களின் உணர்வுகள் பாதிக்கப்படாத வண்ணம் முறையாக இக்கடமையை நிறைவேற்றுவது பற்றியும் முஸ்லிம்களுக்கு கட்டாயம் தெளிவுபடுத்த வேண்டும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அன்பாகக் கேட்டுக்கொள்கிறது.

அஷ்-ஷைக் எம். எம். ஏ. முபாறக்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

எல்லை நிர்ணயம்... (01ம் பக்கத் தொடர்)

செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண முதலமைச்சர் செயலகம், உள்ளூர் அதிகாரசபை, கிராம சேவகர் பிரிவு போன்றவைகளில் பதிவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வாழும் மன்னார் மக்களில் பெரும்பாலானோர் இதுவரை வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களை பதியவில்லை என்று குறிப்பிட்ட அவர் அரசின் சலுகைகளைப் பெறவேனும் வாக்காளர் இடாப்பில் பெயர் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லாததனால் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கொலன்னாவை பிரதேச முஸ்லிம்கள் பலர் அரச சலுகைகளுக்கு விண்ணப்பிக்க முடியாமல் போன சந்தர்ப்பங்களும் அண்மைக்காலங்களில் நடந்துள்ளன.

· eservices.elections.gov.lk/myVoterRegistrationDraft.aspx எனும் இணையத் தளத்துக்குச் சென்று தேசிய அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிட்டு உங்கள் வாக்குரிமையை பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதுடன் தகவல்களையும் சரிபார்க்குமாறும் இதன்போது அவர் அறிவுறுத்தினார்.

இதில் உங்களின் பெயர், விபரங்கள் ஏதும் இல்லாவிட்டால் கடிதம் ஒன்றினூடாகவோ அல்லது தபால் அட்டை ஊடாகவோ கூட எமக்கு தெரியப்படுத்த முடியும் என்பதோடு, தாமும் இதுகுறித்து துரித நடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் வாக்களிக்க வசதிகள் செய்வது குறித்த தேர்தல் செயலகத்தின் முன்னெடுப்புக்கள் பற்றி ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர், 'உள்நாட்டில் உள்ளவர்களையே முழுமையாக உள்வாங்கி தேர்தலை நடாத்த இன்னும் காலம் எடுக்கின்ற வேளையில் வெளிநாட்டில் இருப்போர்க்கான வாக்களிப்பு வசதிகளை ஸ்மார்ட் மொபைல் மூலமோ, தூதுவராலயங்கள் மூலமோ மேற்கொள்வது இப்போது சாத்தியமற்றது' என்று கூறினார்.

மூனின் காலம்... (01ம் பக்கத் தொடர்)

ஒட்டுமொத்த முஸ்லிம் இனமும் அங்கிருந்து அழித்து ஒழிக்கப்பட்டது. இனிப் பிறக்கும் குழந்தையும் முஸ்லிம்களாகப் பிறக்கக் கூடாது என்பதற்காக கற்பழிப்பு முகாம்கள் அமைத்து முஸ்லிம் பெண்கள் சேர்பிய இராணுவத்தின் குழந்தைகளைச் சுமக்கச் செய்யப்பட்டார்கள். ஒரு இனத்தையே குழி தோண்டிப் புதைத்த இந்தச் சம்பவங்களை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, இப்பொழுது நாங்கள் அதற்குப் பச்சாதாபப்படுகிறோம் என்று வாய் கூசாமல் சொல்லும் அளவுக்குத் தான் ஐநா மனித உயிர்களுக்குப் பெறுமானம் வகுத்திருக்கிறது என்பது வேதனையளிக்கிறது.

நீதி தேடி ஐநாவிடம் செல்லும் அநியாய மிழைக்கப்பட்ட மக்கள் ஐநாவின் இது போன்ற அணுகுமுறைகளால் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

விமான நிலையத்தில்... (01ம் பக்கத் தொடர்)

மஹிந்தரின் வெளிநாட்டுப் பயணங்களின் போதும் வெளி நாடுகளில் இருந்து திரும்பி வரும் போதும் அவரது பயணப் பொதிகள் எதுவும் விமான நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை எனக் குறிப்பிட்டு சிவில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடொன்றை முன்வைத்த போதும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் குடும்பத்தினர் பலரும் நிதி மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைகள் நடைபெறும் வேளையில், எந்தவிதப் பரிசோதனைகளும் இல்லாமல் மஹிந்தரை வெளிநாடுகளுக்குச் செல்ல விடுவது நாட்டுக்கு மோசமான முன் மாதிரிகளை வழங்கி வருவதாகவும் அவர் [illegible]

தாஜுதீனின்... (01ம் பக்கத் தொடர்)

வசதிகள் உண்டென சிபாரிசு செய்யப்பட்டதன் பேரில் இந்த வீடியோ பதிவுகள் கனடாவுக்கு அனுப்பப்பட்டன. தற்பொழுது இந்த வீடியோ பதிவுகளில் காட்சிகள் (Resolution) தெளிவாக இல்லை என கனேடிய நிறுவனத்தின் கற்கைநெறிகள் தலைவர் டேவிட் மகீ கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து சென்ற இரண்டு பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனையின் பின்னர், மூலப்பிரதியில் இருந்து பிரதி எடுக்கும் போது தேவையான சில பகுதிகள் அழிந்திருக்கலாம் எனவும் அந்த அறிக்கை அனுமானம் தெரிவித்துள்ளது.

சீசீடீவி பகுதிகள் அடங்கிய இறுவட்டு உடனடியாக மேலதிக ஆய்வுக்காக வெளி நாடொன்றுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட போதும் மாதக் கணக்கில் அது நீதிமன்றப் பெட்டகத்தில் தேங்க விடப்பட்டிருந்தது.

இதேவேளை விசாரணைக்குத் தடையாக அமையும் வகையில் காணாமலாக்கப்பட்ட தாஜுதீனின் உடற்பாகங்கள் பிரதான நீதிமன்ற வைத்தியர் பேராசிரியர் ஆனந்த சமரசேகரவினால் லொறி ஒன்றில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டதாக சிரேஷ்ட அரச வழக்கறிஞர் டிலான் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்தரின்... (01ம் பக்கத் தொடர்)

நாங்கள் பாதுகாப்பு வழங்குவோம் எனத் தெரிவித்திருந்தார். மஹிந்தரின் வீராப்புகளுக்கு பாதுகாப்பு வழங்கப் போய் இலங்கையின் நேச நாடு களுடனான உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு வருவது தொடர்பில் இலங்கையின் உயர் மட்டங்கள் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினை வருமெனத் தெரிந்து கொண்டே செல்லுகின்ற மஹிந்தரின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகிழக்கு... (7ம் பக்கத் தொடர்)

அவ்வாறு விண்ணப்பித்தால் அவர்கள் எந்தெந்த பிரதேச செயலக பிரிவுகளுக்குள் வருகிறார்களோ அந்தந்த பிரதேச செயலகங்கள் அவ்விடயங்களை கையாண்டு அவர்களை மீள்குடியேற்றுவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளன. நான் அறிந்த வகையில் வடபுலத்திலிருந்து வெறியேறிச் சென்ற கூடுதலான முஸ்லிம் சகோதரர்கள் வெவ்வேறு இடங்களில் காலூன்றி நிலையூன்றி அவர்களுடைய செயற்பாடுகளை செய்து கொண்டுள்ளார்கள். தழிழர்களைப் போன்றுள்ளது இவ்விடயம்.

தமிழர்கள் வெளிநாடுகளுக்கு சென்று, அங்கு குடியமர்ந்து, தங்களுடைய பிள்ளைகளை அங்கு படிப்பித்து, அந்தச் சூழ்நிலைக்கு அவர்கள் பழகிக் கொண்டார்கள். அது எப்படித்தான் இருந்தாலும் அந்தச் சூழலில் வாழ்வதா இல்லையா என்று அவர்கள சிந்திக்கிறார்கள். அது மாதிரியும் சில முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். முற்றுமுழுதாக அவர்கள் இதற்குத்தான் இங்கு வரவில்லை என நான் சொல்லவில்லை. அப்படியான சில நிலைமைகளும் அவர்களுக்குள்ளது.

இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் காணிகளை வாங்கியிருப்பார்கள் திருமணம் முடித்திருப்பார்கள். வாழ்வாதாரத்தை திடப்படுத்தியிருப்பார்கள். அவர்களுக்கு திடீரென்று இங்கு வருவதில் பிரச்சினை இருக்கும். இங்கு காணியை மாத்திரம் எடுத்து விட்டு வராமல் இருக்கிறதா அல்லது காணியை பெறாமல் இருப்பதா என்பதை அம்மக்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் வடமாகாணத்திலிருந்து சென்ற முஸ்லிம் சகோதரர்கள் திரும்ப வந்து பூர்வீக நிலங்களில் இருப்பதற்கு எந்த விதமான தடைகளும் கிடையாது. தயவு செய்து இதை அரசியலாக்காமல் சரியான நிர்வாக முறையை கையாண்டு வந்திருக்க வேண்டும். தங்களுடைய இடத்திற்கு வருவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதை ஒருவரும் தடுக்க முடியாது.

- **யுத்தத்திற்கு பிந்நிய சூழலில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட தமிழ் முஸ்லிம்களுடைய காணிகள் இன்னும் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை. இதுவிடயம் தொடர்பில் தமிழரசுக்கட்சி எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?**

குறிப்பிட்டளவு காணிகளை அரசாங்கம் வழங்கி வருகிறது. இதில் மற்றுமொரு விடயம் உள்ளது. அதாவது, எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஒன்று மாறிவிட்டது என்பதனால் அந்த அரசாங்கத்தினுடைய நிர்வாகம் தங்கு தடையின்றி நடக்கும், அதன் கொள்கைகள் தங்கு தடையற்றுப் போகும் என்றெல்லாம் கூற முடியாது.

அதுவும் மிக இறுக்கமானதொரு போர் நடைபெற்று முடிந்து வந்ததற்கு பிறகு வந்த இந்த சமாதானத்திலே இந்தப் போர் பிரியர்களாக இருக்கின்ற இராணுவத்தினர் அல்லது இராணுவத்திற்கு ஆதரவாக இருந்தோரே நிர்வாகத்தில் உள்ளார்கள். ஒரு விடயத்தை செய்யும் பொழுது எங்கெல்லாம் நிர்வாக ரீதியாக தடை போட முடியுமோ அங்கெல்லாம் தடைபோடக் கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள்.

இராணுவ அரசாங்கமாக இருந்தால் அந்த அதிகாரிகளையெல்லாம் உடனடியாக, பிடித்து உள்ளே போட்டு விட்டு தண்டனைகளை வழங்கிவிட்டு அரசு நினைத்த படி செய்ய முடியுமானதாக இருக்கும். ஆனால் இப்படியானதொரு ஜனநாயக நாட்டிலே இவ்வாறான விடயங்களை பார்க்கும்பொழுது இதனை கூட்டு எதிர்க்கட்சியோ அல்லது அது போன்று எதிராக செயற்படுகின்றவர்களோ சிங்கள மக்களுக்கு அநியாயம் நடக்கிறது, காட்டிக் கொடுக்க நினைக்கிறார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கின்ற பொழுது, அது அரசாங்கத்திற்கு இன்னொரு பெரிய நெருக்கடியை உண்டாக்கும். நாங்கள் நினைத்துக் கொண்டுள்ள அரசியலமைப்பு தொடர்பான விடயங்களை எல்லாம் முன் கொண்டு செல்ல முடியாமல் இருக்கும்.

ஆனால் அதற்காக நிலத்தை இழந்த மக்கள் தாங்கள் இன்னும் மெத்தனமாக இருப்போம் என கூற முடியாது. அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை கேட்டுக் கொண்டு தான் இருக்க வேண்டும். அதே நேரம் இதை எவ்வாறு நுணுக்கமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதில் எமது தலைமைகள் செயற்பட்டுக் கொண்டுள்ளது.

இதுவொரு கடினமான விடயம். மிகவும் சாத்தியமான விடயமல்ல. அரசாங்கம் நினைத்தவுடனே நாங்கள் நிலத்தை விடுவிக்கிறோம் என்று சொன்னதும் நடந்து விடக்கூடிய விடயமொன்றல்ல.

சம்பூர் விடயத்தை உதாரணமாக எடுப்போம். சம்பூரை முற்று முழுதாக விடுவிக்க வேண்டும் என்று அரசாங்கம் தனது முழுமையான விருப்பத்தை தெரிவித்தது. ஆனால் நடைமுறை ரீதியில் பல்வேறு சிக்கல்கள் வந்தன. வழக்குகள் மற்றும் ஏற்கனவே பிஓசி, பிஐ உடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் என்ற விடயங்கள் பின் தொடர ஆரம்பித்தன.

இந்த விடயங்களையெல்லாம் அந்தந்த வழிமுறைகளுக்கூடாக சென்று தான் தீர்க்க முடியுமானதாக இருந்தது. அரசாங்கம் சம்பூரை விடுவிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த காரணத்தின் விளைவாக மெது மெதுவாக சம்பூரை மீட்க முடியுமாக இருந்தது.

ஆகவே இரண்டு விடயங்கள் உள்ளன. அரசாங்கத்தினுடைய விருப்பங்கள், கடப்பாடுகள் என்கின்ற விடயம் ஒன்று. அதை நடைமுறைப்படுத்த முடியாமல் செய்கின்ற பல்வேறு விதமான நிர்வாகத்தினுடைய மேலாதிக்கம் (Administrating monopoli) என்கின்ற விடயம் அடுத்தது. இவற்றையெல்லாம் தகர்த்துக்கொண்டு தான் அதுபோக வேண்டியுள்ளது. அவசரமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எமது தேவையாக உள்ளது.

ஊர்ஜிதமற்ற... (4ம் பக்கத் தொடர்)

இலங்கையினுள் பிர வேசிக்கலாம். எமது பாரிய அண்டை நாடான இந்தியாவில் நிகழ்ந்தேறிய இரு பயங்கரமான சம்பவங்களை இங்கு நான் குறிப்பிட்டுக் காட்ட முனைகின்றேன்.

மிலேச்சத்தனமானதொரு பயங்கரவாதத் தாக்குதல் 2008 ஆம் ஆண்டு மும்பாய் நகரத் தின் தாஜ் ஹோட்டல் சுற்றுப்புறத்தில் நடத்தப்பட்டது. அமெரிக்காவின் 9/11 இற்கு ஒப்பானதாக இந்தத் தாக்குதல்

இந்தியாவின் 26/11 என அறியப்படுகின்றது. மூன்று நாட்கள் தொடர்ந்த இந்தப் படுகொலைத் தாக்குதலில் 160 பேர் கொல்லப்பட்டதோடு, இந்தியாவின் மிகப்பெரும் நகரமான மும்பாய் நகரின் வர்த்தக நடவடிக்கைகளை மாதக் கணக்கில் முடக்கியிருந்தமையால் இத் தாக்குதல் உலகளாவிய கண்டனத்தைப் பெற்றது.

இந்தப் பயங்கரத் தாக்குதலைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்தது அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்தைச் சேர்ந்த டேவிட் கோல்மன் ஹேட்லி என்பவராவார். இவர் அமெரிக்க அதிகாரத் தரப்புக்களிடம் இந்த விடயங்களை வாக்குமூலமாக அளித்திருந்தார். இந்த நபர் தனது அமெரிக்கத் தாயின் பராமரிப்பில் வளர்க்கப்பட்டவர். இவரது தாயார், கவிஞர் அல்லது இராஜதந்திரி என அறியப்பட்ட பாகிஸ்தானிய நபரொருவருடன் குறுகிய காலம் திருமண வாழ்வில் ஈடுபட்டு பின்னர் விவாகரத்துப் பெற்றிருந்தார்.

இந்தத் தாஜ் ஹோட்டல் பயங்கரவாதத் தாக்குதலைத் திட்டமிட்டவர் டேவிட் கோல்மன் ஹேட்லி என்பவராவார். இந்த நோக்கத்துக்காக கண்டு பிடிக்க முடியாத வகையில் இவர் இந்தியாவுக்கு ஏழு தடவைகள் பயணித்துள்ளார். அமெரிக்க நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இவர், இந்தியாவின் மூன்று நாள் பயங்கரவாதத் தாக்குதலுடனான தனது தொடர்பு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தற்போது அதனை அனுபவித்து வருகின்றார்.

இந்த மும்பாய்த் தாக்குதலை இங்கு விபரிப்பதன் மூலம் நான் வலியுறுத்த விரும்பும் விடயம், எமது நாட்டில் இவ்வாறான தாக்குதல்களைத் தவிர்க்க வேண்டுமானால், சாத்தியமான வெளியுலக பயங்கரவாத முகவர்களின் ஊடுருவல் குறித்து எமது எல்லைக் கட்டுப்பாடு எப்போதும் முன்னெச்சரிக்கை நிலையில் இருக்க வேண்டும் என்பதாகும். சர்வதேச, இன மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட கண்காணிப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். எமது நாட்டின் சகல தரப்பு மக்களுடைய கூட்டுறவு இந்த விடயத்தில் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

ஏதாவதொரு விடயம் நடக்கப் போகின்றது என்றோ அல்லது அவ்வாறான அறிவு எனக்கு உள்ளதென்றோ நான் இங்கு கூற முனையவில்லை. நான் சொல்வதெல்லாம் நமது பிராந்தியத்தில் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. எனவே இங்கும் அவ்வாறானதொரு விடயம் நடக்க முடியும் என்பதே ஆகும். இவ்வாறான விடயங்களைக் கண்டு பிடிக்கப் பயன்படுத்தப்படும் பொறிமுறை உலகளாவிய ரீதியிலான முறையில் அமைய வேண்டும்.

இந்தப் பொறிமுறை வெறுமனே இனம் மற்றும் மதம் சார்ந்ததாக இருக்கக் கூடாது. இலங்கை முஸ்லிம்களாகிய நாம் இவற்றைக் கையாளும் அதிகாரத் தரப்புக்களுடன் 'வருமுன் காத்தல்' எனும் அடிப்படையிலான உறவைக் கொண்டிருக்க வேண்டும். இங்கு உருவாக்கப்பட வேண்டிய பொறிமுறை இவ்வாறான ஒரு வகிபாகம் எமது சமூகத்தில் முதலில் பேணப்பட்ட பின்னர், அதிகாரத் தரப்புக்களுடன் அது குறித்த கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் படலாம்.

அடுத்ததாக, நான் உங்களுடன் பகிர விரும்பும் சம்பவம் 2008 ஆம் ஆண்டு இந்தியாவின் அஹமதாபாத் நகரில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவமாகும். இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத் நகரில் 21 இடங்களில் குண்டுகள் வைக்கப்பட்டன. இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரி இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பிடமிருந்து தாம் மின்னஞ்சல்களைப் பெற்றதாக அதிகமான தொலைக்காட்சி அலைவரிசைகள் கூறியிருந்தன.

இந்த இடத்தில் எமக்குப் பொருத்தமான விடயம் 2008 ஜூலை 29ஆம் திகதியன்று ''அசோஸியேட் பிரஸ்'' என அறியப்படும் பிரபல செய்தி நிறுவனத்தின் அறிக்கையாகும். அந்த அறிக்கையில் இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பினால் உரிமை கோரப்பட்ட சிறிது நேரத்தில் நடக்கவுள்ள தாக்குதல் பற்றிய மின்னஞ்சல் மும்பாய் பிரதேசத்தில் இருந்து இயக்கப்பட்ட கணினி ஒன்றின் மூலம் கென் ஹேய்வூட் என்பவரால் அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

நான் அறிந்த வகையில் அந்தத் தாக்குதல் பற்றிய அபாய முன்னறிவிப்பு மின்னஞ்சலை அனுப்பிய பின்னர் கென் ஹேய்வூட் பற்றிய எந்தவொரு தகவலும் வெளிவராத ஓர் அமைதி நிலை நிலவியது. அவரது முன்னறிவிப்பு மின்னஞ்சல் பயமுறுத்தும் வகையில் உண்மையானதாக மாறியது. அந்தத் தாக்குதல்களில் 56 பேர் கொல்லப்பட்டதோடு 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

யாருக்காக யார் பேசிக்கொண்டிருக்கின்றனர்? இந்த அமெரிக்கப் பிரஜை தான் இந்த இந்திய முஜாஹிதீன் அமைப்பின் சர்வதேசக் குரலா? போன்ற வியப்பான கேள்விகள் எம்முன் எழுகின்றன. கென் ஹேய்வூட் அமெரிக்காவின் ஏதோ ஒரு பகுதியில் சுதந்திரமாக வாழ்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உளவுத்துறையைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான சம்பவம் தவறாகக் கையாளப்பட்டது.

உலகின் சகல மூலைகளிலும் நிகழும் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதலுக்கும் உலகளாவிய ரீதியில் பயங்கரவாத அமைப்புக்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அல்-குவைதா மற்றும் ISIS போன்ற அமைப்புக்கள் உரிமை கோருவதை நாம் காண்கின்றோம்.

அதேவேளை, இந்தத் தாக்குதல்களை எதிர்வுகூறும் பெயர் குறிப்பிடப்படாத உளவுத்துறை அமைப்புக்களின் அறிக்கைகளையும் நாம் செவியுறுகின்றோம். சில உளவுத்துறை அமைப்புக்கள் குறித்த பயங்கரவாத அமைப்புக்களுடன் இரகசிய உறவுகளைக் கொண்டுள்ளதைப் போல் இது தோற்றமளிக்கின்றது.

இலங்கை, பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புபட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்களை எமது அதிகாரத் தரப்புக்கள் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளும் போது பயங்கரவாதத்தின் உண்மையான முகம் புலப்படும். வெளிநாடுகளில் எமது இலங்கைப் பிரஜைகள் பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழும் வேளைகளில் எமது புலனாய்வு அதிகாரிகள் குறித்த நாடுகளுக்குப் பிரயாணம் செய்து இந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

எனது உரையை முடிக்கும் முன்னர் அண்மையில் நடைபெற்ற இவ்வாறான ஒரு சம்பவம் இலங்கை அதிகாரிகளால் விசாரணை செய்யப்படாமல் தவறவிடப்பட்டதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 40 வயதுடைய இஸ்ரேலியப் பிரஜை ஒருவர் போலி ஈரான் கடவுச்சீட்டு ஒன்றின் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். ஓர் இஸ்ரேலியப் பிரஜை எதற்காகப் போலி ஈரான் கடவுச் சீட்டில் பயணிக்க வேண்டும் என்ற கேள்வி எவருக்கும் எழக் கூடும் அவருடைய பயணப்பொதியில் அந்த நபரின் சரியான புகைப்படத்துடன் கூடிய வேறொரு பெயரில் பெறப்பட்ட இஸ்ரேலியக் கடவுச்சீட்டு ஒன்றும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. ஏன் அவர் தனது அடையாளத்தை மறைத்து ஈரானியன் என்ற போர்வையில் இங்கு தங்கியிருக்க வேண்டும்? அவர் ஏதாவதோர் அபாயகரமான வேலையைச் செய்து விட்டு வேறொரு நபரின் அடையாளத்துடன் இங்கிருந்து தப்பிக்க முனைந்திருக்கக் கூடும்.

ஈரான் கடவுச்சீட்டின் மூலம் இலங்கைக்குள் பிரவேசிக்க முனைந்த இந்த நபரை எமது குடிவரவு அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இந்த நபர் மும்பாயில் இருந்து வந்திருந்தார். குறித்த நபர் எமது குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் 45ஆம் பிரிவின் பல உப பிரிவுகளின் கீழான பல குற்றங்களைப் புரிந்திருந்தார்.

இவ்வாறான நிலைமைகளில் குற்றவாளிகள் குடிவரவு அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர். அவர் புரிந்த குற்றங்களுக்கு குறைந்தது 1 வருடம் முதல் கூடியது 5 வருடங்கள் வரையான சிறைத்தண்டனையும் அபராதங்களும் விதிக்கப்படலாம். குறித்த நபர் விமான நிலையத்தில் வருடத்தில் 365 நாட்களும் 24 மணி நேர சேவையிலுள்ள புலனாய்வு அதிகாரிகளாலும் குற்றப் புலனாய்வுத் துறையினராலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவரிடமிருந்து பெறுமதியான தகவல்களையும் பெற்றிருக்கலாம். எமது நாட்டுச் சட்டத்தை மீறிய அவர்- அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் - அடுத்த விமானம் மூலம் மும்பாய்க்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த இஸ்ரேலிய நபர் தொடர்பாக நான் எழுப்ப விரும்பும் சங்கடமான வினா என்னவெனில், இந்த நபர் பிரச்சினைகளின்றி இலங்கைக்குள் நுழைந்திருந்தால், குறித்த நபர் பணத்துக்கு ஆசைப்பட்டு சில வெடிபொருட்களை ஏதாவதொரு விகாரையின் அருகில் வெடிக்க வைத்து இலகுவாக அகப்படும் வகையில் ஈரானிய கடவுச் சீட்டையும் அவ்விடத்தில் விட்டுச் சென்றிருந்தால் அது ஒரு சிங்கள முஸ்லிம் கலவரத்துக்கு ஆரம்பமாக அமையாதா? என்பதேயாகும்.

இந்தியாவின் அஹமதாபாத் நகரில் 21 இடங்களில் குண்டு வைத்தமை மற்றும் 2013 ஜூலை 07ஆம் திகதியன்று வட பீகார் மாநிலத்தில் அமைந்துள்ள இந்தியாவின் உலகப் பிரசித்தம் வாய்ந்த புத்தகாயாவின் மகாபோதி விகாரையின் அருகில் குண்டுகள் பொருத்தப்பட்டமை என்பன இவ்வாறான நிகழ்வுகளே. இது மிகவும் சாத்தியமான விடயமே.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் இது நடைபெறுகின்றது. டொலர்கள் மற்றும் வெடிபொருட்களை இலகுவாக அடைவோருக்கு இது கடினமான ஒரு காரியமல்ல. அதனாலேயே அதிகாரத் தரப்புக்கள் மற்றும் நாட்டு மக்களை - குறிப்பாக முஸ்லிம்களை - மிகுந்த அவதானத்துடன் இருக்க வலியுறுத்துகின்றோம்.

தற்செயலாக வெடிபொருட்கள் சட்டமானது பாதுகாப்பு அமைச்சின் அதிகார வரம்பெல்லைக்குள் வருகின்றது. சகல விதமான சாத்தியங்கள் தொடர்பிலும் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். வீட்டுக்குச் சென்றவுடன் நாடு தொடர்பான எமது கடப்பாட்டை மறுப்பவர்களாக நாம் இருக்க முடியாது.

மிக முக்கியமான குறிப்புக்களைச் சாராம்சப்படுத்தித் தெரிவிப்பதற்காக என்னை அனுமதியுங்கள். முதலாவதாக, அநாமதேய ஆதாரமூலங்களுடன் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுபவை உள்ளடங்களாக, பயங்கரவாதத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சகல அறிக்கைகள் குறித்தும் ஆயுதப் படையினரும் பொலிஸாரும் சட்டம் அனுமதியளிக்கின்ற அளவுக்கு பரந்தள விலான புலன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, வெறுமனே சாத்தியமுள்ளதாகக் கருதப் படும் ISIS அமைப்பையோ அல்லது ஏனைய பயங்கரவாத ஊடுருவல் களையோ மாத்திரம் குறிவைத்ததாகப் புலனாய்வுத் தகவல்களை ஒன்றுதிரட்டும் பணி அமையக்கூடாது. மாறாக, டேவிட் எட்லீஸ் மற்றும் கென் ஹேய்வூட்ஸ் போன்றவர்களின் நடவடிக்கைகளையொத்த துணிகர நடவடிக்கைகளை நாட்டுக்குள் மேற்கொள்ளக் கூடிய வெளிநாட்டு முகவர்களையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும்.

மூன்றாவதாக, பெரும்பாலும் ஆயுத உற்பத்தித் துறையினரின் முகவர்கள் போன்ற தன்னல அக்கறைகள் கொண்டோர்களால் உருவாக்கப்படுகின்ற சந்தேகத்திற்கிடமான புலனாய்வு அறிக்கைகளை இனங்காணல்.

நான்காவதாக, தேவையில்லாமல் ஏற்கனவே கொண்டுள்ள அச்சத்தைப் போக்கும் வகையில், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றி பொதுவாக நாடும் - குறிப்பாக முஸ்லிம்களும் - விழிப்புடன் இருப்பதற்கு அவசியமான தேவைப்பாடுகளை அதிகரித்தல்.

ஐந்தாவதாக, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய புலனாய்வுத் தகவல்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் புலன் விசாரணைகளை முன்னெடுத்தல் போன்ற செயற்பாடுகளை வலுப்படுத்தும் பொருட்டு எத்தகைய விடயங்களில் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் சாத்தியமாகும் என்பது குறித்து முஸ்லிம்கள் ஆய்ந்தறிதல்.

ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு எனது இந்த உரையை நிறைவு செய்கின்றேன். அதாவது இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எனது சொந்தக் கருத்துக்களேயன்றி, அவை நான் வகிக்கின்ற பதவியைப் பிரதிபலிப்பவையோ அல்லது பிரதிநித்துவப்படுத்துபவையோ அல்ல. நன்றி.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி	- ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள்	- 4000.00	ஐக்கிய இராச்சியம்	- 5500.00
13 இதழ்கள்	- ரூபா 650.00	தனிப் பிரதி	- ரூபா 100.00	மலேசியா	- 4000.00	அமெரிக்கா	- 6500.00
26 இதழ்கள்	- ரூபா 1300.00	ஒரு வருடம்	- ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம்	- 4000.00	அவுஸ்திரேலியா	- 4700.00
						சீனா	- 4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112691298 People's Bank A/C: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலில் நினைவாற்றல்

வெளிப்படையான நினைவாற்றலை இரண்டு முறையில் வகைப்படுத்தலாம். அதில் கருத்துகள், தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் செயல் படுபவை. Sementic Memory எனப்படும். நமது வாழ்வில் நிகழும் தனித் தனி நிகழ்வுகளின் அடிப்படையில் செயல்படும் நினைவு Episodic Memory எனப்படும்.

மூளையின் சில பகுதிகள் பாதிக்கப்பட்ட நோயாளிகள் நிகழ்வுகளின் அடிப்படையிலான நினைவை (Episodic Memory) இழந்து விடலாம். ஆனால் கருத்து மற்றும் தகவல்சார் நினைவு (Sementic Memory) அவர்களிடம் நீடித்து நிற்கும். இதிலிருந்து இவ்விரு நினைவாற்றல்களும் வேறு பாடானவை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

நான் யார்? நான் எங்கே இருக்கின்றேன் என்ற வகையைச் சார்ந்த நோயாளிகள் தமது பொது அறிவையும் திறன்களையும் மறப்பதில்லை. ஆனால், தமது வாழ்வில் நடைபெற்ற சிறு நிகழ்வுகளைக் கூட நினைவுபடுத்த முடியாத நிலையில் இருப்பர்.

பாடசாலைகளில் கற்பிக்கும் பெரும்பான்மையான தகவல்கள், கருத்துக்கள், எண்ணங்கள் என்பன மாணவனின் செமன்ரிக் நினைவாற்றலிலேயே பதிகின்றது. எனவே ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் மாணவர்களின் கருத்துசார் நினைவாற்றலை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும்.

ஒரு மாணவனின் கருத்துசார் நினைவாற்றலில் பதிவாகும் அடிப்படை அறிவு பல பரிமானங்களில் கூடுகின்றது. புதிய தகவல்களையும் கருத்துக்களையும் அறிமுகப்படுத்தும்போது அம்மாணவனின் அறிவின் அளவும் மொத்த எண்ணிக்கையும் கூடிக் கொண்டே இருக்கின்றது. அவனிடம் உள்ள அறிவுகளுக்கிடையிலான தொடர்புகளின் எண்ணிக்கையும் கூடுகின்றது.

பல்வேறு அறிவுகளின் நிலைத் தன்மை, புரிதலின் அளவு ஆகியவை அதிகரிக்கின்றன.



இத்தகைய கருத்துசார் நினைவாற்றலின் (Sementic Memory) அளவு என்ன என்பதை விஞ்ஞானிகள் இன்னும் ஆராய்ச்சி செய்துகொண்டுதான் இருக்கின்றனர்.

மிஷலேனி எனும் ஆய்வாளர் ஒரு மனிதர் செமன்ரிக் நினைவாற்றலில் ஆகக் குறைந்தது 10 இலட்சம் அறிவுத் துணுக்குகளை நினைவில் வைத்திருக்கலாம் என்கிறார். கற்றலில் தகவல்கள் எவ்வாறு சேமிப்புப் பெட்டகத்தில் ஒழுங்குபடுத்தப் படுகின்றது என்பதைப் பொறுத்தே அதனை மீளப் பெறும் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது.

மாணவர்களின் முன்னறிவோடு (Prior Knowledge) தொடர்புபடுத்தியும் அவர்கள் சந்திக்கப் போகும் சூழலோடு தொடர்புபடுத்தியும் கற்றல் கற்பித்தலில் அந்தத் தகவல்களை மீளப் பெறுவது மிகவும் எளிதானது. இங்கு ஞாபகங்கள் மூளையில்



எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மனித நினைவுகள் எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் அடுக்கப்பட்டிருக்கின்றன. உளவியலாளர்கள் நினைவுகள் ஒழுங்குபடுத்தப்படும் முறையின் புகழ்பெற்ற இரண்டு மாதிரிகளை விரிவாக விளக்கியுள்ளனர். அதில் ஒன்று கருத்துசார் நினைவாற்றல் வலையமைப்புக் கோட்பாடு (Sementic Network Theory). இதன்படி நெருங்கிய தொடர்பு கொண்ட கருத்துக்கள் இணைந்து ஒரு துறையாகவும் மண்டலமாகவும் மாறுகின்றன. உதாரணம் குளித்தல், வேதிவியல், வீட்டு உபகரணங்கள் என சிலவேளை இம்மண்டலம் முற்றிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாகவும் இருக்கலாம்.

ஓர் எல்லை வரை இந்த மண்டலங்களிலுள்ள கருத்துக்கள் ஒன்றோடொன்று இணைந்து கலந்து விடுகின்றன. குளியல் தொட்டி, சவர்க்காரம், வானிஷ். இவ்வாறு ஒன்றுக்கொன்று குறுக்கு மறுக்காக கலந்திருப்பது சிக்கலான கட்டமைப்பு என அழைக்கப்படுகின்றது.

நினைவாற்றல் பற்றிய மிகச் சிறந்த விளக்கமாக இதனைக் கருதலாம்.

கருத்துசார் நினைவாற்றலில் அனுபவங்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன. ஜீன் பியாஜே இதனை திரள்கள் என்கிறார். அதாவது, நுட்பமான கருத்துக்களின் தொகுப்பாக அவை மூளையில் பதிகின்றன. பல்வேறு அனுபவங்களில் மறைந்திருக்கும் பொதுப் பண்புகளையும் அடுக்குகளையும் அவை குறித்து நிற்கின்றன. ஒரு சூழலில் உள்ள ஏதேனுமொன்று கருத்துத் தெளிவைத் தூண்டிவிட்டால் முழுக் கருத்துத் தொகுப்பும் அப்படியே நினைவுக்கு வந்துவிடும். இதனால்தான் கற்பித்தல் பல்வேறு வகையான தொடர்புகளையும் உறவுகளையும் உருவாக்கி மாணவர்களை ஊக்கப்படுத்துவதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் ஆசிரியர்கள் கருத்துசார் நினைவாற்றலை வளர்ப்பதற்கு பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

1. படி நிலையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். (வகைபிரித்தல் - Classification)

2. இடையேயுள்ள தொடர்புகளை முக்கியப்படுத்திக் காட்ட வேண்டும். (Inner Connection)

3. காரண காரிய தொடர்பைக் கண்டுபிடித்துக் கூற வேண்டும். (Causative reasoning)

4. எடுத்துக் காட்டுக்களின் மையக் கோட்பாட்டை வேறுபடுத்திக் காட்ட வேண்டும். (Central Theme)

5. உவமைகளை ஒப்பீடு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். (Comparation)

முஸ்லிம் வைத்தியர்களின் சமூகப் பொறுப்பு

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஏனைய தொழின்மைகள் போன்று மருத்துவத் துறையும் பிரதான இடத்தில் உள்ளது. உயர்ந்த அந்தஸ்தில் வைத்து பார்க்கப்படுகின்ற முதற் தர தொழின்மையாகவும் மருத்துவமே உள்ளது. மருத்துவர்களுக்கான சமூக மதிப்பும் பெறுமானமும் எப்போதும் உயர்ந்த நிலையிலேயே உள்ளது.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் எத்தனை மருத்துவர்கள் உள்ளனர் என்பது பற்றிய துல்லியமான தகவல்கள் எதுவுமில்லை. தொழின்மைசார் முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம் செயல்படுவதுபோல் தொழின்மைசார் முஸ்லிம் வைத்தியர்கள் சங்கம் ஒன்று உருவானதாகத் தெரியவில்லை.

1940களில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப் பட்டது முதல் 2014 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் அரச பல்கலைக்கழகங்களுக்கு மருத்துவர்களாய் உள்ளீர்க்கப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை சுமார் 2000 என மதிப்பிடலாம். ஆயினும், சமீபத்திய போக்குகள் முஸ்லிம் மருத்துவர்களின் எண்ணிக்கை இதை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.

காரணம், ரஷ்யா, பாகிஸ்தான், உக்ரைன், ஜோர்ஜியா, மலேசியா, பங்களாதேஷ், சீனா போன்ற நாடுகளில் மருத்துவம் பயின்று இலங்கை மருத்துவக் கழகத்தின் பரீட்சையில் சித்தியடைந்து இங்குள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் முஸ்லிம் வைத்தியர்களும் உள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகால இடைவெளியில் வெளிநாட்டில் மருத்துவம் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களுள் MBBS பட்டம் பெறும் மருத்துவர்கள் மட்டுமன்றி, பாரம்பரிய, மாற்று மருத்துவங்களைக் கற்று பட்டம் பெற்றவர்களும் உள்ளடங்குகின்றனர். யூனானி, ஹோமியோபதி போன்ற மாற்று மருத்துவங்களை வெளிநாடுகளில் கற்ற முஸ்லிம் மருத்துவர்களும் இதில் உள்ளடங்குவர்.

அரச பல்கலைக்கழகங்களில் MBBS பட்டம் பெறாத மருத்துவத் துறையிலுள்ள பல் வைத்தியம், மிருக வைத்தியம் போன்றவற்றில் பட்டம் பெற்றவர்களும் இங்கு பணியாற்றுகின்றனர். இதேவேளை, ராஜகிரியவில் உள்ள யூனானி மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்று வெளியேறிய நூற்றுக்கணக்கான முஸ்லிம் யூனானி மருத்துவர்களும்

இலங்கையில் மருத்துவர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு நோக்கும்போது மருத்துவத்தின் பல்வேறு பரிமாணங்களிலும் உள்ளூரிலும் வெளியூரிலும் பயின்று தொழில்சார் பணியில் ஈடுபட்டுள்ள கணிசமான முஸ்லிம் வைத்தியர்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் உள்ளமை அவதானிப்புக்குரியது.

''யாரேனும் வைத்தியரல்லாத ஒருவர் தன்னை வைத்தியர் எனக் கூறிக்கொண்டு சிகிச்சையில் ஈடுபட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புக்கு அவரே பொறுப்பாளர் ஆவார்.'' (அபூதாவூத் 4588)

''யார் ஒரு ஆத்மாவை வாழச் செய்வாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் வாழச் செய்தவராவார்.'' (5:33)

மனிதர்களுக்கு நோய் ஏற்படுவது இறைவனின் விதியினால் நிகழ்வது என்பதும், அதற்கு மருந்துகளை உபயோகித்து சிகிச்சை வழங்குவது அதே இறைவனின் இன்னொரு விதி என்பதும் முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இதனால்தான் ஆரம்ப காலம் முதல் முஸ்லிம்கள் மருத்துவத் துறையில் ஈடுபாடு கொண்டனர்.

இடைக்காலத்தில் மருத்துவத் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பு இன்றுவரை போற்றப்படுகின்றது. இறைத் தூதரின் போதனைகளும் வழிகாட்டல்களும் இதற்குத் தூண்டுகோலாய் அமைந்தன. முஸ்லிம்கள் அறிவை காவியவர்கள் என்று மாத்திரம் நாம் எண்ணிவிடக் கூடாது. ரோம, பாரசீக, இந்திய மருத்துவ நூல்களை அறபுமொழிக்கு பெயர்த்தமை மாத்திரமே முஸ்லிம்களின் பங்களிப்பு என்று சிலர் கூறுவர். ஆனால், முஸ்லிம்கள் மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புக்களையும் சிகிச்சை முறைகளையும் அறிமுகம் செய்ததன் மூலம் மருத்துவத்தில் மாபெரும் புரட்சிகர மாற்றங்களை உருவாக்கியவர்கள்.

ரோம, கிரேக்க மருத்துவ பாரம்பரியத்தில் காணப்பட்ட பிழையான அணுகுமுறைகளைச் சுட்டிக்காட்டியவர்கள். வரலாற்றில் முதல் முறையாக மருந்தகங்களை நிறுவியவர்கள். நபிகள் நாயகத்தின் மருத்துவ ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இமாம் இப்னு கையிம் அல் ஜவ்ஸி அவர்கள் தொகுத்து 'அத்திப்புந் நபவி' எனும் பெயரில் ஒரு பெரு நூலாக வெளியிட்டுள்ளார்.

அபூபக்கர் முஹம்மத் இப்னு ஸகரிய்யா அர்ராஸி (865-925) எனப்படும் உலகப் புகழ்பெற்ற மருத்துவ மேதை மேற்கில் ராஸிஸ் என அறியப்பட்டவர். மருத்துவத் துறை வளர்ச்சிக்கு அதி உன்னத பங்களிப்பை ஆற்றியவர் அவர், எழுதிய 200 நூல்களில் 100 நூல்கள் மருத்துவம் பற்றியவை. இன்றைய மருத்துவ உலகம் அவரை (Father of Middle ages medicine) மத்திய கால மருத்துவத்தின் தந்தை என்று சிலாகிக்கின்றது.

அவர் எழுதிய அல் ஜுத்ரி அல் அஸ்பா எனும் நூல், சின்னம்மை, பெரியம்மை குறித்துப் பேசுகின்றது. 36 மொழிகளில் இந்நூல் பெயர்க்கப்பட்டுள்ளதோடு, 50 தடவைகள் பதிப்பிக்கப் பட்டுள்ளன. 20 பாகங்களைக் கொண்ட அல் ஹாவி எனும் மற்றொரு நூல் மருத்துவத்தின் அகராதி என்று போற்றப் படுகின்றது. அது இன்றுவரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பாடநூலாகக் கற்பிக்கப்படுகின்றது.

அதேபோன்று அவரது கிதாபுத் திப், கிதாபுல் அஸ்ரார், கிதாபுல் மன்சூரி என்பனவும் உலகப் புகழ்பெற்றவை. பிரான்சில் உள்ள பாரிஸ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் ராஸியின் உருவப்படம் இன்றுவரை தொங்க விடப்பட்டுள்ளது.

பெண் நோய் மருத்துவம், சத்திர சிகிச்சைகள், மகப்பேற்று மருத்துவம், கண் மருத்துவம் பொன்ற இன்னோரன்ன பரிமாணங்களில் தனது மருத்துவத் துறைப் பங்களிப்பினை அவர் ஆற்றியுள்ளார்.

17 வயதிலேயே மருத்துவத் தொழிலை ஆரம்பித்த இப்னு ஸீனா, நவீன மருத்துவ துறைக்கு ஆற்றிய பங்களிப்பு சிலாகித்துப் பேசப்படுகின்றது. அவர் ஒரு பன்முக ஆளுமை. அவர் எழுதிய 99 நூல்களுள் 17 நூல்கள் மருத்துவம் தொடர்பானவை. அதில் கானூத் திப் எனும் மருத்துவ நூல் Bibile of Medicine எனவும் மருத்துவத் துறையில் ஒரு Master Piece எனவும் கொள்ளப் படுகிறது.

அவிசென்ன என ஐரோப்பாவில் அறிமுகப்பட்ட இப்னு ஸீனா, தொற்று நோய்கள், குழந்தை மருத்துவம், மண்டை நரம்பியல் தொடர்பான 750 இற்கு மேற்பட்ட மருந்துகளை இந்நூலில் விபரிக்கின்றார். நவீன ஐரோப்பிய மருத்துவத் துறை வளர்ச்சிக்கு அவிசென்னாவின் பங்களிப்பு அபரிமிதமானவை.

ஸ்பெய்னில் ஹக்கீம் பரம்பரையைச் சேர்ந்த ஸஹ்ராவி ஈண்டு குறிப்பிடத்தக்க இன்னொருவர். அவர் எழுதிய தஸ்ரீப் எனும் நூல் 30 பாகங்களைக் கொண்டது. அது மனிதனின் உடற் கூற்றியலை விரிவாக ஆராய்கிறது. இவர்கள் மாத்திரமன்றி, இப்னு ருஷ்த், இப்னு நபீஸ் என ஏகப்பட்ட முஸ்லிம் மருத்துவ ஆய்வாளர்கள் கடந்த கால இஸ்லாமிய வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புக்களையும் ஆராய்ச்சிகளையும் முன்வைத்துள்ளனர்.

இடைக்காலத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் முஸ்லிம் மருத்துவப் பாரம்பரியம் எல்லை கடந்து பரவியுள்ளது. அந்த வகையில் இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. கண்டிய ஆட்சிக் காலத்தில் அரண்மனை மருத்துவர்களாகப் பணியாற்றிய முஸ்லிம் வைத்தியர்களுக்கு ஒரு நீண்ட பட்டியல் உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே இலங்கை முஸ்லிம் சமூகத்தில் வைத்தியர்களின் சமூகப் பொறுப்புகளையும் பணிகளையும் குறித்த எமது கவனயீர்ப்பு முக்கியமாகின்றது. ஒரு தொழின்மை என்ற வகையில் முஸ்லிம் வைத்தியர்கள் தொழிற் திறமையோடும் பணிசார் அர்ப்பணிப்போடும் செயலாற்ற வேண்டும். தமது மருத்துவத் துறையில் இற்றைப் படுத்தல் அவசியமானது.

எல்லா அறிவுத் துறைகளும் நாளாந்தம் புதுப் புது வளர்ச்சி நிலைகளைக் காண்பது போல் மருத்துவமும் வேகமான மாற்றங்களைக் கண்டு வருகிறது. இம்மாற்றங்களை உள்வாங்கி, அதற்கேற்ற தொழிற் திறனை வளர்த்துக் கொள்வது வைத்தியர்களின் பிரதான பொறுப்பாகும்.

பிரயோக அறிவியலில் மருத்துவம் போன்று புதிய உள்ளடக்கங்களைப் பெறும் வேறெந்தத் துறையும் இருக்க முடியாது. அந்தளவுக்கு அதன் வீச்சு விரிவடைந்து செல்வதைக் காணலாம். எனவே, முஸ்லிம் வைத்தியனின் முதல் பொறுப்பு தான் சார்ந்திருக்கும் நிபுணத்துவமிக்க துறையில் புதிய உள்ளடக்கங்களை ஈர்த்துக் கொள்வதாகும். அதன் மூலம் நன்கு இற்றைப்படுத்தப்பட்ட தொழில்சார் வைத்தியராக தன்னை அவர் வளர்த்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வினைவலிமை பரிசோதனை

மூன்று வயது முதிர்ந்தவர்கள் தமது ஞாபக சக்தியை பரிசோதிப்பதற்காக வைத்தியரிடம் சென்றனர். நல்ல வேளை அவர்கள் தாம் வைத்தியரிடம் அனுமதி பெற்றதை மறக்கவில்லை.

வைத்தியர் முதலாமவரிடம், ஐந்தினை ஐந்தால் பெருக்கினால் எத்தனை என்றார். அதற்கு முதலாமவர், 191 என்றார். வைத்தியர் கூரையை வெறித்துப் பார்த்துவிட்டு, இரண்டாமவரிடம் அதே கேள்வியை கேட்டார். இரண்டாமவர் புதன்கிழமை என்று பதிலளித்தார்.

மீண்டுமொரு முறை வைத்தியரின் கண்கள் கூரையைப் பார்த்தன. இப்போது மூன்றாமவரிடம், அதே கேள்வியை கேட்டார். அதற்கு அவர் 25 என பதிலளித்தார். ஆம், மிகவும் நன்று. எப்படி கண்டுபிடித்தீர்கள் என்றார்.

அதற்கவர், புதன்கிழமையிலிருந்து 191 ஒன்றை கழித்தேன் என்றார்.

புதிய காலுரை

student @ கேள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

ஜிம் ஒரு வானொலி அறிவிப்பாளர். அவர் மிகவும் பிரபல்யமான அறிவிப்பாளர். அவர் அறிவிப்புக்காக வானொலி கலையகத்துக்கு செல்லும்போது, எப்போதும் மிக நேர்த்தியாக ஆடை அணிந்து, கோர்ட் அணிந்து, கழுத்துப் பட்டி அணிந்தே செல்வதுண்டு. அவரது நண்பர்கள், உன்னை ஒருவரும் வானொலியில் பார்ப்பதில்லை. உனது குரலை மட்டுமே கேட்கின்றனர்.

அவ்வாறிருக்க நீ ஏன் இவ்வாறான ஆடைகளை அணிந்து செல்கின்றாய் என பரிகாசமாய் கேட்பதுண்டு. அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஜிம் அதனை ஒரு நகைச்சுவை போன்று மாற்றி மெதுவாக அவ்விடத்திலிருந்து நழுவி விடுவார்.

ஒரு நாள் ஜிம்மினை ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக அழைத்திருந்தனர். அது மூத்த வானொலி அறிவிப்பாளர்களை கௌரவப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சியாகும். முதல் தடவையாக குரலை மட்டும் கேட்டிருந்த நேயர்கள் தமது அறிவிப்பாளர்களை நேரில் காண்கின்ற ஒரு நிகழ்ச்சி.

நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்படும் நாளில் குறித்த நேரத்தை விட பத்து நிமிடம் தாமதமாகவே ஜிம் வந்து சேர்ந்தார். நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஜிம்மிடம் வந்து, நீங்கள் பத்து நிமிடம் தாமதித்து வந்ததில் எவ்வித பிரச்சினையுமில்லை. ஆனால், எப்போதும் நேரத்திற்கு வருகின்ற நீங்கள் ஏன் இன்று மட்டும் தாமதித்தீர்கள் என்பதை அறிய விரும்புகின்றேன் என்றார்.

ஜிம் அதற்கு இப்படி பதிலளித்தார்: நான் ஆடைகளை அணிந்து தயாரானதன் பின்னர்தான் என்னிடம் புதியதொரு காலுரை இல்லை என்பது ஞாபகம் வந்தது. எனவே, கடைக்குச் சென்று காலுரை ஒன்றை வாங்கி வர தாமதமாகி விட்டது.

ஏன் நீங்கள் புதிய காலுரை அணிய வேண்டும்? காலுரை அணியாது வந்திருந்தால் கூட பிரச்சினையில்லை. ஏனெனில், நாம் உங்களது இடுப்புக்கு மேலேதான் ஒளிப்பதிவு செய்வோம் என்றார் நிகழ்ச்சி தயாரிப்பாளர்.

நான் அனைத்து விடயங்களும் நேர்த்தியாக இருக்க வேண்டும் என விரும்புவன். அப்போதுதான் எனக்கு குறித்த விடயத்தில் எவ்வித தடுமாற்றமும் இல்லாமல் ஈடுபட முடியும். நான் வானொலியில் அறிவிக்கும் போதும் எனது ஆடைகள் மிக நேர்த்தியாக இருக்கும். எனது சட்டைப் பையில் பேனை இருக்கும். இவ்வாறான தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் எனது காலுரை அழுக்காக இருந்தாலோ அல்லது அதில் துளைகள் இருந்தாலோ எனக்கு சங்கடமாக இருக்கும். எனவே தான் நான் காலுரையை மாற்றிக்கொண்டு வந்தேன் என்றார்.

நான் தான் முதலாமவன்

ஒரு மதகுரு தனது 25 வருடகாலத்தை ஒரு தேவாலயத்தில் பணியாற்றிவிட்டு, வேறொரு தேவாலயத்திற்கு செல்லவிருந்தார். அவருக்கான பிரியாவிடை வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஒரு பிரபல்யமான அரசியல்வாதி அழைக்கப்பட்டிருந்தார். எனினும், அவரது வருகை தாமதமடையவே மதகுரு எழுந்து மக்களை விழித்து பேச ஆரம்பித்தார்.

நான் இந்த தேவாலயத்திற்கு வந்தவுடன் சந்தித்த முதலாவது நபர் தனது பாவங்களை சொல்லி, இறைவனிடம் மன்னிப்பு கேட்கச் சொன்ன போது, நான் ஒரு பயங்கரமான இடத்திற்கு வந்துவிட்டேனோ எனப் பயந்துவிட்டேன். என்னிடம் முதலாவது வந்த அந்த மனிதர் சொன்னார். நான் ஒரு தொலைக்காட்சி பெட்டியொன்றை களவெடுத்தேன். என்னை பொலிசார் கைது செய்தனர். அங்கு எனக்கு காவல் இருந்த பொலிஸ் அதிகாரியை கொன்றுவிட்டு தப்பி வந்துவிட்டேன். வீட்டுக்குச் சென்று பெற்றோரின் பணத்தை திருடிக்கொண்டு வேறொரு ஊருக்கு சென்று விட்டேன். நான் செய்யாத பாவங்கள் இல்லை. எனக்காக இறைவனிடம் மன்னிப்பு கேளுங்கள். நான் நன்றாக பயந்துவிட்டேன். அந்த மனிதர் சென்றுவிட்டார். அதன் பிறகு சில நாட்கள் கடந்து செல்கையில் இங்குள்ள மக்கள் எல்லோரும் அவரைப் போன்றவர்கள் அல்லர் என்பதையும் மிகவும் அன்பான மக்கள் என்பதையும் புரிந்துக்கொண்டேன் என்றார்.

அதே நேரம் குறித்த அரசியல்வாதி மண்டபத்திற்குள் நுழைந்தார். மக்கள் அனைவரும் எழுந்து கரகோசம் செய்து வரவேற்றனர். அவரும் தாமதித்து வந்ததால் உடனடியாக உரையாற்ற ஆரம்பித்தார். அவருடைய உரை இப்படி ஆரம்பித்தது.

எனக்கு இந்த மதகுரு எமது தேவாலயத்திற்கு வந்த முதல் நாளை மறக்கவே முடியாது. நான் தான் அவரிடம் முதன் முதல் பாவமன்னிப்பு கேட்கச் சென்றேன் என்பது எனக்கு பெருமிதமாக உள்ளது.

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2016

கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அவர்களின் தலைமையிலும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் அமீர் அலி அவர்களின் வழிகாட்டலின் கீழும் இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் கொழும்பில் இவ்வருடம் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றினை நடத்தவுள்ளது.

முஸ்லிம் படைப்பாளிகளால் ஆக்கப்பட்ட மறைந்திருந்த மற்றும் மறைக்கப்பட்ட பல்வேறு தமிழ் இலக்கியங்கள் குறித்து வெளியுலகு அறிந்து கொள்ளச் செய்யப்பட்ட முதலாவது விழாவுக்கு இந்த வருடத்துடன் 50 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கின்ற நிலையில் 50வது நிறைவு பொன்விழாக் கொண்டாட்டமாகவும் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இரண்டு தினங்கள் நடத்தப்படுவதற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள இந்த மாநாட்டில் ஆய்வரங்குகளுடன், கவியரங்கு உரையரங்கு, படைப்பாளிகளை கௌரவித்தல், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

மாநாட்டு வெளியீடுகள்

மாநாட்டை முன்னிட்டுச் சிறப்பு மலர், ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு ஆகியவற்றுடன் போதிய பொருளாதார ஒத்தாசை கிடைக்குமிடத்து கவிதைத் தொகுதி, சிறுகதைத் தொகுதி மற்றும் பதிப்புக்குப் பொருத்தமென விதந்துரைக்கப்பட்டு - ஆய்வக நிர்வாகத்தால் ஒப்புதல் பெறும் பிரதிகளும் வெளியிடப்படவுள்ளன.

பேராளர்கள்

மாநாட்டில் கலந்து கொள்ள விண்ணப்பிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு படைப்பிலக்கியவாதிகள், ஆய்வாளர்கள், இலக்கிய ஈடுபாடுள்ளோர் மாநாட்டில் பேராளர்களாகக் கலந்து கொள்வார்கள். அந்த வகையில் இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு ராஜ்யம் ஆகிய தேசங்களிலிருந்தும் இம்மாநாட்டில் கட்டுரையாளர்களாகவும் வளவாளர்களாகவும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கைப் பேராளர்கள் தமது விண்ணப்பத்துடன் 1000.00 ரூபாய்கள் செலுத்தி முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும். இலங்கைப் பேராளர்களுக்கு மாநாடு நடைபெறும் இரு தினங்களிலும் மதிய உணவு, காலை -மாலைச் சிற்றுண்டியுடன் தேனீரும் வழங்கப்படும். தங்குமிட ஏற்பாட்டை மாநாட்டுக் குழு பொறுப்பேற்காது.

பேராளர்களாகக் கலந்து கொள்வதற்கு இலக்கியப் படைப்பாளிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும். அதற்கடுத்தே இலக்கிய ஆர்வலர்கள் இடம்பெறுவர். எவ்வாறாயினும் இலங்கைப் பேராளர்கள் தொகை 200 பேருக்கு மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். பார்வையாளர்களாக யாரும் கலந்து கொள்ள முடியும்.

பேராளர் படிவங்களைப் பிராந்திய இணைப்பாளர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் தபால் மூலமும் இணையத் தரவிறக்கம் செய்தும் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிரதேச இணைப்பாளர்களிடம் கையளிக்கவும் தபாலில் அனுப்பவுமான இறுதித் திகதி செப்டம்பர் 30ஆம் திகதியாகும். ஆய்வரங்கக் கட்டுரைகள்

பின்வரும் கட்டுரைத் தலைப்புக்களுக்கான கட்டுரைகளை எதிர்வரும் செப்டம்பர் 30ம் திகதிக்குள் கிடைக்கக் கூடியவாறு Dr, Jinnah Sherifudeen, 16A, School Avenue, Off Station Road, Dehiwala என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கவும். கட்டுரைகளை அனுப்புவோர் தமது முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட மறக்க வேண்டாம். கட்டுரைகள் ஒரு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டுச் சிறந்தவை ஏற்றுக் கொள்ளப்படும்.

01. தற்கால இலக்கியம்
கட்டுரைத் தலைப்புக்கள்.

01. முஸ்லிம் படைப்பாளிகளின் வலைத்தளப் பதிவுகள்.

02. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் கவிதைச் செல்நெறி.

03. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் சிறுகதைச் செல்நெறி.

04. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் நாவல்களும் பேசு பொருளும்.

05. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் இலக்கியக் கட்டுரைகளும் பேசுபொருளும்.

02. இஸ்லாமும் கலைகளும்
கட்டுரைத் தலைப்புக்கள்.

01. இலங்கை முஸ்லிம்களின் இசையும் கலைப் பாரம்பரியமும்.

02. இலங்கையில் அருகி வரும் முஸ்லிம் பாரம்பரியக் கலை வடிவங்கள்

03. இறைத்தூதர் காலத்தில் இசையும் கலையும்.

04. அடிப்படைவாதச் சிந்தனையும் இஸ்லாமிய இசையும்.

05. கஸீதா, புர்தா, தலைப் பாத்திஹா ஆகியவற்றில் இலக்கிய நயம்.

06. இஸ்லாமியர் மத்தியில் இசை பற்றிய சர்ச்சைகள் அடிக்கடி ஏற்படுவதற்கான காரணங்கள்.

03. சினிமா பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்.

03. சினிமா பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்
கட்டுரைத் தலைப்புக்கள்.

01.) சினிமா ரசனை பற்றிய எண்ணக் கரு

02) இஸ்லாமியக் கருத்தியலை முன்கொண்டு செல்ல சினிமா ஊடகத்தின் பங்களிப்பு

03) சினிமா தொடர்பில் இலங்கையில் ஒரு படைப்பாளி எதிர் கொள்ளும் கருத்தியல்சார் பிரச்சினைகள்

04) சினிமா மூலம் இஸ்லாமிய அடையாளங்களைக் கேள்விக்குட்படுத்தல்

05) சினிமா ஊடகத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட இஸ்லாம் பற்றிய பயங்கரவாத மாயை.

06.) மாற்றுச் சினிமாவுக்கான தேவைப்பாடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதைப் பயன்படுத்தலும்.

04. எதிரெழுத்து
கட்டுரைத் தலைப்புக்கள்.

01) முஸ்லிம் படைப்பாளிகளின் எதிரெழுத்தில் தொனிக்கும் வாழ்வியல் பிரச்சினைகள்.

02) முஸ்லிம்களின் எதிர்க்குரல் சர்வதேசத்துக்கு எட்டாமைக்கான காரணிகள்.

03) மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் - சமூக அரசியல் பரிமாணம்.

04) சியோனிஸ சக்திகளுக்கெதிரான இஸ்லாமிய எதிர்ப்பிலக்கியம்.

05. இஸ்லாமிய தீவிரவாதம் - ஓர் ஆய்வு.

05. வாழும் ஆளுமைகள்

கவனத்தைக் கவர்ந்த தற்கால முஸ்லிம் படைப்பாளிகள்.

(ஓர் ஆளுமை மேற்குறித்த 5 சிறு தலைப்புக்களின் கீழ் ஆய்வுக்குட்படத் தப்படல் வேண்டும்)

01) அவர்களது ஆளுமைகளும் தனித்துவமும்.

02) அவர்களது சமூகவியல் பார்வை.

03) அவர்களது எழுத்துக்களில் இலக்கிய நயம்.

04) அவர்களது எழுத்துக்களில் சமூக, இன நல்லுறவு.

05) மக்களின் வாழ்வியலை அவர்கள் பேசும் விதம்.

06. சமூக நல்லிணக்கம்
கட்டுரைத் தலைப்புக்கள்.

01) சமய இலக்கியங்களில் சமூக நல்லிணக்கம்.

02) இன உறவைக் கட்டியெழுப்புவதில் இலக்கியத்தின் பங்களிப்பு.

03) தமிழ் பேசும் மக்கள் - ஓர் இலக்கியப் பார்வை.

04) மலையக இலக்கியப் பரப்பில் முஸ்லிம் படைப்பாளிகளுக்கான அங்கீகாரம்.

05) இஸ்லாமும் இலக்கியமும் - இளந்தலைமுறைப் படைப்பாளிகளின் புரிதலும்.

இணைப்பாளர்கள்

அம்பாறை மாவட்டம்
கவிஞர் சோலைக்கிளி - 075 225 6556
கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ்
கவிஞர் நிந்தவூர் ஷிப்லி - 077 230 1539

மட்டக்களப்பு மாவட்டம்
கவிமணி எம்.எச்.எம். புகாரி - 077 268 6159
கவிஞர் வாழைச்சேனை அமர் - 077 163 3150

திருகோணமலை மாவட்டம்
கவிஞர் ஏ.எம்.எம். அலி - 077 276 5174
கவிஞர் நாஸிக் மஜீத் - 077 767 2383

அனுராதபுர மாவட்டம்
கவிஞர் அன்பு ஜவஹர்ஷா - 071 999 7845
கவிஞர் வஸீம் அக்ரம் - 077 088 8048

புத்தளம் மாவட்டம்
கவிஞர் ஜவாத் மரைக்கார் - 071 424 4387
எம்.ஐ.எம். இன்பாஸ் - 071 209 9370

மலையகம்
எம்.எம். பீர்முகம்மத் - 077 666 1336
கவிஞர் லறீனா அப்துல் ஹக் - 075 293 9716
கவிஞர் லுணுகல ஸ்ரீ - 077 442 5265

தென்மாவட்டங்கள்
கவிஞர் திக்குவல்லை ஸப்வான் - 077 490 3816

வடபுலம்
கவிஞர் மன்னாரான் ஷிஹார் - 077 329 8315

Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org